
Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 24 ரூபா 20.00
දිනමුරසු වාරමලර්
மே. 11 - 17, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 661



## "உதயன்" மீதான தாக்குதல் ஊடக (சு)தந்திரத்துக்கு சவால்!



## சமாதானப் பேச்சுக்கு புதிய அணுகுமுறை தேவை

## கிழக்கில் அவமானப்படும் பெண்களும் அபாண்டமான குற்றச்சாட்டும்!

## கச்சேரிக்குத் தயார்!

## இரவு - போவோம்! இரசிப்போம்!



# ஆன்மீகம்


## இறைவழிபாடும் பக்குவமும்

இறை வழிபாடு செய்வதற்கு முன்பாக அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பூப் பறிப்பது, சந்தனம் அரைப்பது, பூசை அறையைச் சுத்தம் செய்வது, பூசைப் பாத்திரங்களைத் துலக்குவது, நைவேத்தியம் தயாரிப்பது போன்ற செயல்களில் ஈடுபடும்போது மனதில் வேறு சிந்தனைகள் தோன்றா. அற்பத்தனம், கோபம், வெறுப்பு முதலானவை அகன்றுவிடும்.

எப்படியாவது மனதை இறைவன்பால் வைக்க வேண்டும். இடைவிடாத இறை நினைவு மனதில் இருக்க வேண்டும். இறைவன் எனக் கருதி, எதை பக்தியோடு வழிபடுகிறோமோ, இறைவனுடைய காட்சியை அவற்றில் காணலாம். சிவ பூசைகளைச் செய்து ஒருவர் மனப் பக்குவம் அடைந்த பிறகு, பூசைகளில் அதிகமாக ஈடுபடத் தேவையில்லை. அந் நிலையில் மனம் இறைவனிடம் ஒன்றி இறைவனையே நினைத்துக்கொண்டிருக்கும்.

எவரும் உபவாசம் இருந்து உடலை வருத்திக் கஷ்டப்படக்கூடாது. இறைவனிடம் சரண்புகுந்தால் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. கள்ளம், கபடம் அற்ற எளிய சுபாவம் உடையவர்கள் இறைவனை அடைய முடியும்.

-ஜே.கிருஷ்ணா, களுதாவளை.



## இணையற்ற தேவன்!

இறைவழி நடப்பவர்களுக்கு எல்லாம் சாத்தியமாகும். இறைவனை தோத்திரம் செய்யாத உள்ளம் கரடு, முரடான பாதை போன்றது. அந்தப் பாதையில் நடப்பவர்கள் - அத்தகைய உள்ளம் கொண்டவர்கள் - என்றும் நிம்மதியுடன் தமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடரமுடியாது வேதனையும் சோதனையும் மலிந்திருக்கும்.

அகில புவனங்களையும் ஆறு நாட்களில் படைத்து ஏழாம் நாள் இளைப்பாறியவர் கர்த்தர். அத்தகைய மகிமைமிக்க கர்த்தரால் ஆகாத காரியம் என்று ஒன்று உண்டா? அல்லது அவருக்கு ஈடு இணைதான் உண்டா? எல்லாம் வல்லவர் நம் கர்த்தர். கருணையுள்ளம் கொண்டவர். உள்ளம் உருகி வேண்டுதல் செய்வோர்க்கு மனமிரங்கி அருள் பாலிப்பவர். நம் பாவச் சுமைகளை இறக்கி வைத்து புனிதனாக வாழ வழிகாட்டும் புனிதர். அவர் காட்டும் இறைவழி நடப்போம்! இன்னல்கள் களைவோம்! கர்த்தர் என்றும் எம்மைக் காப்பார். அதனால் தான் "நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை; உன்னைக் கை விடுவதும் இல்லை" என்று தேவன் கூறியுள்ளார்.

-செல்வி எஸ்.ரீஷாந்தி, வத்தளை.

## ஈருலக ஈடேற்றம் எளிது!

ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குடிமக்களைப் பார்த்து, "உங்களை அழித்தொழிக்கும் அந்த ஏழு பெரும் பாவங்களைவிட்டும் நீங்கள் விலகி இருங்கள்" என்று கூறினார்கள்.


அப்போது அம்மக்கள் "அல்லாஹ்வின் தூதரே! அந்த ஏழு பெரும் பாவங்களும் எவை எவை" எனக் கேட்டார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் -

"அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதும், சூனியம் செய்வதும், நியாயமின்றி கொல்லக் கூடாது என்று அல்லாஹ் புனிதப்படுத்தியுள்ள உயிர்களைக் கொல்வதும், வட்டி உண்பதும், அனாதைகளின் செல்வத்தை உண்பதும், புனிதப் போரின் போது புறமுதுகு காட்டி ஓடுவதும், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்ட அப்பாவி கற்புள்ள பெண்ணை அவதூறு கூறுவதும்தான் அந்த ஏழு பெரும் பாவங்களும்" என்று பதிலுரை பகிர்ந்தார்கள்.

ஆம், இறை தூதர் கூறிய இந்த ஏழு பெரும் பாவங்களை விட்டும் நாளும் நாம் அவதானமாக இருந்தால் ஈருலக ஈடேற்றம் எளிது.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.658



பரிசுக்குரிய கவிதை

### திருப்தி

யுத்தத்திற்கும்
இயற்கைக்கும்
சிறுவர்கள் மீது
கொள்ளைப் பிரியம்
எனவேதான் அவர்களை
தன்னைப் போல்
அநாதையாக்கி
அழகு பார்க்கிறது...!

-ரி.ஸதீஸ்காந், மட்டக்களப்பு.

### எச்சங்கள்!

பல கோடி உயிர்களை
பலியெடுத்த
யுத்தம் விட்டுச்சென்ற
எச்சங்கள்!

-மீராமுகைதீன் ஹாலீத், ஏறாவூர் - 03ஏ.

### மனிதம்

ஏழ்மையின் பிடியில்
ஏங்கித் தவிக்கும்
ஏழைச் சிறார்கள்
எண்ணுகிறார்கள்
மனிதம் எம்மை
வாழவைக்குமா?
இல்லை
சாகவைக்குமா என்று.

-ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு - 15.

### ஆயுதம் வருகிறது

அங்கே
வண்டியில் வருவது
உயிர் காக்கும்
ஆகாரம் அல்ல
உயிர் போக்கும்
ஆயுதம்.

-ஏ.ஜே.பாத்திமா பஸ்னா, கொடிகாவத்த.

### பிஞ்சுகளே...!

போரினால் நசுக்கப்பட்ட
பிஞ்சுகளே
மிச்ச மீதியிருக்கும்
உயிரை
காப்பாற்றிக்
கொள்வதற்காகவா
இடிபாடுகளுக்கு மத்தியில்
தவிக்கின்றீர்கள்?

-மர்ஸியா நாபிர், பேருவளை.

### குட்டிச்சுவர்

எங்கள் வாழ்க்கை
குட்டிச் சுவராகிப்போனது.
அதற்கு அடையாளமாகத்தான்
ஒரு குட்டிச் சுவருக்கு முன்னால்
இருக்கிறோம் - இருந்தும்
யுத்தமும் - வறுமையும்
மயானம் வரை எங்களைத்
துரத்துமோ என்ற கவலை
எங்களுக்கு.

-பி.முதிடின், கஹட்டகஸ்திகிலிய.

### விருப்பம்

ஆள் கடத்தலாலும்
இனந்தெரியாதத்
தாக்குதல்களாலும்
பாதிப்புற்று
பதறி நிற்கும் மக்கள்!
இப்பொழுது
இரந்து கேட்பது...
சமாதானப் பிச்சையல்ல...
தத்தமது
உடைமைகளுக்கும்
உயிர்களுக்கும்
பாதுகாப்பே!!

-அனீஸா அல்.ஆஸாத், ஏறாவூர் - 06.


### தஞ்சம் கோரி...

இருண்ட
கண்டத்தில்
வாழும்
இவர்களை
எயிட்ஸ்
துரத்துகிறது!
இலங்கையில்
வாழும் எங்களை
யுத்தம்
துரத்துகிறது!
எங்கே போவோம்
அடைக்கலம்
தேடி!

-ஆர்.பிரான்சிஸ், யாழ்ப்பாணம்.




## கவிதைப் போட்டி இல.661



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 16.05.2006.

கவிதைப் போட்டி இல.661
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772,
கொழும்பு.

### வறுமையின் எல்லை!

பட்டினியால் மடிந்த
தேசத்தின் நீண்ட
வறுமையின் எல்லை.
உடம்பிலிருந்து
உயிர் நீங்காமல்
வாழ்வதற்காக
இன்னும் - சுவாசிக்கும்
மனித சீவன்கள்.

-காமீம் செய்னுலாப்தீன், கிண்ணியா - 05.

### போர்

சகோதரப் போர்களின்
கொடுமைக் கனலால்
குட்டிச் சுவராகிப்
போகும்
குடும்பங்கள்
அங்கு மட்டுமல்ல
இங்கும் தான்.

-அ.சந்தியாகோ, கண்டி.

### யதார்த்தம்

போரினால் ஏற்பட்ட
வடு தீரவில்லை
இன்னும்...
அப்படி இருக்கையில்
எங்களையும்
கடத்துகிறார்கள்
போர் புரிய...

-ரிஷாட் மன்சூர், நுவரெலியா.

## உங்கள் பக்கம்

### முரசு செய்திக்குப் பயனளிக்கும் பதில்

"**பொறுப்பற்ற** கிராம சேவகரும் பொதுமக்கள் அவலமும்" என்ற தலைப்பின் கீழ் தங்கள் மேலான பத்திரிகையின் 2006 ஏப்ரல் 20-26ஆம் திகதிய பதிப்பில் 'உங்கள் பக்கம்' பந்தியில் வெளியான முருங்கன்பிட்டி மக்களால் முன்னளிக்கப்பட்ட தகவல் தொடர்பானது.

குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றி இன்றுவரை இப் பிரதேசச் செயலகத்திற்கு எதுவித முறைப்பாடுகளும் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக் கிராமத்திற்கான கிராம அலுவலர் மாவட்டத்திலுள்ள முதுமுறை கூடிய கிராம அலுவலர்களில் ஒருவர். சேவை மனப்பான்மையுடன் பணிபுரிவார் என்பதாலேயே இத்தகைய பெரிய கிராமப் பிரிவுக்கு இணைக்கப்பட்டுள்ளார்.

பொதுப்படையாக் குற்றம் சாட்டும்போது ஆதாரங்களைத் தேடும் நடவடிக்கைகளிலேயே காலம் விரயமாகுமேயன்றி பொருத்தமான நடவடிக்கை எடுக்க இயலாது போகலாம்.

எனவே அடையாள அட்டை விண்ணப்பங்களைக் கையளித்து இதுவரை கிடைக்கப்பெறாதோர் விபரங்களை இப்பணிமனைக்கு முன்னளிக்குமிடத்து, குறித்த கிராம அலுவலருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எவ்வாறாயினும் இவ் விடயம் தொடர்பில் தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அடுத்து, காணி வழங்கல் பற்றிய தெளிவற்ற நிலையில் இக்கடிதம் வரையப்பட்டுள்ளது. காணி வழங்குதல் கிராம அலுவலரின் பொறுப்போ கடமையோ அல்ல. அரச காணி ஒன்றைக் கோரி விண்ணப்பிக்கப்படுகையில் விண்ணப்பதாரிக்கு அத்தகைய அரச காணி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையை உறுதிப்படுத்துவதும், அரச காணிகளை எவரேனும் ஆக்கிரமிக்காது பாதுகாப்பதும் மட்டுமே கிராம அலுவலரது கடமையாகும். அதற்கு மாறாகக் கிராம அலுவலர் எவருக்கேனும் காணி வழங்கினால், அது அவரைத் தண்டனைக்குட்படுத்தக் கூடிய குற்றமாகும். எனவே காணி வழங்கவில்லை எனக் கிராம அலுவலர் மீது குற்றம் காணுதல் தவறானதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் முருங்கன் கிராம அலுவலர் பிரிவில் அரச காணிகள் எவையும் தற்போது பொதுமக்களுக்கு உடனடியாக வழங்கப்படக் கூடிய நிலையில் அடையாளம் காணப்படவில்லை என்பதையும், அவ்விதம் அரச காணிகள் எவையேனும் அடையாளம் காணப்படுமிடத்துக் காணிக் கச்சேரி ஒன்றை நடாத்தி அதன் ஊடாகவே காணி வழங்க முடியுமேயன்றி எழுந்தமானமாக ஒவ்வொருவருக்கும் வழங்க இயலாதென்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இவ் விளக்கத்தைத் தயவு செய்து மக்கள் தெளிவுறும் பொருட்டுப் பிரசுரித்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- ந.திருஞானசம்பந்தர்,
பிரதேசச் செயலாளர், நானாட்டான்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

## உன் வரவு

நீ வருவாய் என உள் வருகைக்காய் வாராவாரம் உனக்காகக் காத்திருப்பேன் புது வசந்தம் நீ வந்தது (தீ)யாய் இருக்கிறது. உன் சே(வகன்)வை புதுப்புது அர்த்தங்கள் திகில் போன்ற செய்திகளைப் பார்த்ததும் மனசெல்லாம் ஆனந்தம் அலை(யாய்) பாயுதே எப்படி உன்னால் மட்டும் எதிரும் புதிருமான தீர்ப்பு(கள்) புலன் விசாரணை(கள்), காதல் கவிதை,, தொட(ரும்)ர் கதைகள் விளையாட்டு என்று அப்பப்பா சொல்லமறந்த கதையா அது. செல்லமே உன் செயல் தித்திக்குதே. ஏழை ஜாதிமுதல், பணக்காரன் வரை ஆதி முதல் அந்தம் இல்லாத சேவையை பார்த்தேன். ரசித்தேன். அத்தோடு பார்த்தாலே பரவசம் அடைகிறேன் உன்வரவால் அரசியல்வாதி முதல் முதல்வன் வரை உன்னை தவிர வேறு யாருக்கு வரும் இந்த துணிச்சல். உலகின் தில்லு முல்லு, கொலைகாரன் ஆகிய செயலை அம்பலமாக்கும் அட்டகாசமான முடிவு சொக்கத் தங்க(மே)ம் எப்படி சொல்வது உன் உயர்வை காதல் கொண்டேன். உன்மேல் பிரிமுடன் உனக்காக மட்டும் துணிவேதுணை என்று கூறி இப்பபுவியில் சங்கம(ம்)மாகி. வெற்றிகொடி கட்டி வேதம் போன்ற உன் சொற்களால் கும்மாளம் கொட்டி. ஒ போ(டு)ட்டு உன்னை இவ்வுலகில் நிலைத்து நிற்க வாழ்க வாழ்கவென வாழ்த்தி விடை பெறுகிறேன்.

ஜெய் ஜெயம் சுபம்.

ஜெ.முகுந்த குமார், வவுனியா.

## நீ எமக்கு ஸ்பெஷல்

முரசு சுமந்து வந்த அத்தனை
அம்சங்களும் அசத்திச்
சென்றன! லேடீஸ் ஸ்பெஷல்
தந்த அம்சங்கள் சிறப்பாக
இருந்தது.
தகவல் பெட்டி தந்த அனைத்து
அம்சங்களும் மிக மிக
அருமை. இன்னும் உன்னில்
எத்தனையோ விடயங்கள்
வார்த்தைகளால் சொல்ல
முடியாது.

-முஸம்மில், குவைத்.

## என்னவளே

முரசே! உன் வரவை
எண்ணித்
துள்ளிக் குதிக்கிறது
என் உள்ளம்.

முரசே! உன் வரவைக்
கண்டு
பூரிக்கிறேன் புன்னகை
சிந்தி
முரசே! உன்னைப் பார்க்க
என் மனம் அலைபாய்கிறது
முரசே! உன்னைக்
கண்டதும்
அள்ளி அணைக்கிறேன்
உன்னவன்.

-ஆர்.கோபிநாத், கம்பளை.

# படுகொலைகளை நிறுத்த சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## -ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி கோரிக்கை

வடக்கு, கிழக்கில் இடம்பெற்று வரும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு :

ஈ.பி.டி.பி. யினராகிய நாம், சர்வதேச சமூகத்திடம் விடுக்கும் மனிதாபிமான அடிப்படையிலான வேண்டுகோள்களே இவையாகும்.

அமைதி, சமாதானம், அரசியலுரிமை, இவைகளை அடைய வேண்டிய பாதை ஜனநாயக வழிமுறையினாலான பேச்சுவார்த்தை மட்டும் என தமிழ் பேசும் மக்கள் தெளிவுடன் இருக்கின்றார்கள்.

அப்பாவிப் பொதுமக்கள் அன்றாடம் உயிரிழந்து, உடைமையிழந்து, நிம்மதியான வாழ்விழந்து, உளவியல் ரீதியாகவும் பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றார்கள்.

அன்றாடம் உடலுழைப்பை விற்கும் தொழிலாளர்கள் உழைப்பை இழக்கின்றனர். மாணவர்கள் கல்வியை இழக்கின்றனர். வர்த்தகர்கள், அரச ஊழியர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகள் சகல தரப்பினரும் இன்று அவலங்களைச் சந்தித்து வருகின்றனர். நிலப்பரப்பில் மட்டுமன்றி கடற்பரப்பிலும் புலிகள் தாக்குதலை நடத்துவதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலை. இத்தகைய அவல வாழ்விற்கான முழுப்பொறுப்பையும் புலிகளே ஏற்க வேண்டும்.

ஆகவே முதலில் சீரான யுத்தநிறுத்த உடன்பாடு குறித்து சர்வதேச சமூகம் கவனம் எடுத்து அதற்கான அழுத்தங்களை கொடுப்பதற்கு முன்வரவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இனந்தெரியாத நபர்கள் என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு பொது மக்கள் மீதும், கட்டாய வரி செலுத்த மறுத்தவர்கள் மீதும், கப்பம் செலுத்த மறுத்தவர்கள் மீதும் மாற்றுக் கருத்துடைய சக அமைப்புகள் மற்றும் புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் மீதும் புலிகள் படுகொலைகளைப் புரிந்து வருகின்றார்கள்.

ஆகவே அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை மேசையில் சர்வதேச சமூகத்தினால் எழுப்பப்பட வேண்டிய கேள்விகள் ஏனிந்த படுகொலைகள்?........ ஏனிந்த எச்சரிக்கைகள்?...... ஏனிந்த அச்சுறுத்தல்கள்?..... இவ்வாறானவைகள்தான் பிரதானமானவை!

சொந்த மண்ணை இழந்து புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களிடம் பெருந்தொகைப் பணத்தினை வங்கிக் கடன் மூலம் பெற்றுத் தருமாறும் இது இறுதி யுத்தத்திற்கான நிதி என்றும் புலிகள் மக்களை அச்சுறுத்தி வருகின்றார்கள்! அவ்வாறு தர மறுத்தவர்கள் தாயகத்திற்குத் திரும்பி வந்து தமது உறவுகளைப் பார்க்க முடியாது எனவும், நெருங்கிய உறவுகள் கொலை செய்யப் படுவர் எனவும் அச்சுறுத்தி வருகின்றார்கள்!

இத்தகைய பலாத்கார பணம் பறிப்பு விடயத்தில் சர்வதேச நாடுகள் கவனம் செலுத்தி, உங்களை நம்பி அடைக்கலம் தேடி வந்த மக்களுக்கு அச்சமற்ற வாழ்வை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். வெளி நாடுகளில் புலிகளால் .மேற்கொள்ளப்பட்டு வரும் பணம் பறிப்பு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் யுத்தத்திற்கான தயாரிப்புகளில் புலிகள் ஈடுபடாதிருக்க சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைக்கான பிரச்சினையினால் யுத்தம் விளைந்தது. அரசியலுரிமைக்கான தீர்வு கிடைக்குமேயானால் யுத்தமும் யுத்தத்தினால் விளைந்த அவலங்களும் இயல்பாகவே இல்லாதொழிந்துவிடும்.

யுத்தம் எதனால் விளைந்ததோ அதற்குத் தீர்வு காண முயற்சிப்பதைத் தவிர்த்து வரும் புலிகள், யுத்தத்தினால் விளைந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி வருகின்றார்கள். வேர்கள் இருக்கும் போது இலைகளைப் பிடுங்கும் செயலே இதுவாகும்.

ஆகவே படுகொலைகளைத் தடுத்து நிறுத்தி யுத்த நிறுத்தத்தை சரிவரக் கடைப்பிடிக்கின்ற அதே வேளை தமிழ் பேசும் மக்களுக்காக அரசியலுரிமைக்கான பிரச்சினை குறித்து தீர்வும் சமாந்தரமாக முன்னெடுக்கப்படவேண்டும்.

அழுத்தத்திற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டியதும் நடைமுறைப்படுத்த வேண்டியதும் சர்வதேச சமூகத்தின் தவிர்க்க முடியாத சமகாலக் கடமையாகும்.

ஈ.பி.டி.பி.யினராகிய நாம் சர்வதேச சமூகத்திடம் கோரி நிற்பது, போரற்ற வாழ்விற்காக ஏங்கி சீரற்ற வாழ்விற்குள் சிதைந்து போயிருக்கும் தமிழ் பேசும் மக்களின் வாழ்வுரிமையை - தீர்வின்றி இழுபட்டுச்செல்லும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிந்த தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமையை - மனிதப் பிணங்கள் விழாத, மரண ஓலம் கேட்காத, சம உரிமையோடு கூடிய ஒரு சமாதான பூமியை - சர்வதேச சமூகத்திடம் நாம் கோரி நிற்பது இவைகளைத்தான்!

இவை உதடு திறந்து பேசும் சுதந்திரத்தை தொலைத்துவிட்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் மனிதாபிமான வேண்டுகோள்களாகும்!

இக்கோரிக்கைகள் அடுத்த பேச்சுவார்த்தை மேசையில் உரத்த குரலாக எழுப்பப்படும் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம்.

## வன்செயல்களைக் கைவிடுமாறு யசூசி அகாசி கோரிக்கை

புலிகள் இயக்கம் வன்செயல்களைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டுமென்று ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாசி புலி இயக்க உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார். கடந்த செவ்வாய்க் கிழமை கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேசியபோதே, தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட்டால் மட்டுமே தம்மால் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப முடியுமென்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டபோது, பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பினால் அது குறித்துப் பேசக்கூடிய வாய்ப்பு ஏற்படுமென்று அகாசி தெரிவித்தார். இரு தரப்புத் தாக்குதல்களுமே நிறுத்தப்பட வேண்டுமென்பதே தமது விருப்பமென்றும் படையினர் மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்த தாக்குதல்களே நிலைமைகளை மேலும் மோசமடையச் செய்திருக்கின்றனவென்றும் அவர் கூறினார். எது எப்படியிருந்தாலும் புலிகள் தரப்புத் தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

## கடற்படை மறுப்பு

முல்லைத்தீவிலிருந்து திருமலைக்குக் கடல் வழியாகப் புலி இயக்க உறுப்பினர்கள் சென்று திரும்பியதாகப் புலிகள் தெரிவித்த கருத்தை அப்பட்டமான பொய் என்று கடற்படைப் பேச்சாளர் மறுத்திருக்கிறார். கடற் புலிகள் சிலர் தமது படகுகளில் திருமலைக்குச் சென்று திரும்பினரென்று புலிகள் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் இளைஞரை விடுவிக்க 3000 ரூபா!

வடக்கு - கிழக்குக்கு வெளியே பயங்கரவாதச் சந்தேகத்தின் பேரில் கைதாகும் தமிழ் இளைஞர்களை விடுவிக்கப் பொலிஸார் மூவாயிரம் ரூபாவிலிருந்து ஓர் இலட்சம் ரூபா வரை இலஞ்சம் கோருகின்றனர். கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகும் இளைஞர்களைப் பொறுத்தவரை அவர்களை விடுவிப்பதற்கு ஓர் இலட்சம் ரூபா இலஞ்சமாகக் கோரப்படுகிறதென்று இலஞ்ச ஆணைக்குழுவின் தலைவர் நெவில் குருகே தெரிவித்தார். இலங்கையில் இலஞ்சம் தலைவிரித்தாடும் திணைக்களங்களில் மிக மோசமானது பொலிஸ் திணைக்களமே. எமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு பத்து முறைப்பாடுகளுள் ஏழு முறைப்பாடுகள் பொலிஸார் சம்பந்தப்பட்டவையாகும். இறைவரித் திணைக்களம், குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம், மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம் ஆகியவற்றிலும் இலஞ்ச ஊழல்கள் தலைவிரித்தாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## யாழ்.மக்களுக்கு படையினர் விடுத்த அறிவித்தல்

குடாநாட்டில் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் ஒரு சில நபர்கள் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதலை நடாத்துவதில் ஈடுபட்டுள்ளனர். பொது மக்களை துன்புறுத்தும் வகையில் உங்களது வீடுகளைச் சோதனையிடச் செய்வதே இந்தத் தீய நபர்களின் பிரதான நோக்கமாகும். இவ்வாறான நபர்களின் தந்திரங்களுக்கு ஏமாற்றமடைய வேண்டாமென்றும் இந்த தீய நபர்களின் செயற்பாடுகள் மற்றும் அவர்கள் மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்கள் குறித்தும் எமக்குத் தகவல் வழங்கி உதவுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

வலிகாமம் பகுதியில் வசிக்கும் மக்கள் 021-2222267 அல்லது 021-2263398 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் வடமராட்சி மற்றும் தென்மராட்சி பகுதியில் வசிக்கும் மக்கள் 021-2263145 அல்லது 021-2263370 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்புகொண்டு தகவலைத் தெரிவிக்க முடியும்.

உங்களுக்கு நிரந்தர சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கவும் நீங்கள் வழங்கும் தகவலை இரகசியமாகப் பேணிக்காக்கவும் பாதுகாப்புப் படையினராகிய நாம் பொறுப்புடன் செயல்படுவோம் என்றும் அறியத்தருகின்றோம் - இவ்வாறு அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் துண்டுப்பிரசுரம் படையினரால் யாழ்.குடாநாட்டில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

## தகவல், தொலைத்தொடர்பு, தொழில்நுட்ப கருத்தரங்கு

‘உலகளாவிய அறிவியல் பங்குதாரர்’ என்ற அமைப்பு நீடித்து நிற்கக் கூடிய சமத்துவமான அபிவிருத்திக்கான தகவல் மற்றும் தொலைத்தொடர்பு, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பாகக் கடந்த எட்டாம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கருத்தரங்கொன்றை நடத்தியது. இக் கருத்தரங்கில் சுமார் 150இற்கு மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பங்குபெற்றனர். விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இவ்வைபவத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.




உலக அறிவியல் தொலைத் தொடர்பு அமைப்பு கடந்த 8ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடாத்திய கருத்தரங்கின் ஏற்பாட்டாளர்கள் படத்தில் காணப்படுகின்றனர்.

## தமிழக அரசின் பாதுகாப்புச் செயற்பாடுகள்

இந்திய மத்திய அரசு புலிகள் இயக்கத்தைத் தடை செய்திருப்பதால், புதிய தமிழக அரசின் புலி தொடர்பான நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் ஏற்படாதென்று தமிழக காவல்துறைப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் சிவனாண்டி தெரிவித்தார். இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வன்செயல் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதால் அங்கிருந்து அகதிகளாக வரும் தமிழ் மக்களுக்கு நாம் உரிய வசதிகளும் பாதுகாப்பும் வழங்குவோம். ஆனாலும் புலிகளின் நடவடிக்கைகள் தமிழகத்துக்குப் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தளர்த்தப் போவதில்லையென்றும் அவர் சொன்னார்.

## ‘ஹமாஸ்’ ஆட்சி கவிழுமா?

பலத்த பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் பாலஸ்தீனத்தின் ‘ஹமாஸ்’ இயக்க ஆட்சி கவிழக்கூடிய ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் கூறுகின்றனர். இஸ்ரேலுக்கு எதிரான போரைத் தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாக ஹமாஸ் ஆட்சியாளர்கள் சூளுரைத்ததை அடுத்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை பாலஸ்தீனத்துக்கு வழங்கி வந்த நிதியுதவிகளை நிறுத்திக் கொண்டன. இதனால் பாலஸ்தீனத்தின் ஒன்றரை இலட்சம் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாமல் ‘ஹமாஸ்’ அரசு திண்டாடுகிறது. இதற்கிடையில் உலக வங்கி உதவியுடன் பாலஸ்தீன அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதற்கு பிரான்ஸ் ஜனாதிபதி ஜாக் சிராக் தெரிவித்த யோசனையை ஐரோப்பிய ஒன்றியம் நிராகரித்துவிட்டது. இந்த நிலையில் ‘ஹமாஸ்’ இயக்க உறுப்பினர்களுக்கும் ‘பதாஹ்’ (முன்னைய ஆட்சியாளர்கள்) உறுப்பினர்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் இரு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், யதார்த்த நிலைமைகளைக் கவனத்திலெடுக்காமல், அதிதீவிர நிலைப்பாட்டினை எடுத்திருக்கும் ‘ஹமாஸ்’ ஆட்சி, அதிக காலம் நீடிக்காதென்று அந்த இராஜதந்திரி மேலும் சொன்னார்.

## சகல படுகொலைகளும் நிறுத்தப்பட வேண்டும்

### - யாழ். ஆயர்

யாழ்.குடா நாட்டில் நிகழ்ந்துவரும் வன்முறைகளும் படுகொலைகளும், நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழ் மக்களின் சார்பில் அன்பாக வேண்டுகோள் விடுக்கிறேன் என்று யாழ்.ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை விடுத்த அறிக்கையில் கோரியிருந்தார். படையினர் மீதான வன்செயல்களும் படுகொலைகளும் நிறுத்தப்பட வேண்டும் என்று ஆண்டகை சகல தரப்பையும் கேட்டுள்ளார். இது குறித்து யாழ்.மாணவர் ஒன்றியம் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்திருப்பதானது அர்த்தமற்றது என்று ஜெபநேசன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

## “கருத்துச் சுதந்திரத்தைக் கருவறுக்கும் செயல்!”

“நாம் சொல்வதை மட்டும் கேள்! எமது கருத்துக்களை மட்டும் மக்களிடம் எடுத்துச் சொல்!” என்ற ஜனநாயக விரோத ஏகப்பிரதிநிதித்துவ எண்ணங்களும் அதற்கான வன்முறைக் கலாசாரமும்தான் இத்தகைய அச்சுறுத்தல்களை ஊடகங்கள் மீது விடுத்து வருகின்றன! இத்தகைய ஜனநாயக விரோத நடவடிக்கையின் இன்னொரு நிகழ்வாக சுதந்திரமான கருத்துக்களை வெளியிடும் ஊடகவியலாளர்கள் ஒதுங்கியிருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுத்திருப்பது கருத்துச் சுதந்திரத்தைக் கருவறுக்கும் செயலாகும்!

இவ்வாறு ஈ.பி.டி.பி. விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கை வருமாறு :-

இருண்ட யுகத்தினுள் வாழும் மக்களின் விழிகளைத் திறந்து அவர்களை வெளிச்சத்திற்கு அழைத்துவர வேண்டிய மக்கள் பணியின் மகத்தான பங்களிப்பு ஊடகங்களுக்கும் உரித்தான ஒன்று. அத்தகைய ஊடகங்கள் மீதும் அது சார்ந்த ஊடகவியலாளர்கள் மீதும் ஆயுத பலாத்காரத்தைப் பிரயோகித்து, அவர்களை ஒதுங்கி இருக்குமாறு இராவணன் படை என்ற பெயரில் எச்சரிக்கை விடுக்கும் செயலானது ஒட்டுமொத்த மக்களையும் இருண்ட யுகத்தினுள் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கான அநீதியான வன்முறைக் கலாசாரமாகும்.

ஒரு தேசத்தில் பல்வேறு ஊடகங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறியிருப்பதும், அவைகள் சுயமான தளத்திலிருந்து சுதந்திரமான கருத்துக்களை வெளிப்படுத்துவதும் அடிப்படை ஜனநாயக உரிமை குறித்த விடயமாகும்!

ஒரே கருத்து!... ஒரே சிந்தனை!.... ஒரே பாதை!.... என ஒரு குறிப்பிட்ட சாரார் தாம் விரும்பும் கருத்துக்களையும் செய்திகளையும் மட்டும் ஊடகங்கள் வெளியிடவேண்டுமென நினைத்து செயற்படுவது ஜனநாயக விரோத செயலாகும்.

ஒவ்வொருவரினதும் கருத்துக்களையும், செயற்பாடுகளையும், சேவைகளையும் மக்களிடம் எடுத்துச் செல்வதற்கான ஊடகங்களுக்கான சுதந்திரம் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது.

தாம் விடுத்திருக்கும் எச்சரிக்கை குறித்தோ அது சார்ந்த கருத்துக் குறித்தோ சிறிய அளவு நியாயத்தன்மை கூட தம்மிடம் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டதால் மட்டுமே இராவணன் படை என்ற முகமூடிக்குள் மறைந்திருந்து புலிகள் இத்தகைய எச்சரிக்கையினை விடுத்திருக்கின்றார்கள்!

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு எதிராக விடுக்கப்பட்டிருக்கும் புலிகளின் இந்த எச்சரிக்கையினை ஈ.பி.டி.பி. யினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்ற அதேவேளை, இதை ஒரு சவாலாகக் கருதி சர்வ தேச சமூகத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்ல இருக்கின்றோம்!

இனம், மொழி, தேசம் கடந்து தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி சர்வதேச ஊடகவியலாளர்களும் இதற்கெதிராகக் குரல் கொடுக்க முன்வர வேண்டும் என ஈ.பி.டி.பி. அறைகூவல் விடுக்கின்றது!

உதடுகள் திறக்கவும், உண்மைகள் பிறக்கவும் ஊடகவியலாளர்கள் உரத்த சிந்தனைகளோடு எழுந்து நிற்கவேண்டும்! அவர்களுக்கு அனுசரணையாகப் புத்திஜீவிகள், மாணவர்கள், படைப்பாளர்கள், சமூக அக்கறையாளர்கள் எனப் பல தரப்பினரும் குரல்கொடுக்க முன்வரவேண்டும்!

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## ஒவ்வொருவரின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

சமாதானத்தின் பெயரால் தாக்குதலும் பதில் தாக்குதலுமான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், இரு பகுதியினரின் தாக்குதல்களிலும் அகப்பட்டு பலியாகிப்போகும் பொதுமக்களின் இழப்புக்களைக் கண்டிக்கின்றோம். கொலைகளை இனம் பிரித்துப் பார்ப்பதான கலாசாரம் தவறுகளை நிவர்த்திக்கும் ஒரு தந்திரோபாயமே தவிர மக்கள் மீதான கரிசனையோ நலன் விருப்பமோ கிடையாது. இந்த நிலையில் போதிய மாற்றம் ஏற்படாதவரை தொடரும் பொதுமக்கள் மீதான படுகொலைகளும், கடத்தல்களும் முடிவுக்கு வரமாட்டாது.

படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று ஓலமிடும் எவரும் அதற்கான சாத்தியப்பாடுகளை ஆராயவில்லை, மாறாக இன்னொரு கொலைக்கான நடவடிக்கைகளையே திட்டமிடுகின்றனர்.

அப்பாவித் தமிழ் மக்களைப் புலிகள் தமது கவசமாகப் பயன்படுத்தி அல்லது மக்களுக்குள்ளிருந்து படைத்தரப்பைத் தாக்குவதால் அதன் விளைவுகள் எத்தகையதாக இருக்கும் என்பதை யாழ்ப்பாண மக்களும், வவுனியா மக்களும் அனுபவித்து வருகிறார்கள். இவ்விடயத்தில் படைத்தரப்பு இன்னும் நிதானத்தையும், பொறுமையையும் கடைப்பிடிக்க வேண்டும். புலிகள் வேறு மக்கள் வேறு என்பதன் வித்தியாசத்தை அரசு உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகும். தமிழ் மக்கள், இன்னொரு பாரிய போரையோ, இன்னொரு இடப்பெயர்வையோ உயிர்ச்சேதங்களையோ விரும்பவில்லை என்பதையும் மக்கள் நியாயமான கௌரவமான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதையும் அதற்காக பேச்சுவார்த்தையே சிறந்த வழி என்பதையுமே தமது விருப்பங்களாகக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் தொடர் படுகொலைகளும் ஆட்கடத்தல்களும் அந்த மக்களை அச்ச சூழலுக்குள் வைத்திருப்பதோடு, இயல்பு வாழ்க்கையைக் கேள்விக்குட்படுத்தியும் வருகிறது. இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகைக் காரியாலயம் தாக்கப்பட்டும், இரண்டு ஊழியர்கள் கொல்லப்பட்டும் மேலும் இருவர் காயமடைந்த சம்பவமானது கண்டனத்துக்குரியதோடு, கருத்துக்களை ஆயுதங்கொண்டு அடக்கிவிட முடியுமென்ற மூடநம்பிக்கையாளர்களின் காட்டுமிராண்டித்தனம் மனித உருவத்தில் ஊருக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையை மீண்டும் மீண்டும் நிரூபித்துக்கொண்டிருக்கிறது. தவிரவும் இத் தாக்குதலைத் தொடர்ந்து இராவணன் படையெனும் பினாமிப் பெயரால் வெளியிடப்பட்ட செய்தியால், அரச ஊடகங்களில் பணியாற்றும் அனைத்து தமிழ் ஊடகவியலாளர்களும் உடனடியாக தமது வேலையை விட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும் எனவும் இல்லாத பட்சத்தில் மோசமான பின் விளைவுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்றும் இணையச் செய்தி வெளியாகியிருப்பதானது இலங்கையில் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் ஒவ்வொரு வினாடியும் குறிவைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. இதற்கு கண்டனம் தெரிவித்ததோடு ஒவ்வொரு ஊடக அமைப்பும் ஒதுங்கிக் கொண்டுள்ளன. ஆகவே எந்தவொரு விரும்பத்தகாத சம்பவத்துக்காகவும் வெறும் கண்டனங்களைத் தெரிவிப்பதானது கண் துடைக்கும் செயலேயன்றி வேறொன்றும் அல்ல.

எனவே அரசு, ஊடக நிறுவனங்களினதும், ஊடகவியலாளர்களினதும் பாதுகாப்புக் குறித்து அதிக கவனமெடுக்க வேண்டுமென வலியுறுத்தும் அதேவேளை, இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தத் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏனெனின் மக்களின் எதிரிகளதும், சமாதானத்தின் எதிரிகளதும் ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவும் அரசின் தவறுகளாகவே கருதப்படும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ‘உதயன்’ மீதான தாக்குதல் ஊடக (சு)தந்திரத்துக்குச் சவால்!

ந ர ன்

**உலக** ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டுக் கொழும்பில் மூன்று நாள் மாநாடு கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' தமிழ்த் தினசரியின் அலுவலகத்துக்குள் புகுந்து கொடூரமான, மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. கொழும்பு மாநாட்டை ஐக்கிய நாடுகள் சபையின் உப அமைப்புகளிலொன்றான யுனெஸ்கோவும் இலங்கை ஊடகத்துறை அமைச்சும் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன. யாழ்ப்பாணத்தில் தாக்குதலை நடத்தியவர்களும் அதற்கு ஏற்பாடு செய்தவர்களும் வழமைபோல் 'இனந்தெரியாதவர்கள்' என்ற போர்வைக்குள் மறைந்து கொண்டு விட்டார்கள். மறைக்கப்பட்டு விட்டார்கள்.

கொழும்பிலிருந்துதான் மும்மொழிப் பத்திரிகைகளும் வெளிவந்துகொண்டிருந்த காலத்தில், சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னரேயே தமிழ் தினசரியொன்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கியது. ஹரன், சபாரத்தினம் மாஸ்டர் போன்ற ஊடகத்துறை விற்பன்னர்களின் கைவண்ணம் அந்தப் பத்திரிகையில் பளிச்சிட்டது. காழ்ப்புணர்ச்சியே இல்லாமல், துணிவோடு மக்கள் நலன் சார்ந்த விடயங்களுக்காக உரத்துக் குரல் கொடுத்த பல பத்திரிகையாளர்கள் இதற்குப் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். காலவோட்டத்தில் பல்வேறு தினசரிகள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கின. அரசு இயந்திரத்துக்கும் விடுதலையின் பேரால் ஆயுதம் தூக்கியவர்களுக்குமிடையிலான மோதலின் போது கருத்துச் சுதந்திரங்களும் பாதிக்கப்பட்டன. சில பத்திரிகை அலுவலகங்கள் யாழ்ப்பாணத்தில் தாக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில, துப்பாக்கிகள் உறுமியதால் மூடப்பட்டிருக்கின்றன. இப்போதும் கூட யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு தமிழ் தினசரிகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் இரண்டு புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ ஊதுகுழல்களாகவே செயற்படுகின்றன. ஏனையவை விரும்பியோ விரும்பாமலோ கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தை நெரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றன.

ஜனநாயகமும் மனித உரிமைகளும் பன்முகத்தன்மையும் அடக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாண சமூகச் சூழலில், துப்பாக்கிகளின் நிழலில்தான் பேனாக்கள் எழுத நிர்ப்பந்திப்பட்டிருக்கின்றன என்ற கசப்பான உண்மையையும் நாம் மறுதலிக்க முடியாது. இந்தப் பின்னணியில் தான் உதயன் பத்திரிகை மீதான தாக்குதல் பற்றி நாம் ஆராய வேண்டியுள்ளது. மாற்றுக் கருத்துக்களைக் கூறினால், 'மண்டையில் போடுகிற' தமிழ் ஆயுத மேலாதிக்க சூழலில் மக்கள் பயந்து நடுங்குவதைப் போல ஊடகங்களுக்கும் உதறலெடுக்கும் என்பதை மறுக்க முடியாது. போர்க்கால சூழலில் பிறந்ததே உதயன் பத்திரிகை.

உதயன் பத்திரிகையின் சகோதரப் பத்திரிகையே கொழும்பிலிருந்து வெளிவரும் சுடரொளி. உதயனின் முகாமைத்துவப் பணிப்பாளர் சரவணபவன். அவரது மைத்துனரான வித்தியாதரன் என்பவரே சுடரொளிக்குப் பொறுப்பாகச் செயற்படுகிறார். இப்பத்திரிகையின் முக்கியஸ்தரொருவர் முன்னர் நிதிக் கம்பனியொன்றினை நடத்தியவர். பண வைப்புகளுக்கு அதிக வட்டி தரப்படுமென்று அறிவித்து, தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த அந்த நிதிக் கம்பனி திடீரென இழுத்து மூடப்பட்டது. கம்பனி திவாலாகிப் போனதாக அறிவிக்கப்பட்டது. இதனால் பண வைப்புகளைச் செய்த பலர் கடைசியில் இருந்ததையும் பறிகொடுத்த நிலைக்கு ஆளானார்கள். தமிழ் மக்களே கூடுதலாக அந்த நிதிக் கம்பனியில் வைப்புகளைச் செய்து பின்னர் பாதிக்கப்பட்டவர்களாவர். கோடிக் கணக்கான ரூபா சுருட்டப்பட்டதாகப் பலர் குற்றஞ்சாட்டினார்கள். எல்லாமே கைதவறிப் போனதால் சிலர் தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணம், கொலிஜ் லேனிலுள்ள 55/1 ஆம் இலக்க வீட்டில் வித்தியாதரன் வசித்து வந்தார். இந்த வீடு முன்னர் புலிகளின் காரியாலயமாக இயங்கியது. 1987ஆம் ஆண்டு மார்ச் மாதம் முப்பதாம் திகதி இந்த வீட்டில் வைத்து, புலிகள் பிடித்து வைத்திருந்த 59 தமிழ் இளைஞர்கள் அருணா, சத்தியா என்ற இரு புலி இயக்க முக்கியஸ்தர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதுவே 'கந்தன் கருணை'ப் படுகொலைகள் என்று அழைக்கப்படுகிறது.

இதேவேளை, இன்னுமொரு சுவாரஷ்யமான தகவலும் எமக்குக் கிட்டியிருக்கிறது. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கைநிறையச் சம்பளத்துடன் கூடிய வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவதாக யேசுதாசன் என்பவர், உதயன் பத்திரிகையில் பல விளம்பரங்களைச் செய்திருந்தாரென்று கூறப்படுகிறது. நூற்றுக்கணக்கான மாணவர்களிடமிருந்து இலட்சோப இலட்சம் ரூபா பணத்தைச் சுருட்டிக் கொண்டாரென்றும் தற்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பளைக்குத் தப்பிச் சென்று அங்கு வாழ்ந்து வருகிறாரென்றும் கூறப்படுகிறது. அவரைத் தேடிச் செல்லும் மாணவர்களிடம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் புலிச்சார்பு அமைப்பான மாணவர் பேரவையிடம் போய்க் கேட்குமாறு யேசுதாசன் கையை விரித்து விட்டாராம். மாணவர் பேரவைக்குச் சென்றால், தமது அமைப்போடு சேர்ந்து சில பணிகளைச் செய்யுமாறு பாதிக்கப்பட்டவர்கள் கேட்கப்படுகிறார்களாம். மாணவர் பேரவை என்பது கஜேந்திரன் எம்.பி.யின் செல்வாக்குக்குட்பட்டது.

'உதயன்' அலுவலகம் மீதான தாக்குதல் தொடர்பாக மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் கைது செய்யப்பட்டமையும், நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட அவர்களை அடையாளம் காட்ட எவரும் முன்வராததால் இந்த மாணவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டமையும் இங்கு கவனத்தில் கொள்ளத் தக்கது.

இத் தாக்குதலை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரே நடத்தினரென்று கஜேந்திரன் முண்டியடித்துக் கொண்டு அறிக்கைவிட்டார். அதனையே ரவிராஜ் எம்.பி.யும் கிளிப்பிள்ளை போல ஒப்புவித்தார். இதற்குப் பதிலடி கொடுத்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பிரிவு, கருத்துக்களைக் கருத்துக்களால் சந்திக்கும் கட்சியினரே தாமென்றும் 'பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்ட வேண்டாம்' என்றும் பதிலடி கொடுத்திருக்கிறது.

ஈ.பி.டி.பி. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியென்பது உண்மைதான். அரசாங்கமே கொழும்பில் ஊடக சுதந்திர தினத்தை கோலாகலமாக நடத்தியபோது, அதுவும் யுனெஸ்கோவின் ஏற்பாட்டில் நூற்றுஐம்பத்துக்கு மேற்பட்ட வெளிநாட்டு



ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தபோது இத் தாக்குதலை ஈ.பி.டி.பி.தான் நடத்தியதென்று எந்த முட்டாளும் சொல்லமாட்டான். 'உதயன்' பத்திரிகையையும் 'உதயன்' வக்காலத்து வாங்கும் புலிகள் அமைப்பையும் சர்வதேச மட்டத்தில் பிரசாரப்படுத்தும் ஒரு தந்திரோபாயத் தாக்குதலே இதுவென்று தெரிவிக்கப்படும் விமர்சனத்தில் நிறையவே நியாயங்கள் இருக்கின்றன. உதயன் நிர்வாகமே இத்தாக்குதலைத் திட்டமிட்டு, ஏற்பாடு செய்ததாகவும் சில தரப்பிலிருந்து வெளிவரும் விமர்சனங்களையும் நாம் வெறுமனே தட்டிக் கழித்துவிட முடியாது. அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதற்காக இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம். அல்லது உதயன் பத்திரிகையை ஏதோ ஊடக சுதந்திரத்தின் போராட்ட வீரர்களாகக் காட்டிக் கொள்ள விரும்புபவர்களும் இத் தாக்குதலை ஏற்பாடு செய்திருக்கலாம். அல்லது நிதி நிறுவன மோசடியால் பாதிக்கப்பட்டவர்கள் ஏன் இத் தாக்குதலை நடத்தியிருக்கக் கூடாது?

கஜேந்திரனைக் 'குதிரை கஜேந்திரன்' என்றே யாழ்ப்பாணத்தில் அழைக்கிறார்கள். அதாவது ஆள்மாறாட்டம் செய்து பரீட்சையில் சித்தி பெறுவதையே 'குதிரையோட்டம்' என்று அழைக்கிறார்கள். கஜேந்திரன் பரீட்சையில் மட்டுமல்ல, தேர்தலிலும் குதிரை ஓடினார் என்று ரவிராஜ் எம்.பியே ஒரு தடவை வெளிப்படையாக் குற்றஞ்சாட்டியிருந்தார். "யுத்தம் ஆரம்பித்தால் நாற்பதாயிரம் சிப்பாய்களை பொலித்தீன் பைகளில் யாழ்ப்பாணத்திலிருந்து தெற்குக்கு அனுப்பி வைப்போம்" என்று பாராளுமன்றத்தில் மார்தட்டிய கஜேந்திரன், தற்போது யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள்ளும் அருகேயுள்ள உயர்தொழில்நுட்பக் கல்லூரிக்குள்ளும் பதுங்கி வாழ்வது ஏன்?

கொலைக் கலாசாரத்துக்கும் ஏகப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கும்தான் 'உதயன்' பத்திரிகை வக்காலத்து வாங்கியது. மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட போதெல்லாம், அவர்கள் துரோகிகளாக வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடகங்கள் என்பது, மக்கள் மத்தியில் செய்திகளை மட்டுமல்ல, கருத்துகளையும் சுமந்து செல்லும் வாகனங்கள். செய்தியை வழங்கும்போது கூட அவற்றிலும் கருத்துக்கள் பொதிந்திருக்கக் கூடியதாக எழுத முடியும். அப்படித்தான் எழுதுகிறார்கள்.

எந்த நாட்டிலுமே அரச சார்பு ஊடகங்கள் அரசின் கொள்கைகளையே பிரதிபலிக்கும் விடயதானங்கள் மட்டுமல்ல, செய்திகளும் கூடத்தான் அரசின் கொள்கைகளைப் பிரதிபலிக்கும். தனியார் ஊடகங்கள், தத்தமது எஜமானர்களின் சொற்படிதான் நடக்கும். ஆனாலும் கூடியளவுக்குப் பக்கச் சார்பின்றி செய்திகளைக் கொடுப்பதே ஊடக தர்மம். "ஊருக்குத்தான் உபதேசம், உனக்கும் எனக்கும் இல்லையடி" என்ற பாணியில் ஊடகங்கள், நடந்து கொள்ளக் கூடா.

இந்த நாட்டில் முப்பது வருடங்களுக்கு மேலாக இனம் சார்ந்த சிவில் யுத்தமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த யுத்தத்தில் பத்திரிகைகளின் பங்களிப்பு மிக முக்கியமானது. தமிழ் தேசியத்துக்காகத் தமிழ் பத்திரிகைகள் போராடுவதில் தவறில்லை. ஆனால் யுத்தமா? சமாதானமா? என்ற விடயத்தில் அனைத்து மொழிப் பத்திரிகைகளுமே சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

உதயன் போன்ற பத்திரிகைகள், புலிகள் மக்களுக்கு ஆயுதப் பயிற்சியளிக்கிறார்கள் என்ற செய்தியைப் புகைப் படங்களோடு பிரசுரித்து மார்தட்டிக் கொண்டன. மூதாட்டியொருவர் கையில் ஏ.கே.47 ரக ரைபிளோடு நிற்கும் படத்தையும் பிரசுரித்து மறத் தமிழரின் போராட்ட மரபைக் காட்டியது. போதாக் குறைக்கு, படையினர் மீது கிளைமோர் குண்டுத் தாக்குதல்களை நடத்தியது பொங்கு தமிழ் படையும் மக்கள் படையும் தான் என்று மக்கள் மீதே பழியையும் போட்டுக் கொண்டன. மக்கள் மத்தியில் பதுங்கியிருந்து தாக்குதல்களை நடத்தியவர்கள் புலிகள், அல்லது அவர்களது முகவர்கள் தானென்பது வேறு விடயம். தாக்குதல் நடத்தப்பட்ட போதெல்லாம் தற்காப்பு நிலையிலிருந்த படையினர் பதில் தாக்குதல் நடத்தும் நிலைக்குச் சென்றபோது அப்பாவித் தமிழ் மக்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். படையினர் மீது யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்ட பின்னர், படையினர் பதில் தாக்குதல் நடத்த வேண்டாமென்று யாரும் சொல்ல முடியாது. அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட வேண்டும் என்பதும் இனக்கலவரமொன்று ஏற்பட வேண்டுமென்பதும்தான் புலிகளின் தேவை. உதயன் இதற்கு நிறையவே முண்டு கொடுத்திருக்கிறது.

ஊடகவியலாளர்கள் என்றால், வானத்திலிருந்து விழும் கொம்பர்களல்லர். அவர்களின் கருத்துகளுக்காக அவர்கள் கொல்லப்படுவதே வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இன்னும் சொல்லப் போனால், மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட ஒரேயொரு காரணத்துக்காகக் கொல்லப்பட்ட பல்லாயிரக் கணக்கான ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ இயக்க உறுப்பினர்களும் அவர்களின் கொள்கைகளுக்காகவே பலியெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடகவியலாளர்களின் பேனாக்கள் நீதிக்கும் நியாயத்துக்குமாக எழுத வேண்டும். இருந்தாலும் உதயன் பத்திரிகை, அதன் கருத்துகளுக்காகத்தான் தாக்கப்பட்டிருக்கிறது என்பது வெறும் சப்பைக்கட்டு வாதமாகும். ■

## ஊரிலிருந்து....



"இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல்களை நடாத்தும் போது அதன் பின் விளைவுகள் முன்னைய காலத்திற்கும் தற்போதைய காலத்திற்கும் இடையில் பெரிய வித்தியாசம் ஒண்டு இருக்குது கவனிச்சீங்களோ?" எண்டு மாஸ்டர் கேட்டார்.

"நீங்களே சொல்லுங்கோ" எண்டன்

ஒருகாலம் இருந்தது. கண்ணி வெடி வெடிச்சால் அந்த ஏரியாவே சுடுகாடாக மாறும். துவக்குச்சூடு, வீடு, கடை எரிப்பு, கொள்ளை சர்வசாதாரணமாக இருக்கும். இப்ப எண்டால் கிளைமோர் வெடிச்சால் மிஞ்சி மிஞ்சிப்போனால் ரெண்டு, மூன்று பேருக்கு நல்ல அடி விழும் அவ்வளவுதான். ஆனால் மஹிந்த ஜனாதிபதியாக வந்தப்பிறகு நூற்றிற்கு மேலே ஆமியும் செத்திருக்கு. ஏறக்குறைய அதே அளவிற்கு மறுபுறம் படுகொலையும் விழுந்திருக்கு. இதில இருந்து என்ன விளங்குது?' எண்டு கேட்டார் மாஸ்டர் எனக்கு எங்கேயோ இடிக்குது.

# கிழக்கில் அவமானப்படும் பெண்களும் அபாண்டமான குற்றச்சாட்டும்!

சமூகத்தில் பெண்களைக் கவர்ச்சிப் பொருளாகவும், ஆண்களின் அடிமைகளாகவும் பார்க்கப்படுகின்ற வியாதி தொடர்கதையாகவே இருக்கிறது. இதற்குச் சமாந்தரமாக பெண்களின் விடுதலை பற்றிய கோரிக்கைகளும், பெண்களும் ஆண்களுக்குச் சமமானவர்கள் என்ற விதமான உரிமைப் போராட்டங்களும் தொடரவே செய்கின்றன.

உடல் ரீதியாகப் பலவீனமான பெண்களும் மனோரீதியாகப் பலவீனமாக பெண்களும் சில வேளைகளில் ஆண்களின் ஆசை வார்த்தைகளுக்குள்ளும், ஆணாதிக்கத்துக்குள்ளும் வீழுந்து விடுவதும் தவறுகளுக்கு ஆட்பட்டுவிடுவதும் ஒட்டு மொத்தப் பெண் சமூகத்துக்குமே அவமானத்தையும், தாழ்வு மனப்பான்மையையும் உண்டாக்கி விடுகிறது.

பெண்கள் மீதான வன்முறை அல்லது பலாத்காரம் என்பது வீட்டுக்குள்ளும், அலுவலகங்களிலும், இப்போது பாடசாலைகளிலும் சர்வசாதாரணமான நிகழ்வுகளாகி விட்டுள்ளது. உறவினர்களால், காதலர்களால், நண்பர்களால், தெரிந்தவர்களால் கூட பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர். இவற்றிலிருந்து பெண்களை மீட்பது பெரும் சவாலாகவே இருந்து வருகிறது. இதன் உச்சக்கட்டமாக தந்தையர்களாலேயே மகள்மார் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்ற செய்திகள் நாட்டில் சாதாரணமாகிவிட்டன. இந்தச் செய்திகளில் அநேகமானவற்றில், தாயார் வெளிநாட்டுக்குச் சென்றிருப்பார் அல்லது அந்தச் சந்தர்ப்பத்தில் தாயார் வீட்டில் இருந்திருக்கமாட்டார். அத்தகைய சூழ்நிலையில்தான் என்ற செய்திகள் மிகவும் அருவருக்கத்தக்க வகையில் இத்தகைய சம்பவங்கள் நடந்தேறுகின்றன.

பாதிக்கப்படும் பெண்கள் துணிந்து வெளியில் சொல்லாததும், கருக்கலைப்பில் ஈடுபடுவதும், தற்கொலை செய்து கொள்வதும் மிகவும் சாதரண விடயங்களாகி விட்டன. இதற்குக் காரணம் சமூகம் சுமத்தப்போகும் அவமானம், பழிச் சொற்கள், பெற்றோர்களின் கௌரவம் என்பனவாகும்.

இவ்வாறு பெண்கள் சமூகத்தில் தொடர்ச்சியாகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்தாலும் பெண் விடுதலை, பெண் உரிமை என்ற கோசங்களைத் தூக்கிக் கொண்டு போராடுபவர்களின் குரல்கள் அவ்வப்போது மட்டுமே ஒலிக்கின்றன.

இத்தனைக்கும் மத்தியில் பெண்கள், தொழிலுக்காக அலுவலகங்களுக்குச் செல்வதும், வெளியில் தங்கியிருந்து தொழில் செய்வதும் என்று உழைப்புக்காக வீட்டை விட்டு வெளியில் இறங்குகிறார்கள். இதற்குப் பொருளாதார நெருக்கடியும், குடும்பத்தின் வறுமையும் பிரதான காரணங்களாக அமைகின்றன.

முன்னரும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பெண்கள் பலதுறை ஊழியர்களாகப் பணியாற்றி வந்துள்ளபோதும், சுனாமி தாக்கியதன்

> **ஒரு சில பெண்கள் செய்யும் தவறுகளுக்காக ஒட்டு மொத்தப் பெண்களையும் குற்றஞ் சாட்டுவதையும், உள்நோக்கம் கொண்டு அபாண்டம் சுமத்துவதையும் நிறுத்தி சமூகத்தின் சவால்களை எதிர்கொண்டு வாழக்கூடிய வகையில் பெண்களை உற்சாகப்படுத்த வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும்.**

பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்களின் அதிகரிப்பும், சேவையும் முன்னரை விடவும் அதிகரித்துக் காணப்படுகிறது. அவ்வாறான உதவி மற்றும் தொண்டு நிறுவனங்களின் இயக்குநர்கள் அல்லது நிதிப் பங்கீடுகளைத் தீர்மானிப்பவர்கள் வெளிநாடுகளின் பிரதிநிதிகளாக இருந்த போதும், திட்டங்களை வகுக்கின்ற, மொழி பெயர்ப்புச் செய்கின்ற கள உத்தியோகத்தர்களாக மற்றும் கணனி, கணக்கியல் ஊழியர்களாக எம் நாட்டவர்களே பணி புரிகின்றனர். அதிலும் கிழக்கு மாகாணத்தில் அதிகமான நம் நாட்டுப் பணியாளர்களாகப் பெண்களே உள்ளனர். இதற்கு ஆண்களின் விகிதாசாரக் குறைபாடும், இயக்க மோதல்களில் அதிகமான இளைஞர்கள் கொல்லப்பட்டுவிட்டதும், நாட்டை விட்டு ஓடி விட்டதும் ஒரு காரணியாக உள்ளது. இதேபோல் சுனாமி தாக்கிய தென் இலங்கை மற்றும் வட பகுதிகளிலும் இவ்வாறான அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. அங்கும் பெண்களே அதிகமாக ஊழியர்களாகப் பணியாற்றுகின்றனர்.

இப்போது கிழக்கு மாகாணத்தில் பூதாகரமாகக் கிளம்பியிருக்கும் குற்றச்சாட்டு என்னவென்றால், அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் பெண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுகிறார்கள் அல்லது பாலியலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்பதாகும். இதற்கு ஆதாரமாக நம் நாட்டுப் பெண்களும், வெள்ளைக்காரர்களும் தோன்றும் பாலியல் படங்களடங்கிய சீ.டி.க்கள் ஊருக்குள் விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது. அந்தப் படங்களில் பெண்கள் மயக்க நிலையிலேயே காணப்படுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது. அதுபற்றி விசாரித்துப் பார்த்ததில், கல்முனை மற்றும் நாவலடி சவுக்குத் தோப்புப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட சீ.டி.க்கள் படம் பிடிக்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது. இவ்வாறானதொரு ஆபாசப் படமொன்றில் இருப்பதாகக் கூறப்பட்ட அம்பாறை காரைதீவைச் சேர்ந்த 23 வயது யுவதி ஒருவர் ஏப்ரல் மாதக் கடைசியில் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்திகள் பரவலாக வெளிவந்தன. அவரது கையில் இருந்த கடிதம் ஒன்றில், வேன் ஒன்றில் வந்தவர்கள், தன் மீது மயக்க மருந்தை பீச்சி அடித்து வீட்டுத் தூக்கிச் சென்றதாகவும், மூன்று நாட்களின் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் எழுதியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவர் பல்கலைக்கழக மாணவி என்றும் பகுதி நேரமாக அரச சார்பற்ற நிறவனமொன்றில் வேலை செய்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் ஏப்ரல் இரண்டாம் திகதி மட்டக்களப்பில் கூட்டமொன்றில் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களைக் குறிவைத்துப் பேசிய உரையின்போது, இதுவரை அம்பாறையில் 183 இளம் பெண்களும், மட்டக்களப்பில் 183 இளம் பெண்களும் கருக்கலைப்புச் செய்திருப்பதாக சில புள்ளிவிபரங்களை வெளியீட்டிருந்தார். அதைத்தொடர்ந்து அநாமதேயப் பெயரில் அம்பாறை, மட்டக்களப்புப் பகுதிகளில் விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரமொன்றில் அரச சார்பற்ற நிறுவனங்களில் பெண்கள் பணியாற்றுவதை உடனடியாக நிறுத்தும்படியும், அப்படி தொடர்ந்தும் பணியாற்றினால் மோசமான பின் விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இவற்றின் பின்னணியிலேயே காரைதீவு மாணவியின் கடத்தலும் அவரின் தற்கொலையும் நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் பாலியலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்பதையோ, அவ்வாறானதொரு ஆபாச சீ.டி. ஊருக்குள் புழக்கத்துக்கு வந்திருப்பதையோ மறுப்பதற்கும் முடியாது. ஆனால் ஒரு சில பெண்கள் அவ்வாறான குற்றங்களைச் செய்வதையும் அதற்குத் துணை போவதையும் குறித்துக் கொண்டு ஒட்டு மொத்தமாக அத்தனை பெண்களையும் குற்றம் சுமத்த முடியாது. அரியநேந்திரன் எம்.பி. குறிப்பிடுவதுபோல் பணியாற்றும் அத்தனை பெண்களும் பாலியலில் ஈடுபடுகிறார்கள் என்பது, பெண்கள் மீது சுமத்தப்படும் அபாண்டமான குற்றச்சாட்டாகும் தவிரவும் கருச்சிதைவு தொடர்பான புள்ளிவிவரங்களை எந்த ஆதாரத்தின் துணையோடு இவர் சொல்கிறார் என்பது அவருக்கே வெளிச்சம். இவரின் இந்த அபாண்டமான குற்றச்சாட்டும் அதைத்தொடர்ந்து விநியோகிக்கப்பட்ட எச்சரிக்கை துண்டுப்பிரசுரமும், ஒட்டுமொத்தப் பெண்களின் ஒழுக்கத்தையும், கௌரவத்தையும் கேள்விக்குட்படுத்தும் விதமாகவே உள்ளது. இதுபற்றி பெண்கள் அமைப்புகள் மௌனம் காக்கிறார்களா? அல்லது சம்பந்தப்பட்டவர்களுக்குப் பின்னால் தூக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து போயிருக்கிறார்களா? என்பது புரியாத புதிராகவே உள்ளது.

தொழில் செய்யும் பெண்களையும், தொழில் தேடும் பெண்களையும், மனச்சோர்வடைய வைத்து அவர்களைப் போராட்டத்தின் பெயரால் இழுத்துக் கொள்ளும் உள்நோக்கமும் இருக்கும் என்று அப்பகுதி மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். மறுபக்கத்தில் திட்டமிடல்களை தமது விருப்பப்படி வகுத்துக்கொள்ளவும், தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும், அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் பெண்கள் தமக்கு உதவ வேண்டும் என்ற எதிர்பார்ப்பை

அலசுவது
**- மதியூகி -**

நிறைவேற்றிக் கொள்ளவுமே இவ்விதமான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

ஒரு சில பெண்கள் செய்யும் தவறுகளுக்காக ஒட்டு மொத்தப் பெண்களையும் குற்றஞ் சாட்டுவதையும், உள்நோக்கம் கொண்டு அபாண்டம் சுமத்துவதையும் நிறுத்தி சமூகத்தின் சவால்களை எதிர்கொண்டு வாழக்கூடிய வகையில் பெண்களை உற்சாகப்படுத்த வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். அதேவேளை, பாலியலில் ஈடுபடுத்தப்படும் பெண்களையும், அதற்குக் காரணமானவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்தி அந்தத் தவறுகள் நீடிக்காமல் தடுப்பதோடு, பாதிக்கப்பட்ட பெண்களின் நல வாழ்வுக்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

## அதிரடி அய்யாத்துரை



**யாழ்ப்பாணத்தில** உதிக்கிற பத்திரிகை மீது போன ரெண்டாம் திகதி தாக்குதல் நடந்ததெல்லோ. அண்டைக்கு ரெண்டு ஊழியர்கள் கொல்லப்பட்டும், ரெண்டுபேர் காயப்பட்டும் போனவை. ஆனால் தாக்குதல் திட்டம் போட்டவை எழுத்தாளர்களை முன்கூட்டியே நிர்வாகம் மூலமாக அனுப்பிப் போட்டுத்தான் தாக்குதலை நடத்திபிருக்கினமெண்டு சனம் சொல்லுதுங்கோ. வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் நாட்டுக்கு வந்திருக்கேக்க, தமிழ் ஊடகமொன்று தாக்குப்பட்டுதெண்டால் அது அரசுக்கு ஒரு அவப் பெயரா வருமெண்டதையும், தமிழ் பேசிற ஊடகங்களுக்கு நாட்டில பாதுகாப்பு இல்லையெண்டதையும் உணர்த்திற விதமாக நல்ல கல்குலேசன் பண்ணித்தான் உந்தத் தாக்குதலை நடத்தியிருக்கினமாம்.

அதுசரி, அப்புடியெண்டால் அது மட்டுமே தமிழ் பேசிற ஊடகம்? இன்னும் எத்தினை இருக்கு எண்டு கேட்டதுக்கு என்ன சொல்லினம் தெரியுமே, எத்தனை ஊடகம் இருந்தாலும் உதிக்கிறவைதான் வட மாகாண மக்களிட்டை ரெண்டெழுத்தாரின்ர பிரசாரத்தை அப்புடியே எழுத்துப்பிழை கூடத் திருத்தாமல் பிரசுரிக்கிறவையாம் எண்டதாலை அது தாக்குப்பட்டால்தான் அதிகாரத் தரப்பு மேலையோ அல்லது மாற்றுத்தரப்பு மேலையே பழியைத் தூக்கிப்போட வசதியா இருக்கும் எண்டதுதானாம் திட்டமாம். கடைசியில என்ன நடந்தது தெரியுமே. யானை தண்ட தலையிலையே மண்ணை அள்ளிப்போட்டுக் கொண்ட மாதிரி, இவை என்னதான் பழியைப் போட்டாலும் வந்திருந்த ஊடகவியலாளர்களும், விசயந் தெரிஞ்சவையும் திரைமறைவுத் திட்டத்தை சரியாப் புரிஞ்சுகொண்டிட்டினமாம். அது மட்டுமில்லையுங்கோ. அதிகாரமானவர் கூத்தமைப்பு எம்.பி., மாவையாருக்கு உது சம்பந்தமாக சின்னப்புள்ளத்தனமாக சிந்திக்க வேணாமெண்டு அவைக்குச் சொல்லுங்கோ எண்டு கொஞ்சம் கடுமையாகச் சொன்னவராம்.

**தமிழருக்கெண்டொரு** பண்பாடு இருக்கெண்டு நாங்கள் நினைச்சுக் கொண்டிருந்த காலம் மலையேறிப் போட்டுது போல. ஜப்பானில இருந்து வந்தவர் ரெண்டெழுத்துக் காரரின்ர தலைவரைச் சந்திக்கவேணும்; நாட்டு நிலைமை கட்டு மீறிப் போய்க்கொண்டிருக்கு எண்டு கேட்டதுக்கு, வன்னியில இருந்து வந்த பதில், பீச்சாங்கையைத் தூக்கி முஞ்சையில சப் எண்டு அடிச்ச மாதிரி இருந்துச்சுதாம், உம்மை சந்திக்க ஏலாது; உம்மோடை கதைக்கிறதுக்கு ஒண்டுமில்லை. நீர் புதுசா எதையாவது சொல்ல வேணுமெண்டு விரும்பினால் சு.ப.வை சந்திச்சு சொல்லிப் போட்டுப் போகலாமெண்டு சொல்லிப்போட்டினமாம். பாவம் ஜப்பான் பிரநிதிதி, விழுந்தும் மீசை இருக்கிற இடத்தில மண் ஒட்டாத மாதிரி அதிகாரத் தரப்புப் பிரதிநிதிகளை சந்திச்சுக் கொண்டு திரிபிறாராம். என்னங்கோ ரெண்டெழுத்தார் உப்பிடி டீசெண்ட் இல்லாம அவாய்ட் பண்ணிட்டினமே எண்டு அவரை யாரும் கேட்டால், அவர் வித்தியாசமான சிரிப்பை வரவழைச்சுக் கொண்டு சொல்றாராம்: அவை அவசரப்படுகினம். இதின்ர விளைவை அனுபவிப்பினம். சர்வதேச சமூகம் எரிச்சலோடை பார்க்கேக்க, உதவத்தான் வந்தனான். அவை என்னை உதாசீனப் படுத்திப்போட்டினம். இதாலை நஷ்டமெல்லாம் எனக்கில்லை. அவைக்குத்தான் எண்டு. ஆனால் ஒண்டு பாருங்கோ, தமிழரெல்லாம் உப்பிடித்தான். இங்கிதம் தெரியாதவை எண்டு சர்வதேச சமூகம் நினைக்காமல் இருந்தால் சரிதானுங்கோ.

**வேலியே** பயிரை மேஞ்ச கதையெண்டு கேள்விப்பட்டிருப்பியள். உது பல பேருக்குக் காலம் காலமாகப் பொருந்திப் போனாலும் காவல்துறை ஆக்களுக்கு மிகப் பொறுத்தமாக இருக்குதுங்கோ. சாதாரண சனம் தங்கட காரியங்களைச் செய்து கொள்வதற்கு போற அலுவலகங்களில மாத்தையாமாருக்கு கைக்க வைப்பினம். சில மாத்தையாமார், இவ்வளவு எண்டு கொன்ரைக்ட் பேசிப் போட்டுத்தான் வேலையையே செய்யுவினம். ஆனால் காவல்துறையாக்கள் உப்பிடி கிம்பளம் வாங்கிறதிலை முன்னணியில நிக்கினம் எண்டு அண்மையில நடந்த விசாரணைகளின்ர அறிக்கை சுட்டிக்காட்டியிருக்குங்கோ. ஒரு சில காவல்துறையினர் தான் வாங்கினம் எண்டது வாஸ்தவம்தான். ஆனால் அந்த ஒரு சிலர் எண்டவை நாட்டில இருக்கிற எல்லா ஸ்டேஷனிலையும் இருக்கினமெண்டது தானுங்கோ கவலையான விஷயம். பத்து நல்ல அதிகாரி இருந்தாலும், ஒரு மோசடி அதிகாரி இருந்தால் போதுமுங்கோ. அந்த ஸ்டேஷனே மானமிழந்து போயிடும். பிறகு எப்புடிங்கோ வேறு இடங்களில நடக்கிற மோசடியையும், ஊழலையும் கட்டுப்படுத்துறது எண்டு விசாரணைக் கமிஷன் நடத்தினவை கேக்கினம். யாரும் பதில் சொல்லுமாப்போலை இல்லை.

பூனைக்கு யார் மணி கட்டிறது எண்ட கதைதான் போல...

**நாட்டில** இருக்கிற எல்லா ஊடகங்களையும் இருபத்து நாலு மணி நேரமும் கடுமையாக அவதானிச்சுக் கொண்டிருக்கினமாம். ஏன் எண்டால் தங்கட பொறுப்பு, தர்மம் எண்டதையெல்லாம் மறந்து ஊடகங்கள் யுத்த அறைகூவல்களையும், நாட்டின்ர சட்டம், ஒழுங்கை கேள்விக்கு உட்படுத்தும் விதமாகவும் தங்கட இஷ்டப்படி தவறான பிரசாரங்களை செய்து கொண்டிருக்கினமாம். உந்த விஷயம் லேசா வெளியாலை கசிஞ்சிருக்கு. உடன சில தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் அலட்டாகிட்டினமாம். அவை முன்னம் மாதிரியில்லாம வில்லங்கம் வராதபடி நல்லா வடி கட்டித்தான் செய்தி சொல்லுகினமாம். தினசரிப் பத்திரிகைகள் தான் தாங்கள் தாண்டிப்போன கரடுமுரடெல்லாம் தாண்டி எப்புடி பெக் பண்ணுறதெண்டு தெரியாம ஒவ்வொரு நாளும் ஒரு பொக்கட் மீட்டிங் எண்டு கூடிக் கூடிக் கதைக்கினமாம் - எண்டால் கூடிய விரைவில மாற்றங்களுக்கு உட்படுவினம் எண்டினம் உள் விவகாரம் தெரிஞ்சவை. பாப்பம்... அஞ்சில வளையாதது அம்பதில வளையாதெண்டுவினம். வெயிட் எண்ட் சீ...

**அடுத்த** பேச்சு நடக்குமோ, நடக்காதோ எண்ட ரெண்டும் கெட்ட நிலைமை நீடிக்குதே, உது எதிலபோய் முடியப் போகுதெண்டு கேட்டால் வாத்தியார் என்ன சொல்லுறார் தெரியுமோ? அதிகாரத் தரப்பு இத்தனைக்குப் பிறகும் ஒரு சண்டைக்கு அவசரப்படாது எண்டதை நாளுக்கு நாள் ரெண்டெழுத்தார் செக் பண்ணிக் கொண்டிருக்கினம். உப்பிடியே சொட்டிக் கொண்டே இருக்கும் வரைக்கும் பேச்சுக்கான அழைப்பை அதிகாரத் தரப்பும், சர்வதேசமும் விடுத்துக் கொண்டே தான் இருப்பினம். உப்பிடியே போயிட்டு இருந்து பேசினால் டிமாண்ட் இருக்காது எண்டதாலை தலைநகரிலையோ இல்லாட்டில் வேறு எங்கையோ பெரிசா ஒரு அடியை அடிச்சுப்போட்டு கோவணக் கட்டோட நிண்டால் 'சண்டைக்குப் போகாதீங்கோ பேச்சுக்கு வாங்கோ' எண்டு கதறுவினம். அந்த நேரத்தில எதிர்தாக்கத்தை முறியடிக்கிற தந்திரமாக நாங்கள் இன்னும் கூட பேச்சுக்குத் தயார்தான் எண்டு சொல்லிப்போட்டு எங்கையாவது ஒரு நாட்டுக்குப் போய் கத்தரிக்காய், புடலங்காயெண்டு பேசிப்போட்டு வரவேண்டியதுதான் எண்டதுதான் ரெண்டெழுத்தாரின்ர மாஸ்டர் பிளேனாம். அப்புடியெண்டால் வெகுவிரைவில பெரிசா ஒரு சம்பவம் நடக்கப்போகுதெண்ட மாதிரியெல்லோ வாத்தியார் ஆருடம் சொல்லுறார். எதுக்கும் கொஞ்சம் கவனமா இருங்கோ புரியுதோ...

**மீன்பாடும்** ஊரில ஆபாச சீ.டிக்கள் தாராளமாகப் புழக்கத்தில இருக்குதாம். அதுவும் எங்கட நாட்டு இளம் பெண்களும், வெளிநாட்டுக்கார ஆம்பிளையளும் தான் தோன்றினமாம். போர்ச் சூழலும், அகதி வாழ்வும் எப்புடி ஒரு சமூகத்தின்ர சீரழிவுக்குக் காரணமாக இருந்துதோ, அதுபோலை சுனாமி தாக்கினாப் பிறகு உந்தச் சீரழிவுகள் அதிகமாயிடுச்சுங்கோ. உதுக்குக் காரணம் என்ன, நியாயம் என்ன எண்டதெல்லாம் தேவையில்லாததுங்கோ. எங்கட பெட்டையள் உதுக்பு எப்புடி அகப்படுகினமெண்டது தான் தெரியாமக் கிடக்கு. அவர் கூத்தமைப்பு எம்.பி. அரியமானவர் என்னடாவெண்டால் உந்த என்.ஜி.ஓ.க்களில வேலை செய்யிறவைதான் அப்புடிப் போகினம். பிறகு கருவிலையே கலைக்கினம் எண்டு ஒட்டுமொத்தமாச் சொல்லுறார். எனக்கென்னவோ உந்தக் குற்றச்சாட்டை முழுமையாக ஏற்கக் கஷ்டமா இருக்கு. அகதி முகாம்களிலை இருக்கிறவையிலையும் உந்த வியாதி தாராளமாக பரவித்தான் இருக்குதெண்டினம். மொத்தத்தில மத்தளத்துக்கு ரெண்டு பக்கமும் அடி விழும் எண்ட மாதிரி எங்கட சனத்துக்கு எல்லாப் பக்கத்தாலையும் சீரழிவுதான் மிச்சமாகிப் போயிருக்கு. எட பாதிக்கப்பட்டவையை மீட்கவோ, இருக்கிறவையை காப்பாத்தவோ ஒரு நடவடிக்கையையும் எடுக்காமல் சகட்டுமேனிக்கு குற்றம் சுமத்திப் போட்டு எச்சரிக்கை விடுகினம் அநாமதேயமானவை. உது எப்புடி இருக்கு தெரியுமோ, தவிச்ச முயல் அடிக்கிறதெண்டுவினமே அப்புடியிருக்குங்கோ.....வ்...

# இரவு

**நம்மைச்** சுற்றியிருக்கும் எல்லா வெளிச்சங்களையும் அணைத்துவிட்டு சூரியனையும் கண்களை மூடிக் கொள்ளச் சொன்னால் தெரியும் நாம் எல்லோருமே ஒரு இருண்ட யுகத்துக்குள் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது. சூரியனின் ஒத்துழைப்பும் பூமியின் சுழற்சியும் நமக்கு இரவு - பகலை வேறுபடுத்துகின்றது. ஆக, நம்மை மூடிக்கிடக்கும் இருளை





ஒளிபாய்ச்சித் தான் நாங்கள் வெளிச்சப்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வெளிச்சம் குறையக் குறைய இருள் இருப்பது நமக்குப் புரிகிறது. ஆனால் நாமோ இருட்டு வருகிறதாகவும் போவதாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். பலவகையான வேலைகளைச் செய்து கொண்டு ஒரு பகலைப் போக்கத் தெரிந்த நமக்கு, ஒரு இரவை அவ்வாறு கழிக்க முடிவதில்லை. அப்படி முயற்சி செய்தாலும் அது கட்டாயப் படுத்துவது போல் அமைந்து விடுகிறது. நாம் விழித்திருக்கும்போது அல்லோலகல்லோலப்படும் பூமி, இரவில் மனிதன் ஓய்வு நிலைக்குப் போனபிறகு எத்தனை அமைதியான ராகங்களை இசைத்துக் கொண்டு தன் கச்சேரியை நடத்துகிறது என்று எண்ணிக் கொள்வேன்.

பரபரப்பான மிகுந்த ந(ர)கரத்தின் இரவுக்கும், ஒரு கிராமத்தின் இரவுக்கும் எத்தனை வித்தியாசம் இருக்கமுடியும் என்று யோசிப்பேன்.

நான் எப்போதுமே சந்தேகங்களைச் சேகரிப்பதில்லை, அடுத்த நாளே நண்பனின் குக்கிராமத்துக்குப் போய் விட்டேன். இரவு பற்றிய, என் சிந்தனையை எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. பூமிக்கு மேல் கீழ் என்று எப்படிப் பிரித்துப் பார்க்க முடியுதோ அதேபோல் எனக்கும் இரவைப்பற்றி ஒரு புள்ளியை யோசிக்க முடியவில்லை. சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கைக்குப் போனேன். பயணக் களைப்பு ஒருபக்கம் தூக்கத்துக்கு தூளிகட்டிக் கொண்டிருந்தது. மனிதனால் இரவை பதிவு பண்ணிக் கொள்ள முடியாது என்ற உண்மை புரிந்தது.

அப்படியென்றால் இரவு, மனிதனை எப்படி பதிவு செய்துகொள்கிறது என்று யோசித்தேன். கனவுகளோடு வாழ்க்கை கடத்திக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம், குழந்தை இருக்கும் தாயாக இருந்தால் நித்திரையை உடைத்துப்போடும் தாய்மார் ஒருபக்கம், காதலில் விழுந்து இதயங்களின் காயங்களுக்கு களிம்பு பூசிக்கொண்டு ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் ஒரு பரம்பரை ஒருபக்கம், சுகத்துக்காக அவஸ்தைப்படும் கணவன்கள்- மனைவிகள் ஒருபக்கம், பகல் பொழுது சண்டையால் வடக்குத் தெற்காகவோ அல்லது கிழக்கு மேற்காகவோ முகங்களைத் திருப்பிக்கொண்டு ஆனால் ஒரே படுக்கையில் கிடக்கும் தம்பதிகள் ஒருபக்கம், பகல் பொழுதில் வெளியில் சென்ற துணையோ, நெருங்கிய உறவோ வீடுவந்து சேராததால் விபரீதமான தவிப்புகள் ஒருபக்கம், சந்தித்த நபர்கள், அவர்கள் தெரிவித்த கருத்துக்கள், பார்த்த காட்சிகள் என்று எல்லாவற்றையும் மீட்டியபடி வீட்டுக் கூரையை வெறித்துப்பார்த்துக் கொண்டு நித்திரை மறந்து இருப்போர் ஒருபக்கம், நாளை விடியலையும், முதலில் செய்யவேண்டிய வேலைகளையும் மனதின் மத்திய பிரதேசத்தில் வரிசைப்படுத்திக் கொண்டு பக்கத்திலிருந்து இரகசியம் பேசுபவர்களின் முணுமுணுப்பை அறைகுறையாகக் கேட்டுக் கொண்டிருக்கும் நிம்மதி மறந்து போகும் பேர்வழிகள் ஒருபக்கம், படுக்கையை ஈரப்படுத்திக் கொண்டே தூங்கிப்போகும் சிறுசுகள், பல் துலக்காமல் வாயுக்குள் சாக்கடை ஓட்டிக் கொண்டு படுக்கைக்குப் போன பெருசுகள் என்று மனிதரைப் பற்றிய ஒரு இரவின் பதிவுகள் மிக நீளமானவை.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



தருவது
-தேசன்




## கருத்துக்களுக்கு மதிப்பளிக்குமா சூரியன்?

**சூரியன்** எப்.எம்.வானொலியில் ஏப்ரல் 22ஆம் திகதி காலையில் நடத்தப்பட்ட விழுதுகள் நிகழ்ச்சியில் மேற்குறிப்பிட்ட தலைப்பில் நேயர்களின் கருத்துக்கள் பறிமாறப்பட்டன. அதில் கலந்துகொண்ட பைசல் எனும் நேயர் சமாதானப் பேச்சுகளுக்கு அரசும் புலிகளும் விட்டுக்கொடுப்போடு பிரச்சினைகளை அணுக வேண்டும் என்றும் அரச தரப்பு விடுக்கும் கோரிக்கைகள் தொடர்பில் விடுதலைப் புலிகள் பெருமனதான விட்டுக்கொடுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்ததோடு முஸ்லிம் மக்கள் சமாதானத்துக்கு எதிரானவர்கள் இல்லை என்றும் தெரிவித்தார். அத்தோடு முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டுமென அவர் தனது கருத்துக்களைத் தொடர்ந்தபோது, நிகழ்ச்சியின் தயாரிப்பாளரான குருபரன் நீண்ட மௌனத்தைக் கொண்டிருந்தார். அப்போது பெண் அறிவிப்பாளரான சங்கீதா முந்திரிக் கொட்டைபோல் முந்திக்கொண்டு அந்த நேயரின் தொடர்பை பலவந்தமாக துண்டித்துவிட்டு, "நேயரே, நீங்கள் விடயத்திலிருந்து வேறு கருத்துக்களுக்குப் போகிறீர்கள்" நன்றி. என்று அந்த நபரின் கருத்தைத் தெரிவிக்க விடாமல் துண்டித்தார். இந்த நிகழ்ச்சியானது என்போன்ற, சூரியனின் ரசிகர்களுக்குப் பெருத்த மனவேதனையைத் தருகிறது.

நேயர்களின் கருத்துக்களை அலசுவதாக இருந்தால் அவர்கள் தங்களது தளத்திலிருந்து கொண்டுதான் கருத்துக்களைக் கூறுவார்கள். அந்தக் கருத்துக்கள் புகழுரைகளாகவோ, பக்கச்சார்பானதாகவோ எள்ளளவும் இருக்காது. மாற்றுக்கருத்துக் கொண்டதாகவும் இருக்கும். அதை ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவம் இல்லாதவர்கள் அப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்தக் கூடாது. விடுதலைப் புலிகளையும் - சூரியன் எப்.எம்.மையும் புகழுபவர்கள்தான் கருத்துக் கூற வேணுமென்றால் தமிழ் கூட்டமைப்பு போன்றவர்களை மாத்திரம் இணைத்துக்கொண்டு நிகழ்ச்சியை நடத்துவது பொறுத்தமாக இருக்கலாம். அவ்வாறில்லையெனில் கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்ற அல்லது சகிப்புத்தன்மை கொண்ட மனநிலை தேவை.

ஆகவே மாற்றுக்கருத்துக்கள் துணிந்து ஒலிக்கும் போது மௌனம் காப்பதும் துண்டித்து விடுவதும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் மற்றும் அறிவிப்பாளரின் உண்மைத்தன்மையை கேள்விக்குட்படுத்தவே செய்யும்.

எனது இந்த சுட்டெரிக்கும் விமர்சனத்தை நியாயத்தின் வழி நின்று பார்க்கவும்.

*–மௌலவி அபூபக்கர், அட்டாளைச்சேனை.*

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **"Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- **(E-mail):- murasu@sltnet.lk**

**(660 ஆவது முரசின் 24ஆம் பக்கத்தில் பிரசுரமான 'உற்பத்தி' எனும் ஆக்கத்தின் தொடர்ச்சி அந்த இதழில் பிரசுரமாகவில்லை. எனவே, இடையூறுக்கு வருத்தம் தெரிவிப்பதோடு அதன் தொடர்ச்சி கீழே தரப்பட்டுள்ளது.)**




நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக டைய்த்தேன், பொலிரம், டெக்கோனியல், டொக்சின் ஆகிய நோய்த்தடுப்பு மருந்துகள் பாவிக்கப்படுகின்றன. இதில் டொக்சின் எனப்படும் மருந்தானது இலைகள் கருகுவதைத் தடுப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. இதைத் தவிரவும் எலி, பன்றி போன்றவையும் கிழங்குகளைத் தாக்குகின்றன.

உருளைக்கிழங்கானது கிரேனோலா, டிரெய்சரி, சிசிறா, இல்லிஸ்ரார், சீதா ஆகிய இனங்களில் உள்ளது. இதில் சீதா இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட இனமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு அந்தருக்கு பத்து அந்தர் கிழங்கு விளைச்சலாக எதிர்பார்க்கலாம். ஒரு அந்தர் விதைக்கிழங்கு 6800 ரூபா தொடக்கம் 7000 ரூபா வரை விற்கப்படுகிறது. படத்தில் பார்க்கும் கிழங்கானது டெய்சரி இனக்கிழங்காகும். மண்ணுக்குள் இருக்கின்ற காலம் வரை கிழங்கு பழுதாகாது. ஆனால் வெளியில் தெரிந்தால் கிழங்கு பச்சை நிறமாக மாறிவிடும். ஒரு செடியில் 5-10 கிழங்குகள் வரை இருக்கும். இந்த தகவல்களை புகைப்படத்தோடு அனுப்பி வைத்திருப்பவர் நுவரெலியா - பி.ராமச்சந்திரன் எனும் விவசாயி. ராமச்சந்திரனுக்கு முரசு வாசகர் சார்பில் நன்றிகள். வாசகர்களே நீங்களும் உங்கள் பிரதேசத்தில் இருக்கக் கூடிய ஆரோக்கியமான தகல்களை முரசுக்கு அனுப்பி வைக்கலாம்.







## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com




**"சமாதானப் பேச்சுக்கு புதிய அணுகுமுறை தேவை" என்ற தலைப்பில், தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெஹான் பெரேரா எழுதிய கட்டுரை, கடந்த இரண்டாம் திகதிய 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

# சமாதானப் பேச்சுக்கு புதிய அணுகுமுறை தேவை!

**இலங்கை,** கடந்த வாரம் யுத்தத்தின் விளிம்பிலிருப்பதைப் போன்று காணப்பட்டது. இதுவே சர்வதேச ஊடகங்கள் உலகெங்கும் அனுப்பிவைத்த செய்தியாகும். முன்பக்கத் தலைப்புச் செய்தியாகவும் இந்த செய்தி வெளியிடப்பட்டது. வடக்குக் கிழக்கிலும் கொழும்பிலுமுள்ள மக்களும் மோசமான நிலைக்கு முகம் கொடுக்கத் தயாரானார்கள் ஆனால். ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படுமென்று புதிய ஊகங்கள் இந்த வாரம் எழுந்துள்ளன. கடந்த வாரம் மோசமாக வீழ்ச்சியடைந்திருந்த பங்குச் சந்தை, மீள உயர்வு பெற்றுள்ளது. நாட்டின் பல பாகங்களிலும் வாழ்க்கை நிலை விரைவாக சகஜமானமையால் இலங்கையில் அமைதியேற்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறதா? அல்லது சமாதான வழிமுறை எதுவும் மேற்கொள்ளப்பட முடியாது என்ற கடுமையான உண்மையை ஏற்றுக்கொள்ளத் தயங்குவதை இது எடுத்துக்காட்டுகிறதா?

சமாதான வழிமுறை தொடர்பாகப் புலிகள் இயக்கத்தின் மனோபாவம் கடந்த வருடம் நவம்பர் மாதம் வெளிப்பட்டது. வடக்குக் கிழக்கில் தமிழ் வாக்காளர்களை வாக்களிக்காமல் தடுத்ததன் மூலம் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் தோல்விக்குப் புலிகள் இயக்கம் வழி வகுத்தது. சமாதான முயற்சியை வெற்றிபெறச் செய்வதன் மூலம் தனது அரசியல் எதிர்காலத்தை மேம்படுத்தத் திட்டமிட்டிருந்த ரணில் விக்கிரமசிங்காவுக்கு இது தடையை ஏற்படுத்தியது. சமாதானவழிமுறை குறித்து கடும் விமர்சனத்தைத் தெரிவித்து வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஒரு குறுகிய பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவதற்கு புலிகள் இயக்கம் வலுக்கட்டாயமாக ஏற்படுத்திய தேர்தல் பகிஷ்கரிப்பு உதவியது.

இன்று அரசாங்கமும் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் தாம் பேணி வருவதாகக் கூறிவருகின்ற போதிலும், அவை வார்த்தை அளவில் மட்டுமே இருக்கின்றன. யுத்த நிறுத்த அத்துமீறல்கள் ஒழுங்காக இடம்பெற்று வருகின்றன. இவை தொடர்பாக சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை. புதிய சமாதான வழிமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற மிகத் தெளிவான தேவை உருவாகியுள்ளது. தற்போதைய சமாதான வழிமுறையில் தொடர்ந்தும் முன்செல்வதிலும் பார்க்க, இலங்கையில் சம்பந்தப்பட்ட தரப்புகளும் சர்வதேச சமூகமும் புதிய அணுகுமுறையொன்றினை கவனத்தில் எடுப்பது நல்லது.

கடந்த வாரம், அழிவின் விளிம்பிற்குச் சென்றிருந்தது. இராணுவத் தலைமையகத்தில் நடத்திய தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் மூலம் இராணுவத் தளபதியைக் கொல்ல எடுக்கப்பட்ட முயற்சியில் பல உயிர்கள் அழிக்கப்பட்டன. இதனையடுத்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள புலி நிலைகள் மீது அரசாங்கம் விமான, தரை, கடற்படை மார்க்கமாக பதிலடிகளை மேற்கொண்டது. இதனால் மேலும் பல மரணங்கள் சம்பவித்ததோடு ஆயிரக்கணக்கானவர்கள் தமது வீடுகளை விட்டு இடம்பெயர வேண்டியுமேற்பட்டது. இந்த இரு தரப்பு நடவடிக்கைகளுமே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறியமையாகும். ஆனால், இவை மட்டுமே வெளிப்படையாகக் கண்ணுக்குத் தெரிந்த அத்துமீறல்களாகும்.

மட்டுப்படுத்தப்பட்ட யுத்தம் தங்கு தடையின்றித் தொடர்கிறது. ஆனால், வெகுகுறைவான சம்பவங்களே ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கிறது.

## பாரிய பின்னடைவு

அரசாங்கமோ அல்லது புலிகளோ தத்தமது மட்டுப்படுத்தப்பட்ட மோதல்களை முற்றுமுழுதான யுத்தமாக மாற்றுவதற்கு உண்மையிலேயே விரும்பியிருந்தால், அதற்கான சந்தர்ப்பத்தை கடந்த வார சம்பவங்கள் வழங்கியிருந்தன. ஆனால், இன்றைய மோசமான சூழ்நிலையை அவர்கள் பயன்படுத்தவில்லை என்பது மட்டுமே ஆறுதலானது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தான் யுத்தத்தை விரும்பவில்லையென்று திரும்பத் திரும்பக் கூறியுள்ளார். நாட்டிலுள்ள வறிய மக்களுக்கு பெரும் சமூக நலன்புரித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுமென்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர் வாக்குறுதியளித்திருந்தார். யுத்தம் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

மறுதரப்பில், இராணுவத் தலைமையகத்தின் மீது புலிகள் நடத்திய அதிர்ச்சித் தாக்குதலால் ஏற்பட்ட சாதகமான நிலையை புலிகள் பயன்படுத்த விரும்பாமைக்குக் காரணம் தாக்குதல் குறித்து சர்வதேச சமூகம் வெளியிட்ட அதிருப்தி காரணமாக இருக்கலாம்.

முற்றுமுழுதான யுத்தமென்பது புலிகளின்

> **முற்றுமுழுதான யுத்தமென்பது புலிகளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலான பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதோடு, சர்வதேச சக்திகளையும் இலங்கை விவகாரத்தில் ஈடுபட வைத்து விடும். எனவேதான் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியதும் மட்டுப்படுத்தப்பட்ட தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதுமான வன்செயல் நடவடிக்கைகளைப் புலிகள் இயக்கம் விரும்புவது போல் தெரிகிறது.**

கட்டுப்பாட்டுக்கு அப்பாலான பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதோடு, சர்வதேச சக்திகளையும் இலங்கை விவகாரத்தில் ஈடுபட வைத்து விடும். எனவேதான் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியதும் மட்டுப்படுத்தப்பட்ட தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதுமான வன்செயல் நடவடிக்கைகளைப் புலிகள் இயக்கம் விரும்புவது போல் தெரிகிறது. அது கிளைமோர் குண்டுகளை வெடிக்க வைக்கும் செயல்களையும் அரசாங்கப் படையினர் மீது கிரனைட்டுகளை வீசும் நடவடிக்கைகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. இவற்றின் மூலம் பல சேதங்களைத் தொடர்ந்தும் ஏற்படுத்தி வருகிறது.

கடந்த நவம்பர் மாதம் முதல் சமாதான வழிமுறை, பாரிய பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றதென்பது தெளிவாகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்குப் பின்னரேயே, அரச படையினரைத் தாக்கிவிட்டு அத்தாக்குதல்களுக்கான பொறுப்பை ஏற்க மறுக்கும் புதிய தந்திரோபாயத்தைப் புலிகள் இயக்கம் ஆரம்பித்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது அரசாங்கம் சமாதான வழிமுறை மீது கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியதோடு இத் தாக்குதலுக்கு முடிவு கட்டவும் விரும்பினார். ஆனால், இன்று வரை புலிகளின் கிரனைட் தாக்குதல்கள் மற்றும் கிளைமோர் குண்டுத்தாக்குதலிலிருந்து தனது போர் வீரர்களைப் பாதுகாப்பதற்கான எந்தவொரு வழிவகையையும் அரசு கண்டுபிடிக்கவில்லை. இத் தாக்குதல்களுக்கு முடிவு கட்டக்கூடிய ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதே அதன் ஒரே நோக்கமாகவுள்ளது.

## நல்லெண்ணமில்லை

துரதிர்ஷ்டவசமாக பரஸ்பர நல்லெண்ணம் இல்லாதவிடத்து, எவ்வளவு பேச்சுவார்த்தைகளை நடத்தினாலும் சாதகமான விளைவுகள் ஏற்படப் போவதில்லை. ஜெனீவாவில் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் பரஸ்பரம் வன்செயல்களை நிறுத்துவதென்று அரசாங்கமும் புலிகளும் இணக்கத்திற்கு வந்திருந்தனர். ஆனால், இரு தரப்புகளுமே தமது கடப்பாட்டுக்கேற்ப செயற்படத் தவறிவிட்டன. ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று இரு வாரங்களுக்குள் இருதரப்புகளிலுமே கொலைகள் மீண்டும் ஆரம்பித்து விட்டன. குறிப்பாக புலிகளிடமிருந்து பிரிந்து சென்ற கருணா அணி, தீவிரமாகச் செயற்படத் தொடங்கியதோடு கொலைகளையும் மேற்கொண்டது. இது தொடர்பான குற்றச்சாட்டுக்களைப் புலிகள் இயக்கம் அரசாங்கத்தின் மீது முன்வைத்தது.

முதலாவது சுற்று ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் இரு தரப்புகளிடமுமே நல்லெண்ணம் ஏற்படவில்லை என்பதைக் கூறுவதற்கு மிகவும் கவனமான அவதானிப்பாளர் ஒருவர் தேவையில்லை. ஜெனீவா ஒப்பந்த மை காய்வதற்கு முன்னரேயே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் திருத்தி விட்டோமென்று இலங்கை அரசாங்கத் தூது கோஷ்டி கூற ஆரம்பித்தது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு மீளப் பேச்சுவார்த்தை நடத்துவோமென்று கூறி, ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதால் அவரை அரசியல் ரீதியில் பலப்படுத்துவதற்காக அரசாங்கத் தூது கோஷ்டி அவ்வாறு கூறியிருக்கலாம். அவ்வாறு திருத்தமெதுவும் செய்யப்படவில்லையென்று புலிகள் இயக்கம் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. அன்றிலிருந்து நிலைமை மேலும் மோசமாகிக் கொண்டே வந்தது. துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்ததாகப் புலிகள் இயக்கம் கூறியது. ஜெனீவா ஒப்பந்தம் குறித்து எழுதப்பட்டவைகளின் அடிப்படையில் புலிகளின் இந்தக் கூற்றினை அரசாங்கம் மறுதலித்தது. ஜெனீவா ஒப்பந்தத்தில் துணைப் படைகளின் ஆயுதக் களைவு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. பேச்சுவார்த்தைகள் ஏதாவது நல்ல விளைவுகளை ஏற்படுத்த வேண்டுமென்றால், பரஸ்பரம் கட்டுப்பட்டு நடப்பதற்கு இரு தரப்பும் தயாராக இருப்பதோடு, நல்லெண்ணச் செயற்பாடு இருக்க வேண்டுமென்பதும் அடிப்படையானதாகும். இவற்றில் எதுவுமே இருந்ததாகத் தெரியவில்லை. எனவே, இரண்டாவது சுற்று ஜெனீவாப் பேச்சுவார்த்தை நடைபெற்றாலும் கூட, மனமாற்றம் ஏற்படவில்லையென்றால், அதிலிருந்து ஒன்றும் பெரிதாகக் கிடைக்கப் போவதில்லை.

## ஊக்கமில்லாத தோற்றம்

இன்றைய சூழ்நிலையில், நாட்டின் அரசியல் தோற்றம் மோசமானதாகவே உள்ளது. இரு தரப்புகளுமே முற்றுமுழுதான யுத்தத்துக்குச் செல்லும் சாத்தியம் இல்லையென்ற போதிலும், இப்போது அவர்கள் ஈடுபட்டிருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட யுத்தத்தை நிறுத்துவதற்கான இணக்கத்துக்கு வரும் சாத்தியம் தென்படவில்லை. மட்டுப்படுத்தப்பட்ட யுத்தச் சூழ்நிலை, அரசாங்கத்தை விடப் புலிகளுக்கே கூடுதல் சாதகமானதாகும். அரசாங்கத்தின் அமைப்பு முறை வெளிப்படையானது. இதேவேளை, புலிகளின் அமைப்புமுறை இரகசியமானது. எனவே, புலிகள் இயக்கம், அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவி முக்கியத்துவம் மிக்க சொத்துக்கள் மீது தாக்குதல் நடத்துவதைத் தடுப்பது அரசாங்கத்தைப் பொறுத்தவரை மிகவும் கஷ்டமானதாகும். ஆனால், புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தக் கூடிய சாத்தியங்கள் அதிகமுண்டு.

ஜனாதிபதி, கடந்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கு உதவிய ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்களக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு திட்டவட்டமான உறுதிப்பாடொன்றினை வெளிப்படுத்தியுள்ளார். இக் கட்சிகள் அண்மைய உள்ளூராட்சித் தேர்தல்களில் ஜனாதிபதியோடு இணைந்து செயற்படுவதற்கு மறுத்துள்ள போதிலும், அவர் வெற்றிபெறுவதற்கு உதவிய இக் கட்சிகளை ஜனாதிபதி நன்றிப் பெருக்கோடு கையாள்கிறார். அது அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது. இந்த தேசியவாதக் கட்சிகளும் அரசாங்கத்திற்குள் இருக்கும் அவர்களின் முகவர்களும் உள்ளூராட்சி சபை தேர்தல்களில் மக்களால் நிராகரிக்கப்பட்ட போதிலும், இக் கட்சிகள் தமது தேசியவாத நிகழ்ச்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதி சுதந்திரம் வழங்கியுள்ளார் போல் தெரிகிறது. இது துரதிர்ஷ்டவசமானதாகும்.

ஆனால், சமாதான இலக்கைப் பொறுத்தவரை, அரசாங்கத்துக்கு மட்டுமே கோரிக்கைகளை விட வேண்டுமென்பதில்லை. புலிகளின் மட்டுப்படுத்தப்பட்ட யுத்தம், இராணுவ நோக்கில் அவர்களுக்கு சாதகமானது என்ற போதிலும் கூட, அத் தந்திரோபாயம் தமிழ் மக்களையே மிகப் பெருமளவில் பாதிக்கிறதென்பதைப் புலிகள் இயக்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். புலிகளின் வன்செயல்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் கடுமையான நடவடிக்கைகள், தமிழ் மக்களை அரசாங்கத்திடமிருந்து புறந்தள்ளிவிடக் கூடும். அரசாங்கம் அத்தகைய எதிர் நடவடிக்கைகளை எடுப்பதற்குப் புலிகள் இயக்கமே காரணம் என்பதும் இந்த மக்களுக்குத் தெரியும்.

புலிகள் இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் நிச்சயமாகத் தடைவிதிக்குமென்பதால் அதற்கெதிரான முயற்சிகளை மேற்கொண்டு, அதனைத் தடுத்து நிறுத்துவதற்காகவே, ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்வதற்கான முயற்சிகளைப் புலிகள் இயக்கம் தற்போது மேற்கொண்டுள்ளது போலத் தெரிகிறது. பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய யுத்தம், புலிகளுக்கு எதிரான சர்வதேசச் சூழ்நிலையொன்றினை உருவாக்கியுள்ளது. புலிகள் இயக்கம், சர்வதேசத் தடைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. அவர்களைப் பயங்கரவாத இயக்கமாகக் கனடா தடை செய்தமை மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

மீண்டும் ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்குச் சென்று, அதன் மூலம் சர்வதேசத் தடைகளைத் தவிர்த்துக் கொள்ளப் புலிகள் இயக்கம் விரும்பலாம். ஒரு சாதகமான தேவைக்காகப் புலிகள் இயக்கம் செய்ய வேண்டிய மாற்றுச் செயற்பாடு இதுவாகும். தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தப் புலிகள் இயக்கம் உண்மையிலேயே விரும்புகிறதென்றால், இப்போது அந்த மக்கள் அனுபவித்துவரும் துயரங்களிலிருந்து அவர்களை விடுவிக்கப் புலிகள் இயக்கம் முன்வர வேண்டும். யுத்த முனையில் அரசாங்கத்தை எதிர்கொள்வதை விடுத்து, பேச்சுவார்த்தை மேசையில் அரசாங்கத்தைச் சந்திப்பதன் மூலம் தமிழ் மக்கள் இன்று அனுபவித்து வரும் துயரங்களைப் போக்க முடியும்.

நல்லெண்ணம், விசுவாசம் ஆகியவற்றுக்கான கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் அதேவேளை, புதிய சமாதான வழிமுறைக்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும். இது, சம்பந்தப்பட்ட தரப்புகளின் நல்லெண்ணத்திலேயே தங்கியுள்ளது.


*(நன்றி : டெயிலிமிரர்)*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

'தலை கொடுத்தான் தம்பி' என்னும் திரைப்படத்திலும், கே.ஆர்.ஆர். நடித்திருந்த போதும் - அவருக்கு என் அருமை நண்பர் திரு.ஏ.எல்.ராகவன்தான் பின்னணியாகக் குரல் கொடுத்துப் பாடினார்.

இதை நான் கே.ஆர். ஆரிடம் சொன்னதை மறுக்காமலும், ஏற்காமலும். மெல்லியதாகப் புன்னகைத்தார்.



அடுத்த வாரமே, நானும் கே.ஆர்.ராமசாமி அவர்களும் நெய்வேலியில் நடைபெற்ற எம்.ஜி.ஆர். ரசிகர்மன்ற மகாநாட்டில் கலந்து கொள்ள நேர்ந்தது.

என் காரில்தான் அவர் என்னுடன் வந்தார். நெய்வேலியை நோக்கிப் பயணிக்கையில் - தமிழ் சினிமாவை அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்துப் போட்டுப் பரிசோதனை செய்தவாறு பேசிக் கொண்டு போனோம்.

பழம்பெரும் இயக்குநர்கள் பற்றியெல்லாம் கே.ஆர்.ஆர். கதை கதையாகச் சொன்னார். யார் யாருக்கு எது எது பலமாக இருந்தது, எவையெல்லாம் பலவீனமாக இருந்தன என்பது பற்றி அவர் பேசியது அனைத்தும் - தொல்பொருள் இலாகாவினர் தோண்டியெடுத்த புதையல் போல் - எனக்கு வியப்பைத் தந்தது.

ராஜா சாண்டோ; ராஜா சந்திரசேகர்; டி.ஆர்.ரகுநாத்; கிருஷ்ணன் பஞ்சு; எம்.எல்.டாண்டன்; முருகதாசா; கே.ராம்னாத்; ஏ.காசிலிங்கம்; கே.சோமு; எச்.எம்.ரெட்டி என்றெல்லாம் தலைசங்க, இடைச்சங்க, கடைச்சங்கப் புலவர்களைப் பட்டியல் போட்டுக் காட்டுதல்போல் - முன்னும் பின்னும் விளங்கிய பல்வேறு இயக்குநர்கள் பற்றிப் பேசிக் கொண்டு வந்தவர், "தமிழ் சினிமாவின் முகத்தைப் புதுமையை நோக்கித் திருப்பிய வகையில், பாலசந்தரைத்தான் ஒரு முன்னோடி என்பேன். நீங்க என்ன சொல்றீங்க?" என்று நிறுத்தினார்.

கே.ஆர்.ஆர்.அவர்களின் கருத்தும், என் கருத்தும் ஒத்துப் போனதால் - அவர் சொன்னதை வழிமொழிந்தேன்.

பாலசந்தர் இயக்கிய படங்களை வரிசைப்படுத்தி உற்சாகமாகப் பிரித்து பிரித்து விமர்சனம் செய்துவிட்டு, "பாலசந்தர் ஒரு பிறவி மேதை" என்று கே.ஆர்.ராமசாமி தன் தீர்ப்பை வழங்க - அதையும் நான் வழிமொழிந்தேன்.

பிறகு எங்கள் பேச்சு, மதுராந்தகத்திலிருந்து திண்டிவனம், வரை பாலசந்தரைப் பற்றியதாகவே இருந்தது.

கதாபாத்திரங்கள், தங்கள் உள்ளக்கிடக்கையை, உரையாடல்கள் மூலமாகவே காலம் காலமாக உணர்த்தி வந்திருக்கிறார்கள். முகபாவங்களும் ஓரளவு துணை செய்தன என்பதும் ஏற்கக்கூடியதுதான். இருப்பினும், காட்சிகளெல்லாம் 'நேரே வா; நேரே போ' என்கின்ற வகையில் நகர்ந்து கொண்டிருந்தன என்பதுதான் நிதர்சன உண்மை. சொல்ல வேண்டியவை, ஓர் உபமான உபமேயத்தோடு சொல்லிக்காட்டவில்லை. 'பத்து வருடங்களுக்குப் பிறகு' என்று படங்களில் எழுதிக் காட்டினார்களே தவிர, அதைப் படம் பாப்பவன் ஊகித்தறியும் வண்ணம் உணர்த்தவல்ல உத்திகள் எதுவும் கையாளப்படவில்லை.

பழம்பெரும் இயக்குநர்களின் படைப்புகள் அனைத்தும் நம் நெஞ்சங்களை நெகிழ வைத்தன என்பது மறுக்க முடியாத உண்மை. ஆயினும் அப்படி நெகிழ வைக்கவும், மகிழ வைக்கவும் கையாளப்பட்ட உத்திகள் நயமாக இருந்தனவே தவிர. நவீனமாக இல்லை. அவர்கள் பழமை விரும்பிகளாக இருந்திருக்கக்கூடும்;

(தொடரும்.......)




# உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....




**ஜெர்மன்** அதிகாரியும் மனிதாபிமானத்தோடு அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். இரண்டாம் முறையும் அது போலவே ஒரு வேண்டுகோள் எல்லைப் பகுதியின் வேறு ஓரிடத்திலிருந்து வந்தபோது உளவுத்துறையினருக்கு சந்தேகம் வந்துவிட்டது. இரண்டாவது பிரேதத்தையும் அனுமதித்தார்கள். அதே சமயம் ஒரு டாக்டரை விட்டு சவப்பெட்டிக்குள் இருந்த பிரேதத்தை பரிசோதிக்கச் செய்தார்கள். அந்த சவத்தின் மூச்சுக் குழாய்க்குள் ஏராளமான செய்திகள் அடங்கிய காகிதச் சுருள் ஒன்று நீர் உட்புக முடியாத பட்டுத் துணியால் பத்திரமாகச் சுற்றப்பட்டு சொருகி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தார்கள்.

### பெண்ணின் சாகசம்

பெல்ஜியத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி. அவள் தன்னுடைய முதுகில் ரசாயன மையினால் செய்திகளை எழுதச் செய்தாள். மை உலர்ந்தவுடன் எழுத்துக்களும் மறைந்து போகும். யாரும் சந்தேகப்படாதபடி சேர வேண்டிய இடத்தில் போய்ச் சேர்ந்தாள். அங்கு சேர்ந்தவுடன் தன்னுடைய மேலுடைகளைக் களைந்து விட்டு குளிர் அடுப்பின் அருகே அமர்ந்தாள். உஷ்ணம் பட்டவுடன் அவளுடைய முதுகில் எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் மீண்டும் தோன்ற ஆரம்பித்தன. செய்திக்குரியவர் அதைத் தெரிந்து கொண்டார். அடுத்தடுத்து இரண்டு நாடுகள் பகை நாடுகளாக இருக்கும்போது ஒரு நாட்டின் எல்லையிலிருந்து காற்றாடியைப் பறக்கவிட்டு அதன் மூலம் எல்லையைத் தாண்டி அடுத்த நாட்டுக்கு செய்தியனுப்புவது ஒரு முறையாக கையாளப்பட்டது. இதைத் தடுப்பதற்காக இரண்டாவது உலகப் போரின் போது நாட்டின் எல்லையை ஒட்டி அமைந்த பகுதிகளில் காற்றாடிகளைப் பறக்க விடுவது குற்றமாக்கப்பட்டு தடை செய்யப்பட்டது.


ஒரு கண் குருடாகப் போனவர்கள் குருடான கண் உள்ள இடத்தில் கண்ணாடிக் கண்ணைப் பொருத்திக் கொள்வதுண்டு. உளவாளி கண்ணாடி கண்ணுக்குள் செய்திகளை வைத்து அதைக் கண்ணில் பொருத்திக் கொண்டு விடுவான். தேவையான போது கண்ணாடிக் கண்ணை வெளியில் எடுத்து செய்திகளைக் கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்து விடுவான்.

சாதாரணமாக எழுதப்படும் கடிதங்களில் வாக்கிய முடிவில் வைக்கப்படும் முற்றுப் புள்ளிகள்கூட சில சந்தர்ப்பங்களில் விசேஷ முக்கியத்துவத்தைப் பெற்று விடுவதுண்டு. ஒரு பக்கம் முழுவதும் நெருக்கமாக எழுதப்பட்டுள்ள விஷயங்கள் அனைத்தையும் ஒரு முற்றுப்புள்ளி அளவில் புகைப்படமாக எடுத்துவிட முடியும். அவ்வாறு எடுத்த புகைப்பட முற்றுப் புள்ளிகளை வாக்கிய முடிவில் இயற்கையாக வைக்கப்பட்ட முற்றுப் புள்ளிகள் போல ஒட்டி விடுவார்கள். மற்றபடி அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங்களுக்கு முக்கியத்துவம் எதுவும் இருக்காது. கடிதத்தைப் பெறுகின்றவர்க்கு எந்த முற்றுப்புள்ளியைப் பெரிதாக்கி (Magnify) விஷயத்தை அறிந்து கொள்வது என்பது தெரியும். அந்த முற்றுப்புள்ளியை மட்டும் அவர் தனியாகப் பிரித்தெடுத்து பெரிதாக்கி விஷயங்களைத் தெரிந்துகொண்டு விடுவார்.

ரேடியோ என்று சொல்லப்படும் கம்பி இல்லா தந்திகள் மூலம் செய்திகளை அனுப்புவது ஒரு முறைதான் என்றாலும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு அனுப்பப்படும் ரகசியச் செய்திகள் எந்த அலை வரிசையில் அனுப்பப்படுகிறது எனத் தெரிந்தால் அதைக் கொண்டு, வாங்கும் கருவிகள் (Receivers) மூலமாக சுலபத்தில் கிரகித்துக் கொண்டுவிட முடியும்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)



# திறமைக்கு வாய்ப்பு!



**லின்ட்சே** லொஹானின் புதிய திரைப்பட மொன்று எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளதாக ஹொலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

'ஜோர்ஜியாரூல்' என இத் திரைப்படத்துக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இத் திரைப்படத்தில் பெயர் பெற்ற நடிகை ஜேன் பொன்டாவும் நடிக்கவுள்ளார்.

லின்ட்சே, இத்திரைப்படத்தை பெரும் எதிர்பார்ப்புடன் நம்பிக் கொண்டிருக்கிறார். இதனால் இத் திரைப்படத்தில் தனது முழுமையான திறமைகளையும் அவர் காட்டப் போகிறாராம்!

# இரும்போ இரும்பு

**ஜெனிபர்** லோபஸ் தற்போது கை, கால்களை விரித்து போட்டு ஓய்வெடுத்து வருகின்றார்.

அதாவது, இசை நிகழ்ச்சிகளில் இருந்து அவர் தற்போது சற்று ஒதுங்கி இருக்கிறார்.

இன்னும் சில தினங்களில் அவர் தாயாகப் போகிறார் என்பதாலேயே இந்த ஓய்வு!

இந்த நிலையில் ஜெனிபரின் வைத்தியர், இரும்புச் சத்து அதிகமாக உள்ள பசளிக் கீரையை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்ளும்படி அவருக்கு ஆலோசனை கூறியுள்ளாராம்.

இதனை அப்படி கடைப்பிடித்து வருவதால் தனது உடம்பு இரும்பாகி விடுமோ என்று அஞ்சுகிறாராம்!

எப்படியோ ரசிகர்களுக்கு 'கரும்பாக' இனித்தவர் இன்று 'இரும்பு' சாப்பிடுவது நல்லது தான் என்கின்றனர் அவரது ரசிகர்கள்.



# அழகானத் திருட்டு

**பிரபல** ஹொலிவுட் நடிகை பெரிஸ் ஹில்டன் தனது எஞ்சிய வாழ்க்கைக் காலத்தை செல்லிடத் தொலைபேசிக்குள் சிறை வைத்து விட்டார் என ஹொலிவுட் வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கான ஒப்பந்தத்தை அவர் அண்மையில் செய்து கொண்டுள்ளாராம்.

இது வீடியோ விளையாட்டு தொடர்பான விடயமாம்.

இவரை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருப்பது இவ் விடயம் தொடர்பில் நிபுணத்துவ மிக்க Gameloft நிறுவனமாகும். இதன் பிரகாரம் பெரிஸ் ஹில்டனின் உருவத்தைக் கொண்டு விளையாட்டுகள் செல்லிடத் தொலைபேசிகள் மலரப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை எனக் கூறப்படுகின்றது.



# வீடியோ ஹில்டன்

**டெஸ்டினிஸ்** சைல்ட் இசைக்குழுவில் உள்ள அழகான கறுப்பினப் பாடகி பியோன்ஸ்.

அழகாக இருந்தால் சரி, ஆனால் திருட்டில் இறங்கினால்?

பியோன்ஸு க்கு எதிராக இப்போது வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளது.

பாடலாசிரியையும், பாடகியுமான ஜெனிபர் ஆர்மர், பியோன்ஸ் பாடுகின்ற 'பேபி போய்' (Baby boy) என்ற பாடல் தன்னுடையது என்றும் இதனை பியோன்ஸ் திருடி விட்டதாகவும் கூறுகின்றார்.

இந்தப் பாடல் 2003ஆம் வருடம் வெளி வந்த பியோன்ஸின் Dangerously In Love என்ற ஆல்பத்தில் அடங்கி உள்ளது. அந்தக் கால கட்டத்தில் இப் பாடல் திருடப்பட்டிருந்தால் ஏன் அப்போதே இது பற்றி தெரிவிக்கவில்லை என்பது பியோன்ஸ் தரப்பு வாதமாகும்.





# அழகு

'**ரிலியம்** ஹாய்மிஸ் ஸ்ரீ லங்கா' அழகு ராணிப்போட்டியில் 2006ஆம் வருடம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார் ஜெக்கொலின் பர்னன்டஸ்!

இப்போட்டி அண்மையில் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

பஹ்ரேனில் பிறந்துள்ள ஜெக்கொலின் அவுஸ்திரேலியா சிட்னி பல்கலைக்கழகத்தில் தகவல் தொலைத் தொடர்புத் துறைப் பட்டம் பெற்றவர்.

தற்போது இவர் 'லங்கா பிஸ்னஸ் ரிப் போர்டில்' பணியாற்றி வருகிறார்.

**ஒருவர்** உயிரோடு இருக்கும்போது புகழ் பெற்ற கலை நிறுவனங்களில் அவரது உருவச் சிலைகள் வைக்கப்படுவது அரிது

எனினும் புகழ்பெற்ற பாடகியான பிரிட்னி ஸ்பியர்ஸுக்கு அந்த வரம் கிடைத்துள்ளது.

அதாவது, நிவ்யோர்க் நகரில் உள்ள Brooklyns Capla Kesting Fine Art Gallery எனும் கலா மண்டபத்தில் இவரது உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது.

டெனியல் எட்வட்ஸ் எனும் சிற்பக் கலைஞர் பிரிட்னியின் உருவச் சிலையை அமைத்துள்ளார்.

டெனியலின் உருவச் சிலைகளில் அநேகமானவை இயற்கையைப் பிரதிபலிப்பனவாகும். இதனால் இவர் பிரிட்னியின் உருவச் சிலைக்கு ஆடைகளை அணிவிக்க வில்லை.



# பிறப்பாடை பாடகி

# பூலான் தேவியின் மறுபக்கம்



## சினிமா

**'சினிமாவில்** நடிப்பீர்களா?" என்று கேட்டதற்கு "அப்படி எதுவும் திட்டம் இல்லை" என்று கூறிய பூலான் தேவி "நான் அமிதாப்பச்சனின் ரசிகை" என்று மட்டும் கூறினார்.

## கிரன்பெடிக்கு பாராட்டு

"என்னை பரோலில் விடுதலை செய்ய சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்ட அன்று இரவு எனக்கு மகிழ்ச்சியால் தூக்கமே வரவில்லை" எனறும் பூலான்தேவி குறிப்பிட்டார்.

டெல்லி ஜெயில் பொலிஸ் "ஐ.ஜி."யாக இருந்த கிரன்பெடியை பூலான்தேவி மிகவும் பாராட்டினாள். "ஜெயில் கைதிகளை கிரன்பெடி மிகவும் நன்றாக கவனித்தார்.

அவர் ஜெயில் "ஐ.ஜி." ஆன பிறகு கைதிகளின் வாழ்க்கை நிலை உயர்ந்தது. திகார் ஜெயில் கைதிகளுக்கு நல்ல உணவு வழங்கப்பட்டது" என்று கூறினார்.

## ஒரே தொகுதியில் 2 முறை வெற்றி

கொள்ளைக்காரியாக இருந்து மனம் திருந்தி சரண் அடைந்த பூலான்தேவி, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 2 முறை "எம்.பி." ஆனார்.

## சீறையில் இருந்தபடி போட்டி

1991ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்தச் சமயத்தில் பூலான்தேவி சிறையில் இருந்தார்.



என்றாலும் சிறையில் இருந்தபடியே டெல்லி பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டார். நடிகர் ராஜேஷ் கன்னாவை (காங்.) எதிர்த்து நின்றார். ஆனால் பூலான் தேவிக்கு வெற்றிக்கனி கிட்டவில்லை. தோல்வி அடைந்தார்.

இருப்பினும் அரசியல் மீது அவருக்கு ஒரு கண் இருந்தது. 1994ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சிறையில் இருந்து விடுதலை ஆனால்.

1994ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆந் திகதி உமத்சிங் என்பவரை பூலான்தேவி திருமணம் செய்து இல்லற வாழ்வில் நுழைந்தார். சமூக சேவையில் அவருக்கு அதிக ஆர்வம் உண்டாகியது.

இதனால் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காக ஒரு சேவை அமைப்பை தொடங்கினார்.

## எம். பி. ஆனார்!

பின்னர் முலாயம்சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாடி கட்சியில் சேர்ந்தார். 1996ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் உத்தர பிரதேசத்தில உள்ள மிர்சா பூர் தொகுதியில் சமாஜ்வாடி கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தார்.

பழைய வழக்குகள் பூலான் தேவிக்கு தொல்லை கொடுத்துக் கொண்டே இருந்தன. கோர்ட்டு படிக்கட்டுகளில் ஏறி இறங்க வேண்டியிருந்தது. இதற்காக பாராளுமன்றம் முன்பு தர்ணா நடத்தினார்.

பிறகு 1999ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் அதே மிர்சாபூர் தொகுதியில் 2 ஆவது முறையாக நின்று அபார வெற்றி பெற்றார். பூலான்தேவிக்கு 2,90,849 ஓட்டுகளும், அவரை எதிர்த்த பா.ஜனதா வேட்பாளருக்கு 84,476 ஓட்டுகளும் கிடைத்தன. அதாவது பூலான்தேவி சுமார் 2 லட்சம் ஓட்டுகள் வித்தியாசத்தில் ஜெயித்தார்.

## மலரும் நினைவுகள்



"நான் பூலான்தேவி" என்ற தலைப்பில் தனது வாழ்க்கை வரலாறு பற்றிய சுயசரிதையை பூலான்தேவி எழுதினார்.

"பாண்டிட் குயின்" சினிமா படம் வெளிவந்தபிறகு சர்வதேச அளவில் பேசப்பட்டார்.

2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி பூலான்தேவி தனது மலரும் நினைவுகள் குறித்து சிறப்புப் பேட்டி அளித்தார். அதில் சில பகுதிகள் :-

**கேள்வி** - நீங்கள் 'பாண்டிட் குயின்' (கொள்ளையர்கள் அரசி) என்ற பட்டம் பெற்றது எப்படி?

**பதில்** - நான் பூலான் தேவியாகத்தான் இருந்தேன். பத்திரிகைகள் தான் அந்த அடைமொழியைத் தந்தன.

**கேள்வி** - 'பாண்டிட் குயின்' சினிமா படம் உங்கள் வாழ்க்கையை கண்ணியமாக சித்தரித்ததா?

**பதில்** - கண்ணியமான படம். இருந்தாலும் அதில் என்னை நிர்வாணமாக சித்தரித்ததை விரும்பவில்லை.



**கேள்வி** - உங்கள் இளம் வயது திருமணம் பற்றி...?

**பதில்** - எனக்கு 11 வயது இருக்கும். அந்த அறியாப் பருவத்தில் 40 வயதுக்காரருக்கு எனது பெற்றோர்கள் திருமணம் செய்து வைத்தார்கள். அவர் ஏற்கனவே 2 திருமணம் செய்தவர். எனக்குப் பிறகும் இன்னொரு பெண்ணை மணந்து கொண்டார். அந்த இளம் வயதில் எனது திருமணம் நடைபெறாமல் இருந்தால் எனது வாழ்க்கைப் பாதை வேறு வழியில் பயணித்து இருக்கும்.

**கேள்வி** - அரசியல்வாதிகள் பெண்களுக்கு எதிராக குற்றம் செய்பவர்கள் என்று கருதுகிறீர்களா?

**பதில்** - அப்படி நினைக்கவில்லை. அரசியல்வாதிகள் பெண்கள் உயர்வுக்காகவே பாடுபடுகிறார்கள். சில பெண்கள் தங்களது சுயநலத்துக்காக அரசியல்வாதிகளை சீரழித்து விடுகிறார்கள்.

**கேள்வி** - உங்களை 40 பேர் கொண்ட கும்பல் கற்பழித்ததா?

**பதில்** - கிராமப்புற வாழ்க்கையில் இது எல்லாம் ஒரு பெண்ணுக்கு சாதாரணமானது.

**கேள்வி** - சாம்பல் பள்ளத்தாக்கில் இன்னும் கொள்ளை நடைபெறுகிறது உண்மையா?

**பதில்** - ஆமாம். அது உண்மை. வறுமையால் இந்த சம்பவங்கள் நடைபெறுகின்றன. அவர்களின் முன்னேற்றத்துக்கு அரசு பாடுபடவேண்டும். அப்படி நடந்தால் மட்டுமே இந்தக் குற்றங்கள் குறையும்.

இவ்வாறு பூலான் தேலி கூறியிருந்தார்.

எம்.பி.யாக இருந்ததால் பூலான்தேவி டெல்லியில் தனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் குடியிருந்து வந்தார்.

(பக்கம் புரளும்)

# 2ஆம் உலகப் போர்

14

**ரஷ்யாவின்** பீரங்கித் தாக்குதலால் பொடிப்பொடியாகிக் கொண்டிருந்த ஹிட்லரின் பாதாள மாளிகையில் ஹிட்லரின் உடலையும், ஈவாவின் உடலையும் உதவியாளர்கள் ஒரு கம்பளிப் போர்வையால் சுற்றினார்கள். பிறகு அந்த உடல்களை அந்த அறையிலிருந்து தலைமைச் செயலகத் தோட்டத்திற்கு தூக்கிக் கொண்டு போனார்கள். அங்கே, பெட்ரோலையும், எரிவாயுவையும் கொண்டு இரு உடல்களையும் எரித்துச் சாம்பலாக்கினார்கள். சில மணி நேரம் கழித்து அங்கு வந்த ரஷியப் படையினர் ஹிட்லரைக் காணாமல் திகைத்துப் போனார்கள். அவர் தற்கொலை செய்து கொண்டதும், பிணம் எரிக்கப்பட்டதும் பிறகு தான் தெரிந்தது. எனினும் ஹிட்லர் சாகவில்லை. தலைமறைவாக இருக்கிறார் என்று நீண்ட காலம் நம்பியவர்கள் ஏராளம்!

ஹிட்லர் ஈவு இரக்கமற்ற கொடியவராக இருந்தாலும், ஆச்சரியப்படத்தக்க வகையில் சில நல்ல குணங்களும் இருந்தன. ஹிட்லர், குழந்தைகளிடமும், பிராணிகளிடமும் அன்பு கொண்டவர். மது அருந்த மாட்டார். புகை பிடிக்க மாட்டார். சைவ உணவே சாப்பிடுவார்.

உலகப் போரின் போது, ஹிட்லரின் பிரசார பீரங்கியாகச் செயல்பட்டவர், கோயபல்ஸ். 1897இல் பிறந்த கோயபல்ஸ், 8 பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி பயின்றவர். தத்துவத்தில் "டாக்டர்" பட்டம் பெற்றவர். சிறந்த பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் மிக்கவர். 1926இல் இவர் ஹிட்லர் மந்திரி சபையில் பிரசார மந்திரியானார். உலகப் போரின்போது, புதுப்புது உத்திகளைக் கையாண்டு, ஹிட்லரின் பெயர் உலகம் முழுவதும் பரவச் செய்தார். (போரில் ஹிட்லர் தோல்வியைச் சந்தித்தபோதும், அவர் வெற்றி பெற்று வருதாகப் பிரசாரம் செய்தார். இதன் காரணமாகப் பொய் பேசுபவர்களை "கோயபல்ஸ்" என்று வர்ணிக்கும் வழக்கம் வந்தது.) ஹிட்லர் மீது இவர் கொண்டிருந்த பக்திக்கு அளவே இல்லை. ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டதற்கு மறுநாள், கோயபல்ஸ் தன் மனைவியுடனும், 6 குழந்தைகளுடனும் விஷம் தின்று தற்கொலை செய்து கொண்டார். குழந்தைகள் 2 முதல் 12 வயது வரை உள்ளவர்கள்.

ஹிட்லர் இறந்தபின் இனி சரண் அடைவது தவிர வேறு வழி இல்லை என்று ஜெர்மனிய தளபதிகள் முடிவு செய்தனர். அதன்படி 1945 மே 8ஆந் திகதி ஜெர்மனி சரணாகதி அடைந்தது. நேச நாடுகளின் தளபதி மக் ஆர்தரிடம் ஜெர்மனி தளபதிகள் சரணாகதி பத்திரம் எழுதிக்கொடுத்தனர். அத்துடன் உலகப் போர் முடிந்திருக்க வேண்டும். ஆனால் போரை நிறுத்த ஜப்பான் மறுத்தது. பசுபிக் மகா சமுத்திரத்தில் போய்க்கொண்டிருந்த அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் ஒன்றின் மீது ஜப்பானிய விமானங்கள் குண்டு வீசின. கப்பல் எரிந்து 343 பேர் பலியானார்கள்.

ஜெர்மனி சரண் அடைந்ததும், அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில், ரஷ்ய அதிபர் ஸ்டாலின் ஆகிய மூவரும், ஜெர்மனியில் உள்ள போஸ்ட்டாம் என்ற இடத்தில் சந்தித்துப் பேசினார்கள். 1945 ஜுலை 17ஆம் திகதி இந்த சந்திப்பு நடந்தது. உடனே சரண் அடையுங்கள். இல்லாவிட்டால் ஜப்பானை அடியோடு அழித்து விடுவோம் என்று மூவரும் ஜப்பானை எச்சரித்துக் கூட்டறிக்கை விடுத்தனர். ஜப்பான் இதை லட்சியம் செய்யவில்லை. தொடர்ந்து போரில் ஈடுபட்டது.

யுத்தம் மேலும் தொடர்ந்தால் விபரீதமாகிவிடும் என்று ட்ரூமன் கருதினார். ஜப்பானை ஒடுக்க அணுகுண்டு வீசுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தார். ஜப்பான் மீது அணுகுண்டு வீசுமாறு, விமானப்படைக்கு கட்டளையிட்டார். 1945 ஆகஸ்ட் 6ஆம் திகதி ஜப்பானிய நேரம் காலை 8 மணிக்கு, ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா நகரம் மீது, எனோலா கேய் என்ற பெயருடைய அமெரிக்க போர் விமானம், உலகின் முதல் அணு குண்டை வீசியது. இந்த அணுகுண்டின் பெயர் 'லிட்டில் பாய்' (சின்னப் பையன்).

ஐந்து டன் எடையுள்ள அணுகுண்டு வெடித்தபோது இடி முழக்கம் போல பயங்கர சத்தம் கேட்டது. வானத்துக்கும், பூமிக்குமாக குடை வடிவில் புகை மண்டலம் சூழ்ந்தது. இரண்டாவது அணு குண்டுவீசப்பட்டதால் ஹிரோஷிமா நகரின் 60 சதவீதப் பகுதிகள், கண் மூடிக் கண் திறப்பதற்குள் தரைமட்டமாயின. 80 ஆயிரம் மக்கள் நொடிப் பொழுதில் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகாயம் அடைந்தனர்.

ஹிரோஷிமா நகரம் அழிந்த பிறகும், சரண் அடைய ஜப்பான் மறுத்தது. எனவே, மூன்று நாட்கள் கழித்து (ஆகஸ்டு 9ஆம் திகதி) அமெரிக்கா தனது இரண்டாவது அணுகுண்டை ஜப்பானின் மற்றொரு நகரமான நாகசாகி மீது வீசியது. இந்த அணுகுண்டின் பெயர் 'குண்டு மனிதன்'. இதனால் நகரின் பெரும் பகுதி அழிந்தது. 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். லட்சக் கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தனர். (அணுகுண்டு வெடிப்பினால் ஏற்பட்ட சாவு பற்றி, அப்போது அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட எண்ணிக்கையே மேலே கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை லட்சக்கணக்கில் இருக்கும் என்று கருதப்படுகிறது.)

இரண்டாவது அணுகுண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் ரேடியோவில் பேசினார். உடனே சரண் அடையாவிட்டால், ஜப்பானை அடியோடு அழித்து விடுவோம் என்று இறுதி எச்சரிக்கை விடுத்தார்.



தற்கொலை செய்து கொள்ளும் முன் ஹிட்லரும் ஈவா பிரவுனும் எடுத்துக் கொண்ட புகைப்படம்

## போர் டைரி - 1943

ஜன.13 : ஸ்டாலின்கிராடில், ஜெர்மனி படைகள் மீது ரஷ்யப் படைகள் அதிரடித்தாக்குதல் நடத்தின.

ஜன.31 : ஸ்டாலின் கிராடில் இருந்த ஜெர்மனிய தளபதி வான் பவுலஸ், ரஷ்யாவிடம் சரண் அடைந்தார். தொடர்ந்து அங்கிருந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஜெர்மனிய இராணுவத்தினர் சரண் அடைந்தனர்.

பெப்.25 : ஜெர்மனிய தளங்களை அமெரிக்காவும், பிரிட்டனும் இரவு பகலாகக் குண்டு வீசித் தாக்கத் தொடங்கின.

மார்ச்.13 : ஹிட்லர் சென்ற விமானத்தை வெடி வைத்து தகர்க்க நடந்த முயற்சி தோல்வி அடைந்தது.

மே.24 : ஜெர்மனியில் உள்ள டார்ட் மண்ட் நகரின் மீது, பிரிட்டிஷ் விமானங்கள் 2 ஆயிரம் டன் எடையுள்ள குண்டுகளை வீசின.

(தொடரும்)



> பாயு மாயிரஞ் சக்திக ளாகியே
> பாரி லுள்ள தொழில்கள் இயற்றுவை
> சாயும் பல்லுயிர் கொல்லுவை, நிற்பன
> தம்மைக் காத்துச் சுகம்பல நல்குவை.
>
> - சுப்பிரமணிய பாரதியார்



# காளையன் மனைவி



காளையனின் மனைவி குள்ளாச்சி மிகவும் ருசியாகச் சமைப்பாள். அவள் கருவாட்டுக் குழம்பு வச்சா ஊரே மணக்கும்.

அவள் தினமும் காளையனுக்கு விதவிதமாக சமைத்துக் கொடுப்பாள்.

ஒரு நாள்...

"குள்ளாச்சி... உன் சமையலை என்னோடு வேலை செய்பவர்களுக்கு கொடுத்தேன். அவர்கள் உன் கை பக்குவத்தை சாப்பிட்டு ரொம்ப பாராட்டினாங்க. உன் கையால கருவாட்டு குழம்புவச்சி ஒரு தூக்கு நிறைய கொடு. நான் அதை அவர்களுக்கு கொடுக்கிறேன்" என்றான்.

"அடேயப்பா! நான் உங்களுக்கு தினமும் செய்து தருகின்ற கத்திரிக்காய் குழம்பு, கருவாட்டு குழம்பெல்லாம் நீங்கள் வேலை செய்யும் இடத்திலும் பரவி விட்டதா? சரி சரி...நீங்கள் கேட்டுக் கொண்டபடியே அதிகாலையில் எழுந்து நான் உங்களுக்கு கருவாட்டு குழம்பை வைத்துக் கொடுக்கின்றேன். நீங்கள் அதனை எடுத்துச் சென்று உங்களோடு வேலை செய்கின்றவர்களுக்கு சாப்பாட்டு நேரத்தில் கொடுங்கள்" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

மறுநாள் அதிகாலையில் எழுந்ததும் கருவாட்டுக் குழம்பு வைத்துக் கொடுத்தாள் குள்ளாச்சி. ஒரு தூக்கு நிறைய குழம்பை எடுத்துக்கொண்டு வந்தான். அன்று மதியம் எல்லாருமாக அந்தக் கருவாட்டுக் குழம்பை ரசித்து ருசித்துச் சாப்பிட்டனர். காளையனோடு வேலை செய்கின்றவர்கள் எல்லாரும் அவனைப் பாராட்டினர்.

"காளையா! நீ கொடுத்து வைத்தவன். உன்னுடைய மனைவி சுவையாக இந்தக் கருவாட்டுக் குழம்பை வைத்துள்ளாள். இதில் சிறிது எடுத்துச் சென்று எங்கள் மனைவிகளுக்கும் சாப்பிடக் கொடுக்கின்றோம். அப்போது தான் அவர்களும் எங்களுக்கு இதனைப் போன்று சுவையாகக் குழம்பு வைத்துக் கொடுப்பார்கள்" என்றனர். அப்படியே செய்யுங்கள் என்றான் காளையன். "மறுநாள் காளையன் வேலைக்குச் சென்றபோது அவனோடு வேலை செய்கின்றவர்கள் எல்லாரும் அவன் மனைவியைப் பற்றி ஆஹா...ஓஹோ..." என்று புகழத் தொடங்கினர்.

"காளையா... கருவாட்டுக் குழம்பைச் சாப்பிட்டதும் எங்கள் மனைவிகள் எல்லாருமே வியப்படைந்துவிட்டனர். 'இதனைப் போன்று சுவை மிக்க கருவாட்டுக் குழம்பை இதுவரையிலும் சாப்பிட்டதில்லையே' என்று கூறியபடி ரசித்து ருசித்துச் சாப்பிட்டனர். நாங்களும் அதனைப் போன்று குழம்பு வைத்துத் தர வேண்டுமென்று அவர்களிடம் கேட்டுள்ளோம். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டு குழம்பு வைத்துத் தருவதாக வாக்குக் கொடுத்துள்ளார்கள்" என்றனர். அதனைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தான் காளையன். ஒரு நாள் காளையனின் நண்பன், தன் மனைவி கருவாட்டுக் குழம்பு வைத்ததாகக் கூறி அவனுக்குச் சாப்பிடக் கொடுத்தான். அந்தக் குழம்பு அப்படியே குள்ளாச்சி வைத்ததுபோலவே இருந்தது.

'இந்தக் குழம்பின் ருசியானது என் மனைவியின் கை பக்குவத்தில் வைத்தது போலயிருக்கின்றதே! நிச்சயமாக இந்தக் குழம்பை என் மனைவிதான் வைத்திருக்க வேண்டும். அவளைத் தவிர வேறு யாருமே இந்த மாதிரி ஒரு குழம்பினை வைத்திட முடியாது. எதுவாக இருந்தாலும் நாம் இதனை வெளியே காட்டிக் கொள்ளாமல் அமைதியுடன் ஆராய்வோம்' என்று மனதுள் நினைத்துக் கொண்டான். அன்று வீடு திரும்பிய காளையன், "உன்னிடம் நான் ஒன்று கேட்பேன் உண்மையைச் சொல்வாயா?" என்றான்.

**பாப்பா முரசு சிறுகதை**

"கேளுங்கள்! சொல்கிறேன்!" என்றாள் குள்ளாச்சி.

"இன்று என் நண்பன் தன் மனைவி வைத்ததாகக் கூறி கருவாட்டுக் குழம்பு கொடுத்தான். அந்தக் குழம்பானது உன்னுடைய கை பக்குவத்தில் செய்தது போலவே இருந்தது. நண்பனின் மனைவி செய்ததாகக் கூறினான். ஆனால் என்னால் அதனை ஒத்துக்கொள்ள முடியவில்லை. அந்தக் குழம்பை நீதான் சமைத்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்" என்றான். அவன் மனைவியோ அவன் கைகளைப் பிடித்து அன்போடு தன் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

"நீங்கள் எத்தனை சமர்த்தர். நான் வைத்தக் குழம்பின் ருசியைக் கண்டுபிடித்து விட்டீர்களே" என்று ஆச்சர்யமாகக் கேட்டாள்.

அப்படியானால் அந்தக் குழம்பு நீ சமைத்ததுதானா" என்று கேட்டான் காளையன்.

"ஆமாம்! அது நான் சமைத்ததுதான்! நீங்கள் வேலைக்குச் சென்ற பின்னர் நம் வீட்டில் நான் குழம்பு வியாபாரம் செய்து வருகிறேன். அந்தக் குழம்பு வியாபாரத்தின் மூலமாகப் பெருந்தொகை ஒன்றினையும் சேர்த்துவிட்டேன். மொத்தமாக பணத்தை உங்களிடம் கொடுக்கலாம் என்றுதான் இதனை நான் உங்களிடம் சொல்லாமல் இருந்தேன். ஆனால் அதனை இப்போதே சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது" என்றாள்.

"நீ என்ன சொல்கிறாய்? குழம்பு வியாபாரமா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!"

"நீங்கள் வேலைக்குச் சென்ற பின்னர் உங்கள் நண்பர்களின் மனைவிமார்கள் எல்லாரும் இங்கே நம் வீட்டிற்கு வந்திடுவர். அவரவர் வசதிக்கேற்ப என்னிடம் பணம் கொடுப்பர். நானும் அவர்களுக்கு குழம்புகள் செய்து கொடுப்பேன். அவர்கள் அதனை வீட்டிற்கு எடுத்துச் சென்று, அவர்களே செய்ததாகப் பொய் கூறி அவர்களின் கணவர்களுக்குச் சாப்பிடக் கொடுப்பர். அவர்கள் என்னிடம் குழம்பு வாங்கிச் செல்வதைக் கண்டு பக்கத்து வீடுகளில் இருந்தும் என்னிடம் குழம்பை விலைக்கு வாங்கிச் செல்கின்றனர். நானும் அவர்கள் எனக்குக் கொடுத்த பணத்தை எல்லாம் சேர்த்து வைத்திருக்கின்றேன். குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு நூறு ருபாயாவது நான் சம்பாதித்திடுவேன்" என்றாள் குள்ளாச்சி. அதனைக் கேட்ட காளையன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.

"நம் தெருவை எடுத்துக் கொண்டால் ஏராளமான பெண்கள் வேலைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். அவர்கள் காலை நேரத்தில் சாதம் மட்டும் வடித்து விடுவர். ஆனால், அவர்களால் குழம்பு, கூட்டு போன்றவற்றை சீக்கிரமாக வைத்திடமுடியாது. அதனால் அவர்கள் என்னிடம் வந்து கூட்டு மற்றும் குழம்புகளை விலைக்கு வாங்கிச் செல்கின்றனர். நான் சமைக்கும் குழம்பைச் சாப்பிட்டு மெலிதான பெண்களும் குண்டாகி வருகின்றனர். அதனால் மெலிதான பெண்கள் எல்லாருமே என்னிடம் குழம்பு வாங்குகின்றனர். என்னுடைய வியாபாரமும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது" என்றாள் அவன் மனைவி. "சே! ஒவ்வொரு மனிதனுக்கும் இப்படியொரு மனைவி அமைந்தால் எத்தனை நல்லா இருக்கும்" என்று கூறி குள்ளாச்சியின் கைகளைப் பிடித்துக் கொண்டான் காளையன்.

# ஆத்திசூடி

## பீடு பெற நில்

நீ உன் சொல்லாலும் செயலாலும் பெருமை ஏற்படும் படியாக நட.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# சிரமதானச் சிந்து
# சிரமதான சேவையே!

சிரமதான சிரமதான சிரமதான சேவையே
தருமதான நெறியுயர்ந்த சிரமதான சேவையே!!

ஊரும்பேரும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பிற்கூடியே
வேர்வைசிந்தி வேலை செய்யும் சிரமதான சேவையே!

காடுவெட்டிக் களனியாக்கிக் கதிரடித்துக்காணலாம்
பாடுபட்டுப் பாதைபோட்டுக் குடிமனைகள் காணலாம்.

ஆறுகுளம் தேடிவரும் வானமழை நீரெலாம்
ஆனமட்டும் அணைவகுத்துத் தேக்கிவைத்துப் பாய்ச்சலாம்.

எவ்வினமும் சந்ததியும் என்றும் ஒன்றுகூடியே
நின்றுயர நீதிநிலை நாட்டும் உயர்சேவையே.

பேனைமுனை வாழ்வை நம்பிப் பேதலித்து மாளாமல்
ஏர்முனையில் ஏற்றமிகு வாழ்வுதரும் சேவையே.

சாதிமத மோடு இனவாத பேதம் மாளவே
ஓரினமாய் ஒன்றிணைந்து உழைத்துயரும் சேவையே.

# அதிசய உலகம்

## விண்வெளியில் பாதுகாப்பு!

**விண்வெளி** வீரருக்கு விண்வெளி உடை எந்த அளவுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்? விண்வெளி உடை இல்லாமல் விண்கலத்தில் இருந்து விண்வெளி வீரர் கீழே விழுந்து விட்டால் அவருக்கு என்ன ஆகும்?

விண்வெளி உடை என்பது சிறிய விண்கலத்துக்குச் சமமானது. ஒக்ஸிஜனை அந்த உடை சப்ளை செய்யும். வெளியே அழுத்தம் குறைவாக இருக்கும் என்பதால் விண்வெளி வீரருக்கு சரியான அழுத்தத்தை இந்த உடை வழங்கும். விண்கலத்துக்கு வெளியே விண்வெளி வீரர் இருக்கும் போது சிறிய விண்கற்கள், கதிரியக்கம், கடும் வெப்பநிலை போன்றவற்றில் இருந்து வீரரை இந்த உடைதான் பாதுகாக்கும். விண்வெளி வீரர் ஒருவர் விண்கலத்தில் இருந்து இந்த உடை இல்லாமல் கீழே விழுந்துவிட்டால் போதுமான ஒக்ஸிஜன் இல்லாமலேயே அவர் இறந்து விடுவார். மேலும் போதுமான அழுத்தம் இல்லாததால் அவர் உடலில் உள்ள இரத்தம் மற்றும் திரவம் கொதிக்க ஆரம்பித்துவிடும். கடும் குளிர் அவரை உடனடியாக உறைய வைத்து விடும். ஒரு நிமிடத்திற்கு மேல் அவரால் உயிருடன் இருக்க முடியாது. உடல் அழுக ஒக்சிஜன் தேவை. விண்வெளியில் ஆக்சிஜன் இருக்காது. எனவே, விண்வெளியில் உடல் கெட்டுப் போகாது.

## அஸ்வான் டாம் (அணை) எங்குள்ளது?


**எகிப்தில்** உள்ள நைல் நதியின் குறுக்கே இது கட்டப்பட்டுள்ளது. எகிப்து தேசத்தின் முக்கால்வாசிப் பகுதி பாலைவனப் பகுதி யாகும். இதில் 3.6 சதவீத நிலப் பகுதியில் தான் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. மழைக் காலத்தில் பயங்கரமான வெள்ளப் பெருக்கு இருக்கும். இதனால் எகிப்தில் பெரும் பாதிப்பு ஏற்படும்.

எனவேதான் நைல் நதியின் குறுக்கே அஸ்வான் ஹை டாம் கட்டப்பட்டது. இது மழைக் காலத்தில் தண்ணீரைச் சேர்த்து வைத்து வறண்ட காலத்தில் பயிர்களுக்கு உதவும்படி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நைல் நதியின் நீர்ப் பெருக்கு திடீரென்று மாறும். இதனால் பயங்கர பாதிப்பு எகிப்துக்கு ஏற்படும். இப்போது இந்த அஸ்வான்



டாமானது நைல் நதியைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ருபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 16.05.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 643**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 641

**பரிசுக்குரியவர்:**
செல்வி. ஏ.ஜே.பாத்திமா பஸ்னா,
61/1A/1 மகாபுத்கமுவ. முல்லேரியா

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஆன் டிலுக்ஷி டேவிட் ரவிக்குமார், 82, புதிய செட்டி தெரு, கொழும்பு - 13. | திவாணி நவக்குமார், தரம் 3, 92 ஏ, வட்டாரந்தன்னை வீதி, கண்டி. |
| எப்.எம். இஸ்ஹாக், 8C, பழைய சந்தை வீதி, ஏறாவூர் - 3A. | பாத்திமா நஸ்லா, 295/2, மடவெல பஸார். |
| எப்.ஏ.எம்.அய்தாப், 4C, அஸ்ஹர் மத்திய கல்லூரி, மாத்தளை வீதி, அகுரணை. | ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| யோ.சிவரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | மர்சியா நாபிர், 11/2A, பாக்கீர் மாக்கார் அவனியூ, மருதானை, பேருவளை. |
| ஏ.எச்.எப். இப்பத், 39/5, வான் வீதி, புத்தளம். | த.திவ்யா, புதிய தெரு, உப்புக்குளம், மன்னார். |

# உங்கள் பொது அறிவு எப்படி?

## உலகம் (கி.மு.)

| | |
|---|---|
| 776 | - கிரீஸில் முதல் ஒலிம்பிக்ஸ் துவக்கம். |
| 753 | - ரோம் உருவாக்கப்பட்டது. |
| 700 | - பெர்ஷியாவில் ஸொராஸ்டிரியன் யுகம். |
| 563 | - கௌதம புத்தர் பிறப்பு. |
| 508 | - ஏதென்ஸில் கிரீஸ் ஜனநாயக ஆட்சி. |
| 483 | - புத்தர் இறப்பு. |
| 399 | - சாக்ரட்டீஸ் கொல்லப்படுதல். |
| 336 | - அலெக்சாண்டர் மாஸிடோனிய மன்னர் |
| 327-26 | - அலெக்சாண்டர் இந்தியாவை வெல்லுதல். |
| 221 | - சீனப் பெருஞ்சுவர் கட்டப்படுதல். |
| 55 | - ஜூலியஸ் சீசர் பிரிட்டனைக் கைப்பற்றுதல். |





# கல்யாணமாம் கல்யாணம்

இங்கிலாந்தின் சமர்ஷேட்டில் ரோபேடோ என்ற ராஜ ஆண் முயலுக்கும் ஹமி என்ற பெண் முயலுக்கும் அண்மையில் நடந்த நிகழ்வொன்றின் போது திருமணம் செய்து வைக்க அதன் உரிமையாளர்கள் இணங்கினார்கள். இப் புதிய தம்பதியினர் திருமணப் புகைப்படத்துக்குக் கொடுத்த போஸ்தான் இது.



# பிடிக்க முடியுமா?



**சரணாலயமொன்றில்** இருந்து தப்பிச் சென்று வாகனச் சாரதி ஒருவரைக் கொலை செய்து, உல்லாசப் பயணிகள் மூவருக்குக் காயத்தையும் ஏற்படுத்திய 20 சின்பன்சிகளைக் கைது செய்வதற்கு சீயேராலியோன் பொலிஸார் கடும் முயற்சி எடுத்து வருகின்றனர். பொலிஸாரிடமிருந்து தப்பி ஒளிந்து கொண்டிருக்கும் ஒரு சின்பன்சியே இது.

# இதுவும் கலையா?

**இப்படத்தைப்** பார்த்தவுடனே இது ஏதோ நாசகார ச்க்திகளின் சதி வேலையோ என்று எண்ண வேண்டாம். ஏனெனில் இதுவும் ஒரு கலை அலங்காரமாம். இங்கிலாந்தின் பென்ச்சி நகர வீதிக் கலைஞர் நிர்மாணமே இது.




# நொறுங்கிய விமானம்

**அமெரிக்காவின்** டோரா விமானப்படைத் தளத்திலிருந்து வானுக்குப் புறப்பட்ட சில நொடியிலேயே மீண்டும் தரையிறக்கம் செய்யப்பட்ட இவ் விமானம், பல பாகங்களாகப் பிரிந்தே முடிவுக்கு வந்தது. அதிர்ஷ்டவசமாக இதில் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.




**கணனிகளில்** தகவல்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தும் கீ போர்ட்டின் மாதிரி அமைப்பில் வடிவமைக்கப்பட்ட இவ் விசேட சப்பாத்து, அண்மையில் சீனாவில் நடந்த, புடைவை ஆடைகள், உபகரணங்களின் சர்வதேச கண்காட்சி ஒன்றின் போது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

**ஜெர்மன்** வாசியான டிட சென்ட் அண்மையில் ஜெர்மனியில் உருவாக்கிய உலகிலேயே மிகப் பெரிய துவிச்சக்கரவண்டியே இது. இதற்காக அவர் 100 உதைபந்துகளைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வருடம் ஜெர்மனியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டிக்கு விளம்பரப் செய்யும் முகமாகவே இவ்வாறு இவர் உதைபந்துகளைப் பயன்படுத்தினாராம்.

# கீ போர்ட் சப்பாத்து



# ஓட்டும் பந்து





ஹிர்த்திக் - லாராதத்ரா
கிரிஷ்



ஹிர்த்திக் கிரிஷ்

## 'கிளியோபாட்ரா' சில வரிச்

* கிளியோபாட்ரா முழுக்க முழுக்க இளைஞர்களுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த ஜனரஞ்சகப் படமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. குணால்-விக்கிரமாதித்யாவின் நகைச்சுவைக் காட்சிகள் தியேட்டரையே குலுங்கச் செய்யும் வகையில் படமாக்கப்பட்டிருக்கிறது.

* தேனிசைத் தென்றல் தேவாவின் ஐந்து பாடல்களும் மிகச் சிறப்பாக உருவாக்கப் பட்டுள்ளன. ஆசை, வாலி-க்குப் பிறகு இந்தப் படத்தின் பாடல்கள் அனைத்தும் பேசப்படும் வகையில் அமைந்துள்ளன.

* நீண்ட நாட்களுக்குப் பிறகு நடிகர் வினுச்சக்கரவர்த்தி காமெடி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். வினுச்சக்கரவர்த்தி பங்குபெறும் காட்சிகள் தியேட்டரையே அதிரச் செய்யும் சிரிப்பு வெடிகள்.

* விசில் படத்தை அடுத்து நடிகர் விக்ரமாதித்யா கதாநாயகனாக காமெடி கதாபாத்திரத்தில் கலக்கியிருக்கிறார்...

* தமிழ் சினிமாவில் முழுக்க முழுக்க கோவாவில் எடுக்கப்பட்ட முதல் தமிழ்ப் படம் கிளியோபாட்ரா. இத்திரைப் படத்தின் கதை முழுவதும் கோவாவிலேயே நடப்பதால் கோவாவை சுற்றியே படமாக்கப்பட்டுள்ளது.

* இப்படத்தில் இடம் பெற்றுள்ள 5 பாடல்களுக்கும் நடனம் அமைத்துள்ளார் நடன இயக்குநர் பாலாஜி.

* பாடலாசிரியர் யுகபாரதி ஐந்து பாடல்களையும் எழுதியுள்ளார்.

# சி னி வி சி ட்

## பப்.... பளபள த்ரிஷா!

த்ரிஷாவின் உடம்பில் இப்போதெல்லாம் புது மெருகு. அதற்கு, அவரது சமீபத்திய சிங்கப்பூர் விசிட்தான் காரணமாகும்.

நடிகைகள் விஷயத்தில் காஸ்மெட்டிக் சர்ஜரிகள் வெகு சாதாரணமானவை. மூக்கை சரி செய்வது, புருவத்தை திருத்தியமைப்பது, முன்னழகைக் கூட்டவும், பின்னழகை திருத்தவும் என ஏகப்பட்ட அறுவைச் சிகிச்சைகள் சென்னையிலேயே செய்யப்படுகின்றன.

மூக்கை சரி செய்த பின்னர் ஸ்ரீதேவி தேசிய நடிகையானார். அவரைத் தொடர்ந்து ஏகப்பட்ட நடிகைகள் 'என்னென்னத்தையோ' திருத்திக் கொண்டார்கள். சமீபத்தில் கூட நடிகை சந்தியா தனது தட்டையான மூக்கை தட்டிச் சரிப்படுத்த ஆலோசனை கேட்டுள்ளார்.

நம்ம த்ரிஷாவும் இப்போது தனது உடலில் சில மாற்றங்களைச் செய்து கொண்டுள்ளாராம். த்ரிஷா எதையும் அறுத்து சரி செய்யவில்லை. மாறாக உடலில் மினுமினுப்பைக் கூட்டுவதற்காக ஒரு சிகிச்சையை மேற்கொண்டுள்ளாராம்.

சிகிச்சை நடந்தது இங்கல்ல. சிங்கப்பூரில். தோலின் பளபளப்பு குறைந்து வருவதாக தோன்றியதாம் த்ரிஷாவுக்கு. சிங்கப்பூருக்கு வண்டி ஏறினார்.

இந்த சிகிச்சைக்குப் பின்னர் தோலின் பளபளப்பு அதிகரித்து, ஜிலுஜிலுவென மின்னுகிறாராம் த்ரிஷா. தோலுக்கு பாலிஷ் போட்டகையோடு, சிரஞ்சீவியுடன் நடித்து வரும் தெலுங்குப் படமான ஸ்டாலின் ஷூட்டிங்குக்குப் போய் விட்டார் த்ரிஷா. அவரைப் பார்த்த சிரஞ்சீவியே 'அடடே' என்று ஆச்சரியப்பட்டாராம்.

ஸ்டாலினில் நடிக்கும் அதே நேரத்தில் விக்ரமோடு பீமாவிலும் ஜோடி சேர்ந்திருக்கிறார் திரிஷா என்பதுதான் தெரியுமே. விக்ரமோடு மீண்டும் ஜோடி போடுவதால் திரிஷாவின் பளபளப்பு மேலும் அதிகரிக்கும் என்கிறார்கள் கோலிவுட்டில்.

இது தவிர பிரஷாந்த் நடிக்கும் பெட்ரோல் படத்திலும் ஹீரோயின் தேடித் தேடி அலைந்து யாரும் கிடைக்காததால் த்ரிஷாவை கெஞ்சிக் கூத்தாடி புக் செய்திருக்கிறார்கள்.



ஸ்ரீகாந்த் - பாவானா
கிழக்கு கடற்கரை

## கச்சேரிக்குத் தயார்!

**தான்** நடித்து வரும் படங்களில் தன்னுடைய போர்ஷன்களை வேகமாக முடிக்குமாறு இயக்குநர்களுக்கு அன்புக் கட்டளை பிறப்பித்துள்ளார் ஜோதிகா. விரைவில் ஜோ, சூர்யா கல்யாண செய்தி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவுள்ளதாம்.

ரொம்ப காலமாக இரகசியமாகக் காதலித்து வந்த சூர்யா, ஜோதிகாவின் காதல், சில காலத்திற்கு முன்பு அம்பலமானது. அதற்கு முன்பு வரை நாங்களா, காதலர்களா என்று கேட்டு வந்த சூர்யாவும், ஜோதிகாவும், நாளடைவில் மறுப்பை விட்டு விட்டு புன்னகையை மட்டும் பதிலாக அளிக்க ஆரம்பித்தனர்.

இருவரது காதலும் எல்லாப் பேருக்கும் தெரிந்து விட்டதால் இருவரையும் சேர்த்து பல பட விழாக்களில் காண முடிந்தது. ஃபிலிம் பேர் விருது விழாவில் கலந்து கொண்டு சிறந்த நடிகருக்கான விருதை வாங்கிய சூர்யா, எல்லா புகழும் ஜோவுக்கே என்று பாராட்ட, ஜோவின் முகம் தாமரை போல சிவந்து மலர்ந்தது. பதிலுக்கு சூர்யாவை அவரும் பாராட்டித் தள்ளினார்.

அதன் பிறகு இரண்டு பேருக்கும் ரொம்பத் தைரியம் வந்து விட்டது. விரைவில் எங்களுக்குக் கல்யாணம் நடைபெறும் என்று ஜோதிகா ஓபனாகவே செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

'அப்பாடா ஒரு வழியாக ஒத்துக்கிட்டாங்கப்பா' என்று அத்தனை பேரும் சந்தோஷ நிம்மதியை அடைந்தனர்.

எப்போ எப்போ என்று எதிர்பார்க்கப்பட்டு வந்த ஜோ, சூர்யா கல்யாணம் இப்போது ஒரு வழியாக முடிவாகி விட்டதாக உறுதியாகத் தெரிகிறது.


இதற்கு முன்னோட்டமாக ஜோதிகா நடித்து வரும் படங்களின் ஷூட்டிங்கை வேகமாக முடிக்குமாறு சம்பந்தப்பட்ட படங்களின் இயக்குநர்களை ஜோதிகா கேட்டுக்கொண்டுள்ளாராம்.

ஜோ இப்போது மொழி, 'ஜில்லென்று ஒரு காதல்', 'மணிகண்டா' ஆகிய படங்களில் நடித்து வருகிறார். அதில் 'ஜில்லென்று ஒரு காதலில்' ஜோவுக்கு ஜோடியாக நடிப்பவர் சூர்யாதான்.

'மணிகண்டா'வில் அர்ஜுனுடன் நடிக்கிறார். 'மொழி' - பிரகாஷ்ராஜின் சொந்தப் படம்.



ரவீ - த்ரிஷா
சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்



## ஹீரோயின் பஞ்சத்தில் விஜய்!

**விஜய்யின்** புதிய படத்திற்கு ஹீரோயின் கிடைக்காமல் பெரும் திண்டாட்டமாக உள்ளதாம்.

தொடர்ந்து வெற்றிப் படங்களாகக் கொடுத்து வந்த விஜய்க்கு, ஆதி பெரும் அடியைத் தந்தது. படம் ஃபிளாப் ஆனதால் விஜய் பெரும் அப்செட் ஆகிவிட்டார். ஆனால் அவரது திரையுலக 'எதிரி'யான அஜீத் அடுத்தடுத்து இரண்டு ஹிட் படங்களைக் கொடுத்துவிட்டார்.

முதலில் வந்த பரமசிவனும், லேட்டஸ்டாக வந்த திருப்பதியும் அஜீத்துக்கு தெம்பு கொடுக்கும் வகையில் அமைந்துள்ளன.

அடுத்ததாக காட்ஃபாதர் படம் ரிலீஸுக்குத் தயாராக உள்ளது.

இதனால் விஜய் டென்ஷனாக உள்ளார். உடனடியாக ஹிட் படம் ஒன்றைக் கொடுத்தாக வேண்டும் என்ற வேகத்தில் இருந்த விஜய்க்கு சரியான கதை அமையாமல் பெரும் சிக்கல் ஏற்பட்டது.

இப்போது அது ஒரு வழியாகத் தீர்ந்து விட்டது. தெலுங்கில் தரணி இயக்கத்தில் மிகப் பெரிய பட்ஜெட்டில் உருவாகி வரும் பங்காரம் படத்தை தமிழில் ரீமேக் செய்கிறார்கள்.

தமிழில் தயாரிக்கப் போவது ஃபிரண்ட்ஸ் படத்தைத் தயாரித்த கேரளத்து அப்பச்சன். விஜய் ஹீரோவாக நடிக்கிறார்.

வித்யாசாகர் இசையமைக்கிறார். படத்தை இயக்கப்போவது பரதன்.

இவர் கில்லி படத்தில் தரணியிடம் உதவியாளராக இருந்தார்.

அப்போது விஜய்யுடன் ஏற்பட்ட நட்பாலும், அவரது திறமையை நன்கு அறிந்திருந்ததாலும், பங்காரம் படத்தின் தமிழ் ரீமேக்குக்கு அவரையே இயக்குநராகப் போட விஜய் முடிவெடுத்தார்.

படத்தின் டெக்னீஷியன்கள் அனைவரும் முடிவாகி விட்டாலும் முக்கியமான மேட்டர் ஒன்று இன்னும் முடியாமல் இழுபறியாக உள்ளது. அதுதான் ஹீரோயின்.

விஜய்க்கு ஏற்ற ஹீரோயின் கிடைக்கவில்லையாம். பங்காரம் ஒரிஜினல் படத்தில் நாயகன் பவன் கல்யாணுக்கு ஜோடியாக நிலாவும், ரீமாசென்னும் நடிக்கிறார்கள்.

விஜய்க்கு ஜோடியாக யாரைப் போடுவது என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறார்களாம்.

முதலில் அசினை யோசித்துள்ளார்கள். ஆனால் ஹீரோயினுக்கு இதில் நடிக்க வாய்ப்பே இல்லை என்பதால் அசின் மறுத்து விட்டாராம். அடுத்து த்ரிஷாவை பிடித்துள்ளார்கள். ஆனால் அவர் பயங்கர டைட்டில் இருப்பதால் இப்படத்தில் நடிக்க முடியாத நிலையாம்.

விக்ரமின் பீமா தொடங்கிவிட்டது. சூர்யாவின் ஜில்லென்று ஒரு காதல் வரப் போகிறது. அவர்களோடு சேர்ந்து நமது படம் வர வேண்டும். இல்லாவிட்டால் மார்க்கெட்டில் சரிவு ஏற்பட்டு விடும் என்று டென்ஷனாக இருக்கும் விஜய்க்கு, ஹீரோயின் கிடைக்காமல் இழுபறி ஏற்பட்டிருப்பது கூடுதல் டென்ஷனைத் தந்துள்ளது.



இஷா கோபிகர்

# படத்தின் செய்திகள்

* ஆட்டோகிரா∴ப் படத்தில் நடித்த நகைச்சுவை நடிகர் வேல் முருகன் தனி ஆவர்த்தனமாக நகைச்சுவை கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

* கிளியோபாட்ரா தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் தமிழ்ப் புத்தாண்டில் ரிலீஸ் செய்யப்பட உள்ளது.

* 'ஆளில்லா காட்டுக்குள்ள அத்தமக நீயிருந்தா...' என்ற பாடலில் விசாகப் பட்டினத்தில் உள்ள ஒரிஜினல் சபாரி டான்ஸர் (காட்டுவாசி நடனம்)-ஒருவரை வைத்து நடனமமைத்துள்ளார் நடன இயக்குநர் பாலாஜி.



விக்ரம் - த்ரிஷா
பீமா

# சேரனுக்கு ஜோடி அசின்

**அசின்** நிலைமை ரொம்ப மோசமாகி விட்டது. அடுத்தடுத்து சில முக்கியமான படங்கள் கை நழுவிப் போய் விட்டதால் படு வருத்தத்தில் இருக்கிறார் அசின். இந்தியில் எடுக்கப்படவுள்ள கஜினி மட்டுமே அசினிடம் இப்போதுள்ள ஒரே படம்.

ரொம்ப வேகமாக முன்னேறி வந்தவர் அசின். இப்போது இறங்கு முகத்திலும் வேகமாக இருக்கிறார். கஜினி என்ற மிகப் பெரிய ஹிட் படத்தில் நடித்திருந்தும் அடுத்தடுத்து பட வாய்ப்புகள் இல்லாதால் ரொம்ப நாள் வீட்டிலேயே அமர நேரிட்டது அசினுக்கு.

இதையடுத்து விஜய்யுடன் மீண்டும் ஜோடி சேரும் சான்ஸ் கிடைத்தது. அப்பச்சன் தயாரிப்பில் உருவாகவுள்ள இப்படத்தில் அசினை போடக்கூடிய வாய்ப்புகள் கூடி வந்த நேரத்தில் அதை விஜய்யே தடுத்து விட்டாராம்.

அசினுக்குப் பதில் மல்லிகா கபூரை, ('அழகாய் இருக்கிறாய், பயமாய் இருக்கிறது' பட நாயகி) போட பச்சைக் கொடி காட்டியுள்ளார் விஜய். இதனால் அசினுக்கு ரெட் போடப்பட்டுவிட்டது.

இப்படியாக ஒரு படம் கூடி வராமல் வீட்டில் உட்கார்ந்திருக்கிறார். இருந்தாலும் நேரத்தை வீணடிக்காமல் ஏகப்பட்ட விளம்பரப் படங்களில் படு பிசியாக நடித்துக் கொண்டுதான் இருக்கிறார்.

இந்நிலையில் கஜினியை இந்தியில் எடுக்கப் போகிறார்கள். சூர்யா வேடத்தில் நடிக்கப் போவது அமீர்கான். இதில் அசினையே நாயகியாகப் போடவிருக்கிறார்களாம். அதுவும் கன்பர்ம் ஆகவில்லை.


அதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார் அசின் சேச்சி.

இந்நிலையில் சேரனுடன் ஜோடி சேர ஒரு வாய்ப்பு அசினுக்கு வரும் போலத் தெரிகிறது.

தெலுங்கில் படு சக்ஸசான மிஸ்ஸம்மா என்ற படத்தை அதை இயக்கிய நீலகண்டா என்ற இயக்குநர் தமிழிலும் எடுக்கத் திட்டமிட்டுள்ளாராம்.

படத்தை அதே பெயரில் எடுக்கவும் ஹீரோவாக சேரனைப் போடவும் முடிவு செய்துவிட்டார். ஹீரோயின் யாரு என்று நீண்ட யோசனை செய்து அசினை இப்போது பைனலைஸ் செய்துள்ளார்களாம்.

இது தொடர்பாக நீலகண்டாவிடம் இருந்து போனை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்.



லாராதத்ரா கிரிஷ்

# அவள் அப்படித்தான்!

**ரஜினி–கமல்** நடித்த படம் "அவள் அப்படித்தான்." இதில் அவளாக நடித்து அசத்தியவர் ஸ்ரீப்ரியா. ருத்ரய்யா இயக்கிய, தமிழில் பேசப்பட்ட படங்களில் ஒன்று 'அவள் அப்படித்தான்'. நீண்ட இடைவெளிக்குப் பிறகு 'அவள் அப்படித்தான்' என்று மீண்டும் ஒரு படம் தயாராகிறது. ஆனால் இந்தப் படத்தில் ஒரு அவள் இல்லை. மூன்று அவள்கள். மும்தாஜ், அபிநயஸ்ரீ, தனுராய் என முப்பெருந் தேவிகள் மொத்தப் படத்தையும் குத்தகைக்கு எடுத்து கலக்கிக் கொண்டிருக்கிறார்கள்.



# சேரனுக்கு வந்த வித்தியாசமான மிரட்டல்!

"'**ஆட்டோகிராப்**' படத்திற்காகக் கிடைத்த விருதை, தவமாய் தவமிருந்து படத்தில் சிறப்பாக நடித்த ராஜ்கிரணுக்கு கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நடப்பதே வேறு" என்று தொலைபேசி மூலம் இயக்குநர் சேரனுக்கு கிறுக்குத்தனமாக மிரட்டல் விடுத்த நபருக்கு பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

சேரன் இயக்கி, நடித்த தவமாய் தவமிருந்து படத்தில் சேரனின் தந்தையாக ராஜ்கிரண் நடித்திருந்தார். நடித்திருந்தார் என்பதை விட தந்தை வேடத்தில் வாழ்த்திருந்தார் ராஜ்கிரண்.

விக்ரமை விட மிகச் சிறந்த நடிகர் ராஜ்கிரண்தான் என்று சேரன் கூட அவரைப் புகழ்ந்தார்.

இந்நிலையில் சேரனுக்கு நூதனமான ஒரு மிரட்டல் வந்துள்ளது. அவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஒருவர் - 'தவமாய் தவமிருந்து' படத்தில் உங்களை விட ராஜ்கிரண் சிறப்பாக நடித்துள்ளார். எனவே 'ஆட்டோகிராப்' படத்திற்காக உங்களுக்குக் கிடைத்த விருதை ராஜ்கிரணுக்குக் கொடுத்து விடுங்கள். இல்லாவிட்டால் நடப்பதே வேறு என்று கூறி விட்டு தொலைபேசியை வைத்துவிட்டார்.

குழம்பிப் போன சேரன், எதற்கும் இருக்கட்டும் என்று பொலிஸில் புகார் கொடுத்தார்.

பொலிஸார் சேரனுக்கு வந்த அழைப்பு எங்கிருந்து செய்யப்பட்டது என்று விசாரணை நடத்தினர். இதில் விருதுநகரில் உள்ள ஒரு பொதுத் தொலைபேசி மையத்திலிருந்து அந்த போன் செய்யப்பட்டது தெரிய வந்தது.

அந்த மர்ம நபரைப் பிடிக்க பொலிஸார் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

# நமீதாவின் இந்திப் படம்

**நம்ம** நமீதா எப்போவோ நடித்த இந்திப் படம் இப்போது வெளியாகப் போகிறதாம்.

இந்திக்காரர்கள் உலக சினிமா எடுப்பவர்கள் ஆயிற்றே... ஒரு படத்தை 4 வருசத்துக்காவது இழுத்து எடுத்து ரிலீஸ் செய்தால் தான் அங்கே டைரக்டருக்கு மரியாதை கிடைக்கும். சட் சடாரென படத்தை முடித்தால் அவரை மக்கு மாதிரி தான் பார்ப்பார்கள்.

ஆனால், தேசிய அளவில் மார்க்கெட் இருப்பதால் ரூ.20 கோடியில் (இதான் சராசரி இந்திப்பட பட்ஜெட்) தயாராகும் படங்கள் 4 வருடம் கழித்து வந்தாலும் போட்ட காசை எடுத்துவிடுகின்றன.

நாடு பூராவும் 2 வாரம் ஓடினாலே போட்ட காசைப் பார்த்துவிடலாம். இதனால் தான் கதை இருக்கிறதோ, இல்லையோ, வெறும் சதையை வைத்தே ஏகத்துக்கும் படங்கள் வந்து குவிந்து கொண்டே இருக்கின்றன.

கிட்டத்தட்ட இதில் பாதி செலவில் தயாரிக்கப்படும் தமிழ், தெலுங்குப் படங்களுக்கு மார்க்கெட் சிறியது என்பதால் படம் 50 நாளாவது ஓடினால்தான் தயாரிப்பாளர் தலைக்கு துண்டு விழுவது மிஞ்சும்.

இந்நிலையில் பியார்கா சக்கர்மே படம் ஒருவழியாக எடுத்து முடிக்கப்பட்டுவிட்டதாம். இப்போது அந்தப் படம் ரிலீசுக்கு தயாராகிவிட்டது. தமிழ்நாட்டில் நமீதாவுக்கு உள்ள மவுசை அறிந்த தயாரிப்பாளர் இங்கும் அந்தப் படத்தை ரிலீஸ் செய்யப் போகிறாராம்.

இது இப்படி என்றால் நமீதா நடித்த 'நீ வேணும்டா செல்லம்' படம் மொத்தமே 47 நாட்களில் எடுத்து முடிக்கப் பட்டதாம்.



# "உக்குஸ்சோ" திரை நாடகம் ஆரம்பிக்கப்பட்டது

**திரை நாடக** வரலாற்றில் இலங்கையில் பல வெற்றி அடைந்து இன்னும் மக்கள் மனதில் இருக்கும் நாடகங்கள் பல உள்ளன. சிங்கள நாடகமாக இருந்தாலும், தமிழர் மனதிலும் அவை பதிந்தே உள்ளன.

அந்த வகையில் பல வெற்றி நாடகங்களைத் தந்த தயாரிப்பாளர் சரத் நாவல்கம இன்னுமொரு வெற்றி காவியமான "உக்குஸ்சோ" (கழுகு) எனப்படும் நாடகத்தினை தயாரித்துள்ளார். இந்த நாடகமானது ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இரவு 8.10 மணிக்கு சுயாதீன தொலைக்காட்சி சேவையில் (ITN) ஒளிபரப்பாகின்றது. இவரின் முன்னைய நாடகங்களான 'கிரிஅம்மாவரு' 'ஆதர வந்தியோ', 'சிஹினியத்' 'பட்டபத்தி' என்பன மிகப் பிரபல்யமானவை.

உக்குஸ்சோ நாடகத்தில் சரத் நாவல்கமவே நடித்தும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. முக்கிய நடிக, நடிகைகளாக சேமினி தமல்கொட, ரமணி சிறிவர்த்தன, பிரியா ரணசிங்கி, சரத் நாவல்கம எனப் பல பேர் நடித்துள்ள ஒரு காதல் கலந்த துப்பறியும் கதையே இது.

மெதகம பகுதியில் சம்பவமானது நடைபெறுவதாகவே சித்திரிக்கப்பட்டுள்ளது. அழகும் இளமையும் உடைய தேவிகா பாதாள உலக களுமாத்தையாவுக்காக கொள்ளைகளில் ஈடுபட்டு வருகிறாள். இதேவேளை மெதகம பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பதிகாரியாக மிக்ரா நியமிக்கப்படுகிறார். இவரிடம் வசமாக மாட்டுப்பட்ட தேவிகா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலை ஆகிறாள். தேவிகாவின் கடந்த கால வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்ட மிக்ரா அவளை நல்ல வழியில் செலுத்த முயற்சிக்கிறான். மிக்ராவின் கவர்ச்சிகரமான பேச்சில் கவரப்பட்டு தேவிகா மிக்ராவின் மேல் காதல் வயப்படுகிறாள். ஆனால் மிக்ராவோ சட்டத்தரணியான விந்தியாவின் மீது காதல் கொண்டிருக்கிறான். இதற்கிடையில் உத்பால எனும் பத்திரிகை நிருபரின் மிக நெருக்கமான நட்பு கிடைக்கிறது மிக்ராவுக்கு. உத்பால மூலம் அச்சுக்கூடம் ஒன்றில் வேலை செய்யும் நரந்தவுடனும் தொடர்புகள் மிக்ராவுக்கு ஏற்படுகிறது. இவர்கள் இருவரையும் மிக்ரா தேவிகாவுக்கு அறிமுகப்படுத்தி, தேவிகாவின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி புத்தகமாக எழுதுமாறு பணிக்கிறான். தேவிகாவும் இதனை ஏற்றுக்கொள்கிறாள். தேவிகாவின் நடவடிக்கை மாற்றத்தைக் கண்டு களுமாத்தையா சந்தேகப்படுகிறான்.

இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் உத்பால மர்மமான முறையில் கொலை செய்யப்படுகிறான். கொலையின் பின்னணி பற்றி ஆராய்வதே இக் கதையாகும்.

மிக அழகான நெறியாள்கை செய்யப்பட்டிருக்கும் இத் திரைநாடகம் இரங்க செனரத்தினாவினால் டைரக்ஷன் செய்யப்பட்டுள்ளது. சரத் நந்தசிறி இந் நாடகத்திற்கு இசையமைத்துள்ளார். மேலும் பல முன்னணி தொழில்நுட்பக் கலைஞர்களினால் செதுக்கப்பட்டிருக்கும் இத் திரை நாடகம் மே 2ஆம் திகதி முதல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் ITN அலைவரிசையில் ஒளிபரப்பாகிறது.



சரத்நாவல்கம - சேமினி
உக்குஸ்சோ



சரத்நாவல்கம - பிரியா
உக்குஸ்சோ




## தொலைந்து போனவன்

உனது பழைய நினைவேட்டில்
கிழிந்த பகுதியாய் நான்
புழுதிபடிந்து புலம்பிக்கொண்டிருக்கிறேன்.

எனது காதல் பிரதேசத்திலிருந்து - நீ
கடந்து போய் விட்டதால்
என் இதயக் குழல்களிலிருந்து
இரத்தம் கசிகிறது.

முடிந்து போன முடிவாக
தொலைந்து போன புள்ளியாக
தூரத்தில் நானும் நீயும்...
யாருக்கு வேண்டும் இந்த அர்த்தமில்லா
வாழ்க்கை?

உனது பார்வையின் கூர்மையினால்
பாதிக்கப்பட்டதும்
ஏமாந்ததும் இல்லாமற் போனதும்
உனது நினைவுகளிலிருந்து
நீங்கிப்போனாலும்
எனது கல்லறையில் வட்டமடிக்கும்
பட்டாம்பூச்சிகள்
பக்கம் பக்கமாய்
பாடிக்கொண்டேயிருக்கும்.

*-எஸ்.சரோஜினி, கோட்டைக்கல்லாறு.*

## பிரார்த்தனை

ஒரு குழந்தையைப் - போல்
என் விரல்களை நீட்டித் தருகின்றேன்;
ஒரு குழந்தையைப் போல்
என்னை அழைத்துச் செல்.

ஒரு குருடனைப் போல்
என் பாதையை ஒப்படைக்கின்றேன்;
ஒரு வழிகாட்டியாக
என்னை நடத்திச் செல்.

ஒரு காதலனைப் போல்
என் இதயத்தை
தந்து விடுகின்றேன்;
ஒரு காதலியைப் போல்
என்னை அணைத்துக் கொள்.

ஒரு சீடனைப் போல்
என் அறியாமையை முன் வைக்கின்றேன்;
ஓர் ஆசானாக
என்னை வழி நடத்து.

ஒரு கவிஞனைப் போல்
என் உணர்வுகளைச்
சொல்லி வைக்கின்றேன்;
ஒரு மனிதனைப் போல்
என்னைப் புரிந்து கொள்.

*-சப்ரோஸ் ஜமால், நற்பிட்டிமுனை.*

## மலரும் மங்கையும்

பூவினமே உனக்கு
பெண்ணினத்திற்கும்
பூர்வ ஜென்ம
பந்தமா - இல்லை
பூமித்தாய்
இருவரையும்
சுமப்பதால்
உங்களுக்குள்
பூலோக சொந்தமா?

மலரே மங்கையர்
மனம் கவர்
மல்லிகையே - நீ
வாசத்தால்
இதயங்களை
கொள்ளையடித்தாய்
அவள் பாசத்தால்
இதயங்களை
வென்றெடுத்தாள்.

முல்லை பூவாய்
முத்துப் பற்களில்
சிரிக்கிறாய்
ரோஜா இதழாய்
அவள் உதட்டில்
இருக்கிறாய்.

தாமரை மலராய்
அவள் இதயத்தில்
துடிக்கிறாய்
செவ்வந்திப் பூவாய்
அவள் முகத்திலும்
ஜொலிக்கிறாய்.

மலரே பெண்மைக்கு
மென்மை நீ
கொடுத்தால்
உன் இதழ்கள்
வாடும் போது
அவள் இதயத்துடன்
வதனமும்
வாடியதோ.

*-க.வாசுதேவன், முருங்கன்.*

## புரியாத ஜீவிதம்

நிசப்தத்தின்
நீண்ட வெளிக்குள்
தனிமையின்
அகோரம் பற்றி
சுமைகளின்
வலிகள் வாங்கி
தொடரும்
யாத்திரையில்...
ஜீவிதம் மட்டும்
இன்னுமே
புரியவில்லை.

அடைக்கலம் தந்து
விட்ட
அவஸ்தை
பரிவாரங்கள்
நெருடலாய் உள்
நுழைந்து
ஆன்ம மூலத்தின்,
ஆணி வேர் மட்டும்
ஊடு பரவி, உயிர்
வதைக்கும்
ஊழி நிமிடங்களில்
வாழ்தலின் ஊனம்
புரியும்.

மனசின் மறுபக்கம்
துருவி
எரிந்து கருகும்
வார்த்தைப்
பட்டாசின்
நடுநிலை
யதார்த்தம்
துய்க்க...
நேயம் கொள்ளும்
மனசு,
இழப்புகளின்
இடைவெளிக்குள்
இம்சைபட்டே
கந்தல் விழுந்து
கிடக்கிறது.

வாழ்க்கை சித்தாந்தம்
சிக்குப்பட்ட சிகை
திரளாய்
இன்னுமே
புரிபடாதபடிக்கு,
பித்தம் கிளப்பி -
என்னுள்
பிதற்றல் பிணி பரப்பி,
பங்கேற்று
கொள்கிறது.

எண்ணங்களின்
ஒட்டடை
பக்கங்களுக்கு

கடந்து வந்த...
வாழ்க்கை
வெளிக்குள் மீண்டும்
ஊடு பரவி திரும்பி
பார்க்கிறேன்
அங்கே என்னில்
இருந்து
தொலைந்து சிதறும்
இளமையின்
இயலாமைகள் - என்
முதுமையின்
நிலைகண்டு,
முறுவலித்தப்படி...
முக்காரமிடுகிறது.

*-சிவனு மனோஹரன், ஹட்டன்.*

## இயற்கை

முட்டிமோதி முட்டிமோதி
கட்டவிழ்ந்து கட்டவிழ்ந்து
காற்றாய்
நீராய்
நிலமாய்
நெருப்பாய்
பெருவெளியாய் மட்டுமல்ல,
உயிர்களாயும்
சுருங்கிக் கிடக்கிறது போலும்
இயற்கை!

நாம்
அழிவுகள் என்றும்
அனர்த்தங்கள் என்றும்
அர்த்தம் கண்டு கொள்வது
உண்மையில்
அதன்
பரிபூரணத்தை நோக்கிய
மலரல்களைத்தான்.

*-மா.ஞானராஜ், தோட்டவெளி.*

## மௌனமாம்!

அழகான உன் மௌனம்
எனக்கு ஆழமாகப் பிடித்திருக்கிறது.
இதை எண்ணிப் பல தடவை
அழுதிருக்கிறேன்;
அதைவிட அதிகம் சந்தோசப்
பட்டிருக்கிறேன்.

அதிர்ஷ்டமான உன்னை
என் கனவுக்கும் பிடித்திருக்கிறது.
அழகே உன் நினைவுகளால்
தூங்குவது கூடத் தெரிவதில்லை.

விசித்திரமான உன் விம்பம் - என்
விம்பத்தைக் கண்ணாடியிலும்
காட்டுவதில்லை;
சாமர்த்தியமானவள் நீ - என்
சந்தேகத்தைப் பல தடவை தீர்த்து
வைத்திருக்கிறாய்.

விதிதான் என்னோடு விளையாடுகிறதோ
தெரியவில்லை,
நீ விலகி விலகிச் செல்கின்றாய்;
நான் இறந்தும் விழித்திருப்பேன் -
உன் மௌனத்தை மீண்டும் மீண்டும்
ரசிப்பதற்காக...

*-வி.முகிலன், நெடுந்தீவு.*

## மனைவி...

அவதானிப்புகளின் உச்சத்தில்
ஆணித்தரமாய் மனது
சொல்கிறது...
என்னை நீ இம்சிக்கிறாய் - உன்
சர்வாதிகார நியாயங்களை
சகித்துக்கொள்ளும்
என் பெண்மை கண்டு
குரூர திருப்தி அடைகிறது
உன் ஆண்மைத்திமிர்.
அவமானப்படுத்தல்களையும்
அடக்குமுறைகளையும்
போகப்பொருளாய் மட்டுமே
ஸ்பரிசம் தேடும்
அந்தரங்கப் பொழுதுகளையும்
வார்த்தைகளால் அத்துமீறும்
அநாகரிக நிமிடங்களையும்
உதறித்தள்ளிவிட எத்தனிக்கும்
என் தன்மானம்
மனைவி எனும் ஸ்தானத்தை
தக்கவைப்பதற்காய்
தலைகுனிகிறது.

*பிரபிளா செல்வராஜா, ஹாலி - எல.*

## காணத்துடிக்கிறது மனது

என்
கற்பனையின் சிதறல்களில்
இளம் புஷ்பங்களின்
மெல்லிய இதழ்களில்
முத்தமிடும் பனித்துளியாய்
சிதறிக்கிடக்கும்
என் இதயத்துக்
கவித்துளிகளை - உன்
மலர்ப்பாதங்களில்
சமர்ப்பிக்கிறேன்...

இளம்
தென்றலுடன் கைகோர்த்து
மெல்ல நடைபோடும்
மெல்லிய சுகந்தமாய்
எங்கிருந்தோ என்
செவிகளைத் தடவி
எனக்குள் ரீங்காரமிடும்
என்னவள் குரலோசை
தினமும்
எதிரொலிக்கிறது எனக்குள்.

உன் முகம்மட்டும் - என்
புலமையுடன் போட்டியிடுகிறதா?...
காணத்துடிக்கிறது மனது
என் கவிதைகளில் - உனை
செதுக்கியபோதும்...

*-எஸ்.சித்தீக், அட்டாளைச்சேனை - 08.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

உலக வலம் வரும் இணையங்களை எம்நாட்டு மற்றும் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் தமது உள்ளத்திலிருக்கும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பயன்படுத்துகிறார்கள். அந்த வகையில் இங்குள்ளவையும் தமது தாயக உறவுகளையும் தாங்கள் பட்ட துன்பங்களையும் மறக்கமுடியாமல் பல இளம் கவிஞர்கள் தங்கள் பங்கிற்கு வடித்த கவிதைகளின் சில துளிகள் இவ்வாரம் சிறப்புக் கவிதைகளுக்காக:

## என்ன அழகு

மஞ்சள் அழகா மாதுளம் பூவழகா
கொஞ்சல் அழகா கோபுரம் தானழகா
வஞ்சி அழகா வாய்வெடித்த பூவழகா
குஞ்சம் அழகா கூந்தல் மலரழகா -
இல்லை
பஞ்சமில்லா மஞ்சம் அழகா மிஞ்சும்
அழகு
மெருகூட்டும் அழகென்றால் -
வெள்ளை
நெஞ்சம் அழகு நெடுநாட்
காதலித்தும்
அஞ்சுதங்கு அஞ்சுகின்ற வஞ்சமில்லா
நெஞ்சமே அழகென்பேன் யான்.
சாதம் இடுகின்ற சந்தனக்கையழகா -
அவள்
பாதம் படுகின்ற பக்குவப் புல்லழகா
நாதம் கொடுக்கின்ற நங்கை
குரலழகா
பாதம் நோகாமல் பக்குவமாய் நடை
நடந்து
தோதாய் வளர்ந்திருக்கும்
கார்குழலை வாரிவிட்டு
கோதிப்பூ முடித்து காதலாள்
காத்திருந்தால்
என்ன அழகு மின்னும் அழகு
எல்லாம் அழகென்பேன் நான்.

*இந்திரன், சூரிச் சுவிஸ்.*

## விடியட்டும்

நள்ளிரவில் அமைதியினில்
நாடுறங்கும் வேளையினில்
நமக்கொரு மீட்பர்
நானிலம் வந்தார்
விடியல் வந்ததென்று
வேதவர்கள் கூடி வந்து
பாட்டுக்கள் பாடி நின்றனர்.
இன்னும்தான் ஈழத்தில்
இறைமகனால் பிறக்கவில்லை
அமைதி பூத்திருக்கும்
அழகான நத்தாரிலும்
அங்கங்கே பிணங்கள்
அலறலும் கதறலும்
அமைதியை தொலைத்து
எப்போது இறைமகன்
ஈழத்தில் பிறப்பாரோ
இரக்கமற்ற அரக்கர்கள்
எப்போது இறப்பாரோ
அமைதி பிறக்கும்
அந்த ஒரு நாளுக்காய்
அனைவரும் கூடிநின்று
ஆண்டவனை பிரார்த்திப்போம்.

*மலைமகள்.*

முரசின் கவிதை பயிற்சிக்களம்
பகுதியில் புதிய கவிஞர்களின்
வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு
களம் அமைத்துக் கொடுக்கின்றது.
தமது கவிதை வெளியீடுகளை அல்லது
வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக்
கொண்டுவர விரும்புவோர் முரசுடன்
தொடர்பு கொள்ளலாம்.

## உன்னுடைய இனிய தொலைபேசி தொடர்பை துண்டித்து விட்டேன்!

உன்னுடைய இனிய
தொலைபேசி தொடர்பை
துண்டித்து விட்டேன்
துடித்தது என் இதயம்
துயரம் தாங்காமல்
விடிய விடிய பேச
எனக்கும் ஆசைதான்
விடிந்தபின் பேசவும்
ஆசையாகதான் உள்ளது
என்ன நான் செய்ய
விடியுமா நம் வாழ்வு
இப்படியே தொடர்ந்தால்
இதயத்தை கல்லாக்கவில்லை
மாறாக அது இன்று
இரத்த கண்ணீர்
உள்ளே வடிக்கிறது
வாய்திறந்து பேசவில்லை
வலிதாங்க முடியவில்லை
இந்நிலை நீடித்தால்
நீ தாங்கமாட்டாய்
உனக்காகத் தான் நான்
உணர்வுகளுக்குத் திரையிட்டு
உடனே துண்டிக்கிறேன்
ஊமையாய் செல்கிறேன்
உயிரே மன்னித்துவிடு.

*ரம்யா ராஜ்.*

## எங்கள் பூங்காவின் நெருப்புப் பூக்கள்


உங்களுக்கான
மென்மை வேண்டித்தானே
காந்தள் மலர்களால்
உங்களை
அலங்கரித்துப் பார்க்கிறேன்.

கண்களிலே கசிவையும்
நெஞ்சினிலே ஈரத்தையும்
கைகளிலே சுடர்களையும்
ஏந்திவரும் - இந்த
மனித சமுத்திரம்
சூரிய விளக்காகச்
சுடர்விடும்
உங்களின் பாச உறவுகள்.


சாயாத சரித்திரப் புயல்களே
காற்று உள்ள வரை
எங்கள் மூச்சிலும் பேச்சிலும்
உங்களின் நேசம் இருக்கும்.

*– சுவிஸிலிருந்து விக்கி நவரட்ணம்.*


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : ரி.எல்.எம். அஸ்லம்.
வயது : 20
முகவரி : முனையவளவு வீதி,
ஏறாவூர் – 01.
பொழுதுபோக்கு: புத்தகம்,
பத்திரிகை, கவிதை.



பெயர் : நவுசாத்.
வயது : 31
முகவரி : C.C.S.,
P.O.Box - 19145, Saliya - 1,
Doha - Qatar.
பொழுதுபோக்கு : கிரிக்கெட்,
ஜிம், பத்திரிகை.



பெயர் : என்.கௌதமன்.
வயது : 20
முகவரி : P.O.Box - 60136,
Doha - Qatar.
பொழுதுபோக்கு : ரி.வி., பத்திரிகை.



பெயர் : நே.மகான்.
வயது : 22
முகவரி : Caparol,
P.O.Box - 5536, Doha - Qatar.
பொழுதுபோக்கு : ரி.வி., பத்திரிகை.




# கண்ணழகுக்கு!

**பெண்களின்** தோற்றத்தில் ஒருவித பிரகாசத்தை அள்ளி வீசுவது கண்கள்!

அதனால்தானோ என்னவோ சில பெண்களின் கண்ணழகிலேயே தொபுக்கடீர் என்று கிறங்கி விழுந்து விடுகிறார்கள் ஆண்கள்!

யாவரையும் வீழ்த்தும் கூரிய ஆயுதமான இந்தக் காந்தக் கண்களை முறைப்படி பராமரித்தால் மேலும் அழகு கூடும்!

வசீகர கண்ணழகை விரும்பும் பெண்களுக்கு கண் அழகு பராமரிப்பு பற்றி சில குறிப்புகள் :

உங்களுடைய புருவங்களுக்கு இயற்கையான அழகைத் தருவதற்கு கருப்பு அல்லது பிரவுண் நிற ஐப்ரோ பென்சிலைக் கொண்டு ஷேப் செய்யவும்.





கண்களை ஒருவித இறக்க நிலையில் காட்டன் கருப்பு பிரவுண் அல்லது கலர் ஐ லைனரை மேற்புற இமைக் கால்களுக்கு தடவவும். பின்னர் நீலம், வயலட், ஐஷ்கிரே, பிரவுண், சில்வர் ஐஷேடோ ஆகியவற்றின் டார்க்பேஸ் மேற்புற அல்லது கீழ்ப்புற டீலிட்டில் தடவவும். சாக்கெட் ஏரியாவை ஷிமர்ஸ் வைத்து ஹைலைட் செய்யவும். பின்னர் பங்காரா தடவவும்.

### உங்களது கண்கள் சிறிதாக உள்ளதா?

அப்படியானால் நீலம், அல்லது பிரவுண் நிற ஐ-லைனர் கொடுத்தால் அடர்த்தியாக ஐ லைன் வரும். கண்களின் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை நன்கு கொடுக்கவும். மேற்புறம் அல்லது கீழ்ப்புறம் இமைக் கால்களிலே லேசான ஷேடோ தடவவும்.

### உங்களது கண்கள் பெரிதாக இருக்கிறதா?

கண்களின் வெளிப்புற ஓரத்தில் ஐ லைனிங் நீளமாகவோ, வளைந்தோ அமைய வேண்டும். மஸ்காராவை இமைக் கால்களின் வெளிப்புற ஓரங்களிலேயே கொடுக்க வேண்டும்.

எந்த வகையான மேக்-அப்பாக செய்வதாக இருந்தாலும் முதலில் கன்சீலிங் அல்லது பேஸ் தடவுவதை மறக்கக் கூடாது. கருவளையம் இருந்தால் கன்சீலிங் அவசியம் செய்ய வேண்டும்.

பின்னர் பவுன்டேஷன் - செய்யும் முறையில் லேசான டிரான்ஸ்லுசன்ட் பவுடர் தடவி, அதன் மேல் மேக் - அப் போட வேண்டும்.

கண்களில் ஷேடோ அல்லது மஸ்காரா தடவினாலும் கூடுதலாகக் கண் ஓரங்களை பஞ்சால் நன்றாகத் துடைக்க வேண்டும்.

பகல் நேரத்தில் டார்க் கலர் ஐ ஷேடோ போட வேண்டும். மாலையில் பளிச்சென்ற அல்லது கான்ட்ராஸ்ட் கலர் ஐஷேடோ போட வேண்டும்.

2 அல்லது 3 ஷேட்ஸ் இருக்கும் ஐஷேடோ பயன்படுத்துவது நல்லது.


இமைகளை நல்ல நிறமாகக் காண்பிப்பதற்கு மஸ்காரா போடுவதற்கு முன் செயற்கை இமைகளால் பொருத்திவிட்டு நிறமாக்கிக் கொள்ளுங்கள்.

### உங்களுக்கு வட்டமான கண்களா?

இதனை நீளமான கண்களாக மாற்ற முடியும். ஐ லைனிங் கொண்டு கண்களுக்கு மேலும் கீழும் 2-3 அவுட்லைன் தரவும். ஓரங்களில் திக்காக அவுட் லைன் தர வேண்டும்.

நியூட்ரல் ஐ ஷெடோ போட வேண்டும். மஸ்காராவும் வெளிப்புற ஓரங்களில் உள்ள மேற்புற இடைக்கால்களுக்கே தடவ வேண்டும்.

இறுதியில் மஸ்காரா 2 தடவைக்கு மேல் தடவ வேண்டாம். ஐலைனின் கலரும் மஸ்காராவின் நிறமும்






ஒன்றாக இருக்க வேண்டும். மஸ்காரா பிரஷை இமை நுனி வரை தடவி வெளிப்புறமாகக் கொண்டு வர வேண்டும். முதல்முறை தடவியது காய்ந்தவுடன் அடுத்த முறை இமைக்கால்களை தனித்தனியே - அதாவது கண்களின் மேல்புறம், கீழ்ப்புறம் எனப் பிரித்துத் தடவ லேஸ் பிரஷ் அல்லது லேஸ் கோம்ப் பயன்படுத்த வேண்டும்.

# 'சாட்டிங்' — சைபர் உலக நட்பு

**'இன்டர்நெட்'**, 'ப்ரௌசிங்', 'சாட்டிங்' போன்ற வார்த்தைகள் தான் இப்போது பெரும்பாலான இளைஞர்களால் பேசப்படுபவை. ஒவ்வொரு தெரு முனையிலும் முளைக்கும் இன்டர்நெட் சென்டர் இதற்குச் சான்று. இதில் சாட்டிங் என்பது கம்பியூட்டர் முன் உட்கார்ந்து ஊர், பெயர், முகம் தெரியாதவரோடு நட்பு கொள்



வதாகும். தொலைவில் உள்ள நண்பர்களோடு மற்றும் உறவினரோடு தொடர்பு கொள்வதில் இது உதவினாலும் அதிகப்படியாக இது முன்பின் தெரியாதவரோடு பேசவே பயன்படுத்தப்படுகிறது.

சாட்டிங் தொடங்குவதற்கு முன் நினைவில் கொள்ள வேண்டியவை:

### பொய்கள் ஜாக்கிரதை!

நிஜ வாழ்வில் பொய் சொல்ல இத்தனை பேர் இருக்கும்போது புனைப் பெயரைக் கொண்டு பேசும் பொழுது எத்தனை பேர் பொய் சொல்வார்கள்! உங்களைக் காதலிக்கும் அந்த 25 வயது வாலிபன், நிஜ வாழ்வில் 45 வயதான 3 குழந்தைகளின் தந்தையாக இருக்கலாம்.

### நிதானம் அவசியம்

இரண்டு அல்லது மூன்று முறை பேசியதால் மட்டும் யாரையும் நம்பி எந்த அவசர முடிவையும் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். உங்களைப் பற்றிய விவரங்களை வீட்டு விலாசம், தொலைபேசி எண் இவற்றைக் கொடுப்பதில் கவனமாக இருக்கவும்.

### நீங்கள் யார்?

உங்கள் சைபர் நண்பரை நிஜ வாழ்வில் சந்திக்க விருப்பமிருந்தால் உங்களைப் பற்றி மிகைப்படுத்திக் கூறுவதைத் தவிர்க்கவும். அப்படி விருப்பமில்லை, நேரம் கழிக்கத்தான் பேசுகிறீர்கள் என்றால் நீங்கள்தான் ஐஸ்வர்யா ராய் என்றும் சொல்லிக் கொள்ளலாம்.

# ஈவ் டீஸிங்

**தற்காலத்தில்** ஈவ் டீஸிங் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. செய்தித் தாளில் இது பற்றி அடிக்கடி வரும் செய்திகளே இதற்குச் சான்று. ஆனால் செய்தித் தாளில் வராத சம்பவங்கள் இதைவிட அதிகம். காரணம் சம்பந்தப்பட்ட பெண்களின் பெயர்கள்



பாதிக்கப்படுமே என்ற பயம்தான்.

விசில் அடிப்பதும், கண் அடிப்பதுமாக ஆரம்பித்த இளைஞர்களின் இந்த விளையாட்டு இன்று இளம் பெண்களின் உயிரையே பலிகொள்ளும் அளவுக்குப் பயங்கரமாக உருவெடுத்து வருகிறது.

நீங்கள் இதுபோன்ற சம்பவங்களில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பது எப்படி? அப்படிப்பட்ட சூழ்நிலையில் உங்களைப் பாதுகாத்துக்கொள்வது எப்படி?

01. கடைசியில் வருந்துவதைவிட முன்பே பாதுகாப்புடன் இருப்பது நல்லது. தனியான இடங்களுக்கு துணையின்றி செல்வதைத் தவிர்க்கவும்.

02. நீங்கள் தனியாக ஒரு ஆளில்லாத இடத்தில் நடந்து போகும்போது, உங்களை யாரேனும் பின் தொடர்ந்து வந்தாலோ அல்லது ஈவ் டீஸிங் செய்தாலோ ஓடவோ அல்லது சத்தம்போட்டு உதவிக்கு யாரையாவது கூப்பிடவோ தயங்காதீர்கள்.

03. நீங்கள் பஸ்ஸில் செல்லும்போது ஈவ் டீஸிங் செய்யப்பட்டால் கண்டக்டரிடம் அல்லது சக பயணியிடம் புகார் கூறவும். அல்லது அடுத்து வரும் கூட்டம் மிக்க பஸ் ஸ்டாப்பில் இறங்கிவிடவும். ஆட்கள் அதிகமில்லாத பஸ் ஸ்டாப்பில் இறங்குவதைத் தவிர்க்கவும்.

04. உங்களை யாராவது அடிக்கடி பின் தொடர்ந்து வந்தாலோ அல்லது தொந்தரவு செய்து வந்தாலோ, உங்கள் பெற்றோரிடம் அல்லது அதிகாரிகளிடம் புகார் செய்யுங்கள். அதற்காக நீங்கள் வெட்கப்படத் தேவையில்லை.

05. எமது நாட்டு அல்லது மேல் நாட்டு உடையோ, எதை நீங்கள் அணிந்தாலும், அது கண்ணியமானதாக இருக்க வேண்டும் முக்கியமாக நீங்கள் பஸ்ஸிலோ அல்லது இரு சக்கர வண்டியிலோ செல்லும்போது. இல்லையென்றால் ஆண்கள் அதைத் தவறாகப் புரிந்துகொண்டு, உங்களை டீஸ் செய்யக்கூடும்.

06. மற்றொரு பெண்ணிடம் யாராவது வம்பு செய்தால், அவருடைய உதவிக்குச் செல்லத் தயங்காதீர்கள். சூழ்நிலை ஆபத்து மிக்கதாகத் தோன்றினால் மற்றவரையும் உதவிக்குக் கூப்பிடுங்கள்.

07. நீங்கள் மனதுக்குள்ளே, யார் நமக்கு உதவி செய்ய முன் வருவார்கள் என்று எண்ணித் தயங்காதீர்கள். கூப்பிட்டுத்தான் பாருங்களேன், எத்தனை பேர் உங்கள் உதவிக்கு ஓடி வருகிறார்கள் என்று தெரிந்து கொள்வீர்கள்.

08. ஏதேனும் காரணத்தால் ஈவ் டீஸிங் செய்பவர்கள் தொந்தரவு அதிகமாக இருந்தால் அல்லது கட்டுப்படுத்த முடியவில்லையென்றால், உங்கள் பயண நேரத்தை




மாற்றுங்கள் அல்லது செல்லும் வழியை மாற்றுங்கள். இதனால் உங்களுக்கு அதிக நேரம் செலவாகலாம். ஆனால் அது உங்களுக்குப் பாதுகாப்பு மிக்கதாக இருக்கும்.

09. ஈவ் டீஸ் செய்பவர்களின் தொல்லையைப் பொறுத்துக்கொள்ளாதீர்கள். அதை எதிர்த்து குரல் எழுப்பத் தயங்காதீர்கள். நீங்கள் பயத்துடன் வாய் மூடிக் கொண்டிருந்தால் அது அவர்களை மேலும் ஊக்குவிக்கும்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

21

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே-அ- அட்டை இல : ..........

கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 16.05.2006

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 21**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 19
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

**வே. செல்வநாயகம்,**
இல. 34B, தர்மலிங்கம் வீதி, கீர்த்திதாஸ், வவுனியா.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது —ஷோபா—

## நிலக்கடலை அவல் புட்டு

**தேவையான பொருட்கள் :-**

அவல் (பொடித்தது) - 1 கப்
வறுத்த நிலக்கடலை
- கால் கப் (ஒன்றிரண்டாகப் பொடித்தது)
தேங்காய்த் துருவல் - 2 தேக்கரண்டி.
உப்பு - தேவைக்கு ஏற்ப.

**செய்முறை :-**

அவலையும், கடலையையும் உப்பு சேர்த்து, தண்ணீர் விட்டு புட்டு மாவு பதத்திற்கு பிசையவும். பின், புட்டுக் குழலில் தேங்காய்த் துருவலைப் போட்டு அதன் மேல் அவல் கலவையைத் திணித்து, அதன் மேல் மீண்டும் தேங்காய்த் துருவலைப் பரப்பி, கையால் சற்று இறுக்கமாகப் புட்டுக் குழலில் கலவையை அமுக்கவும். பின்பு ஒரு குச்சியால் குழலின் பின்னால் தள்ளவும். அற்புதமான புட்டு ரெடி. பனங் கற்கண்டு தூள் சேர்த்து சாப்பிட இன்னும் சுவை கூடும்.





**நான்** கேள்விகள் கேட்பதும் அவர் பதில் சொல்வதும் என் காதில் ஒலித்தன. அந்த நிமிடத்தை நான் பரிபூரணமாக அனுபவித்தேன்.

கயவனே! என்னைத் தெரிகிறதா யாரென்று? நான்தான் பட்டாம்பூச்சி. வெகு குஷாலாக ஆயுள் தண்டனை கொடுக்கிறாய்; மரண தண்டனை நிறைவேற்றும் கொலைக் களத்துக்கும், கொலையாளிகளுக்கும் வற்றாத தீனி வழங்குகிறாய் - ஆகா! என்னே உன் கீர்த்தி.

மரண தண்டனை நிறைவேற்றுகின்ற அதிகாரிக்கு நன்றி இருக்குமானால், போய்விடும்; உன் கண்ணில் பீதி படருவதைப் பார்க்கிற சந்தோஷம் எனக்கு இல்லாமல் போய்விடும். அதுதானே உன் எண்ணம்? கரெக்ட். உன் கண்ணைப் பறிக்கக் கூடாதுதான். குறைந்தது எடுத்த எடுப்பிலேயே பறிக்கக் கூடாது. அதைப் பிறகு வைத்துக் கொள்ளலாம்.

உன் நாக்கை வெளியே இழுத்து அறுப்பேன்.

அதுதான் சரி. உன் மூளைக்கு அடுத்தபடியாக உன் நாக்குதான் அதிக சேதாரம் ஏற்படுத்தியிருக்கிறது. அதை அறுத்தெறிவதில் ஆரம்பிக்கிறேன். அதை எவ்வளவு நன்றாய் உபயோகப்படுத்துகிறாய்! ஜுரர்களெல்லாம் நீ போடுகிற கேள்விகளுக்கு ஆமாம் ஆமாம் என்று சொல்லும்படி செய்கிறாயே, அது இந்த நாக்கினால்தானே? பொலிஸ்காரர்கள் எல்லோரும் மகாநேர்மையானவர்கள் போலவும், கடமை தவறாதவர்கள் போலவும் காட்சியளிக்கும்படி செய்கிறாயே, அது இந்த நாக்கினால் தானே? பாரிசிலேயே நான்தான் மிக மிக அபாயமான பேர்வழி என்று அந்த பன்னிரெண்டு மட்டி ஜுரர்களும் எண்ணும்படி பண்ணினாயே, அது இந்த நாக்கினால் தானே? மக்களையும், உண்மைகளையும், விஷயங்களையும் திரித்துத் திரித்துப் பழக்கப்பட்ட இந்தப் பொய்யான - சாமர்த்தியமான நாக்கு மட்டும் உன்னிடம் இல்லாதிருந்தால் இந்நேரம் நான் கிராண்ட் ஓட்டலின் மேல் தளத்தில் ஜம்மென்று உட்கார்ந்திருப்பேனே? இந்தண்டை - அந்தண்டை நகரக்கூடத் தேவை இருந்திருக்காதே!....



கொடுத்து அனுப்பி வைத்தாயே, அதே பட்டாம்பூச்சி. வருடக் கணக்கில், வியர்வை பெருக்கெடுத்தோட விழுந்து விழுந்து படித்து மகா பெரிய படிப்பாளியாக ஆனாய். ரோமன் லாவென்றும் அதுவென்றும் இதுவென்றும் இரவெல்லாம் கரைத்துக் குடித்தாய். கிரீக்கும், லத்தீனும் பயின்றாய். பெரும் பேச்சாளனாக வேண்டுமென்பதற்காக உன் இளமையைத் தியாகம் செய்தாய். இதெல்லாம் சுவைக்குதவுகிறதா? கேடு கெட்டவனே! இவ்வளவும் உன்னை எங்கே எங்கே கொண்டு சென்றன? நீ என்ன செய்வதற்கு உதவின? சமூகத்துக்குப் பயன்படக்கூடிய புதிய, நாகரிகமான சட்டங்களைத் திட்டமிடுவதற்குப் பயன்பட்டதா? அமைதிதான் உலகத்திலேயே உன்னதமான பொருள் என்று மக்களுக்கு எடுத்துக்காட்ட உதவியதா? எந்தக் கடுமையான மதத்தின் தத்துவத்தையேனும் உபதேசிக்கப் பயன்பட்டதா? உன் செல்வாக்கைப் பயன்படுத்தி, உன் மேலான கல்லூரிப் படிப்பைப் பயன்படுத்தி, மனிதர்களை நல்லவர்களாக இருக்கச் செய்ய - அல்லது குறைந்தது கெட்டவர்களாக ஆகாதபடி செய்ய - முடிந்ததா? இல்லை! தண்ணீரில் மூழ்கும் மனிதனை வெளியே இழுப்பதற்கு உன் அறிவைப் பயன்படுத்தினாயா? என்றைக்கும் எவனுக்கும் நீ உதவியது கிடையாது. உனக்கு ஒரே நோக்கம்தான் வாழ்க்கையில்; மேலே ஏறுவது. மேலே, மேலே, மேலே, சாக்கடை வாழ்க்கையின் படிகளில் மேலே மேலே ஏறி, கடல் கடந்த இடங்களில் உள்ள சிறைகளுக்கு ஆள் சேர்த்துக் கொடுக்கிறாய்... ஒவ்வொரு புத்தாண்டு தினத்தன்றும் உனக்கு ஒரு பெட்டி நிறைய ஷாம்பேன் ஒயின் அனுப்பி வைப்பார். அடே பாவி! சென்ற பன்னிரெண்டு மாதங்களில் அவருக்கு ஐந்தாறு தலைகள் அதிகப்படியாகவே கிடைத்திருக்குமே உன் தயவில்.

ஏதோ, இப்போது உன்னைப் பிடித்து விட்டேன். சுவரோடு சுவராகக் கட்டிப் போட்டுமாயிற்று. அரசாங்கத் தரப்புக்காக நீ பேசி முடித்ததும் அவர்கள் தண்டனை வழங்கியபோது நீ எப்படி இளித்தாய்!

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

உன் முகத்தில் எப்படிப்பட்ட வெற்றிக் களை கூத்தாடியது.

நல்லது. அதை மாற்றப் போகிறேன். முற்றிலும் வேறான ஒன்றாக மாற்றப் போகிறேன். ஒரு வகையில் என்னைக் காட்டிலும் உனக்கு இது சுலபம். என்னால் அன்று கத்த முடியாதிருந்தது. உன்னால் இன்று முடியும். ஆசை தீரக் கத்து. பலம் கொண்ட மட்டும் கத்து. உன்னை என்ன செய்யப் போகிறேன் என்று நினைக்கிறாய்? டுமாவின் நாவலில் வந்த மாதிரி, உன்னைப் பட்டினி போட்டுக் கொல்லுவேன் என்றா எண்ணுகிறாய்? இல்லையடா, கயவனே! அது உனக்குப் போதாது.


முதலில் உன் முழியைப் பறிப்பேன். அதுதான் ஆரம்பம். என்ன.... உன் முகத்தில் ஏதோ வெற்றிக் குறி தெரிகிறதே இன்னும்கூட? ஓகோ! உன் கண்ணைப் பறித்துவிட்டால் பிறகு நீ என்னைப் பார்க்க முடியாமல்

நான் நடந்தேன், நடந்தேன், நடந்தேன். என் தலை சுற்றியது. அப்படியும் அவனை என் நேருக்கு நேர் நிறுத்தி வைத்துக் கொண்டே இருந்தேன். திடீரென்று மின்சார விளக்கு அணைந்தது. பகல் வெளிச்சத்தின் மெல்லிய கீற்றொன்று ஜன்னல் வழியாக அறைக்குள் நுழைந்தது.

என்ன? அதற்குள் பொழுது விடிந்து விட்டதா? பழிக்குப் பழி வாங்குவது பற்றி யோசனை செய்வதில் ராத்திரி பூராவுமா செலவழிந்திருக்கிறது? ஆகா! எவ்வளவு இனிமையாக அந்த மணிகள் ஓடியிருக்கின்றன! அந்த நீண்ட, நீண்ட இரவு எவ்வளவு வேகமாகப் பறந்து விட்டது!

க்ளாங் - க்ளாங். கதவின் மத்தியில் எட்டு சதுர அங்குலமுள்ள ஓட்டையொன்று திறந்து கொண்டது. காப்பியும், ஒன்றரைப் பவுண்டு ரொட்டியும் நீட்டினார்கள். எனக்குத் தண்டனை வழங்கியாகிவிட்டதால் முன்போல் ஓட்டலிலிருந்து ஆகாரம் தருவிப்பதற்கு அனுமதி கிடையாது. ஆனால் நான் பணம் கொடுக்க முடியுமென்றால் சிகரெட்டும், சின்னக் காண்டீனிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உணவும் இப்போதுகூட வாங்கிக் கொள்ளலாம்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*



**அமெரிக்காவின்** லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் கலைத்துறையினருக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் நடந்தது. அதில் கலக்கல் ஆட்டம் போட்ட அமெரிக்க மாடல் அழகிகள் மற்றும் நடிகைகள் ரோஸலின் சான்செஸ், கார்மன் எலக்ட்ரா, இவா லாங்கோரியா, ரூபியோ, கான்ஸ்டன்ஸ் மேரி ஆகியோரைக் காணலாம்.



**லண்டனில்** நடந்த ஆடை அலங்கார விழாவில் இந்தியாவின் மனீஷ் அரோரா வடிவமைத்த ஆடையை உடுத்திக்கொண்டு மாடல் அழகி ஒருவர் பங்கேற்றார். டெல்லியில் ஆடை அலங்கார வார விழா நடை பெறவுள்ளது. இதில் மனீஷ் அரோரா வடிவமைத்த ஆடை முக்கிய இடம் பிடிக்கும் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது.

**அமெரிக்காவின்** கென்டகி மாநிலத்தில் உள்ள ஓவன்ஸ்போரா பகுதியில் கடந்த 2ஆம் திகதி மாலை சூறாவளி காற்று வீசியதால். மரங்கள் வேரோடு சாய்ந்தன. மரம் விழுந்து இவரது போர்ட் கார் சேதமடைந்துள்ளது.



## ஈரான் ஏவுகணை

**நீரில்** மூழ்கியபடி சென்று போர்க் கப்பலை தாக்கித் தகர்க்கக்கூடிய ஏவுகணை ஒன்றை ஈரான் சோதனை முறையில் வெற்றிகரமாக ஏவியுள்ளது. வளைகுடாப் பகுதியில் போர் பயிற்சியில் ஈடுபடும் அமெரிக்க கப்பல்களை தகர்க்க இந்த ஏவுகணையை பயன்படுத்தலாம் என்று ஈரான் கடற்படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.


**ரஷ்யன் வீஏ 111 ஸ்க்வால் நீர்மூழ்கி ரொக்கட்**

**1995இல்** உருவாக்கப்பட்ட ரஷ்ய ஸ்க்வால் வேகத்துக்குச் சமனான வேகத்தில் செல்லக்கூடியது. ஸ்க்வாலை அடிப்படையாகக் கொண்டு ஈரான் ஏவுகணை தயாரிக்கப்பட்டதா? அணுகுண்டுகளை ஏவ இதனைப் பயன்படுத்தலாமா? என்பது தெரியவில்லை.

**புதிய** ஏவுகணைக்கு ஷூட் அல்லது திமிங்கலம் என்று பெயரிட்டுள்ளனர்.

சாதாரண டார்பிடொக்களைவிட இந்த ஏவுகணை 4 மடங்கு வேகமாகச் செல்லும்.

வளைகுடா கடலின் வாயிலான ஹெர்மூன் நீரிணையின் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலையில் ஈரான் உள்ளது. உலக நாடுகள் பயன்படுத்தும் எண்ணெயில் ஐந்தில் 3 பங்கு ஹெர்மூன் வழியாகத்தான் உலக நாடுகளுக்குச் செல்கிறது.




(...க்கக்கூடிய தூரம் 6.9. கி.மீ வேகம் 100 மீட்டர்/வினாடிக்கு)

சிரிப்பு 05

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"

**அவன்** துரத்த இவர் ஓட இப்படி சில நிமிடங்கள்! சாப்ளின் ஒரு வீட்டில் புகுந்து படுக்கை அறைக்குள் ஒளிந்து கொள்கிறார். தேடி வந்தவன் படுக்கையில் முழுமையாக போர்த்திக் கொண்டிருக்கும் நபருடன் சண்டையிடுகிறான். அது சாப்ளின் அல்ல. ஒரு பெண். இந்தச் சமயத்தில் அந்தப் பெண்ணின் கணவனும் உள்ளே நுழைகிறான். இப்பொழுது மூன்று பேர் தெருவில்



துரத்திக் கொண்டு ஓடுகிறார்கள். அவர்களுடன் 'கீ.ஸ்டோன் காப்ஸ்' பொலிஸ்காரர்களும் சேர்ந்து கொள்கிறார்கள்! யார், யாரைத் துரத்துகிறார்கள் என்றெல்லாம் தெரியாத நிலைமையில் ஒரே ரகளை. பொலிஸ்காரர்கள் கணவனைப் பிடித்துக் கொள்கிறார்கள். இதற்கிடையே சாப்ளின் தப்பித்துக் கொண்டு மறைகிறார். அது மட்டுமல்ல. திருடிக் கொண்டு வந்த காமெராவுடன் படங்களை எடுத்துப் பத்திரிகைகளுக்கு விற்றுப் பணமும் பெறுகிறார்! சுபம்...

சாப்ளினின் இந்த முதல் படம் 1914 பெப்ரவரி 2ஆம் நாளன்று வெளிவந்தது. ஆனால் படம் வெற்றி பெறவில்லை. சாப்ளினின் பெயர் 'சாப்மென்' 'சாட்லின்' என்றெல்லாம் குறிப்பிடப்பட்டது. பத்திரிகைகள் படத்தை மட்டமாகவே விமர்சித்தார்கள். ஒரே ஒரு பத்திரிகை மட்டும் சாப்ளினின் பெயரைக் குறிப்பிடாமல் அவருடைய நடிப்பு பிரமாதமாக இருந்தது என்று எழுதியது.

மேக் ஸெனட்டிற்கு மிகவும் ஏமாற்றம். சாப்ளினின் நடிப்பு, சேஷ்டைகள் இவைகளெல்லாம் அவருக்குப் பிடிக்கவில்லை. புது நடிகருடைய திறமைகளை பற்றி முழுமையாக அறியாமல் பெரும் சம்பளத்தில் சேர்த்துக் கொண்டு விட்டோமோ என்று எண்ணி வருந்தினார். ஏதாவது வழியை கண்டுபிடித்து வேலையிலிருந்து நீக்கி




விடலாமா என்று கூட எண்ணினார். இது மற்ற நடிகர்களுக்கும் மேக் ஸென்னட்டிடம் பணிபுரியும் எல்லோருக்கும் மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது! எங்கிருந்தோ இங்கிலாந்து நாட்டிலிருந்து வந்தவன், ஊர் பெயர் தெரியாதவன் அவனுக்கு இப்படி ஒரு சம்பளமா! மேக் ஸென்னட்டிற்கு நன்றாக வேண்டும் என்றும் சந்தோஷப்பட்டார்கள்.

படத்தின் தோல்வி சாப்ளினையும் பாதித்தது. திரைப்பட வாழ்க்கை தனக்கு ஒத்து வராதோ என்று கூட எண்ணினார். மற்ற நடிகர்கள், நடிகைகள் மற்றும் பலர் தன்னைப் பற்றி ஏளனமாக பேசுவதும், ஏசுவதும், சிரிப்பதும் சாப்ளின் காதில் விழாமல் இல்லை. மீண்டும் ஃப்ரட் கார்னோ குழுவிற்கே திரும்பிச் சென்று விடலாமா என்று கூட எண்ணினார்! தன்னை மீண்டும் சேர்த்துக் கொள்வாரோ என்ற பயமும் அவரை வாட்டியது. தூக்கமில்லாமல் தவித்தார். ஆனால் திரைப்படங்களில் நடிக்க வேண்டும் என்ற ஆர்வம், தோல்வியைக் கண்டு அச்சப்படக் கூடாது என்ற மனப்பான்மை, முன் வைத்த காலைப் பின் வைக்கக் கூடாது என்ற உறுதி இவைகள் எல்லாம் அவரைச் சூழ்ந்திருந்த அச்சத்தை விரட்டி அடித்தன. தன்னுடைய நடிப்பு எடுபடாமல் போனதற்குக் காரணம் என்ன என்று தீவிரமாகச் சிந்தித்தார். 'கீ ஸ்டோன் காப்ஸ்' படங்களையெல்லாம் அவர் பார்த்திருக்கிறார். அவைகள் எல்லாமே ஒரே வேகம். நிதானம் என்பதே அந்தப் படங்களில் இருக்காது. ஆனால் சாப்ளின் கற்றுக் கொண்ட நடிப்பின் அடிப்படையே நிதானம் தான். அதுதான் தோல்விக்குக் காரணம் என்பதைப் புரிந்து கொண்டார். தனக்கென்று ஒரு உறுதியான, நிதானம் நிறைந்த நகைச்சுவை பாணியை அமைத்துக் கொண்டால் தான் தொழிலில் நிலைத்து நிற்க முடியும் என்பதைப் புரிந்து கொண்டார். ஆனால் அதற்கெல்லாம் மேக் ஸென்னட்



ஒத்துக்கொள்ள மாட்டாரே? மேக் ஸென்னட் சாப்ளினுக்கு வாரா வாரம் சம்பளம் கொடுக்கும் முதலாளி. தான் எதிர்பார்த்த அளவில் அந்த நடிகன் இல்லையென்றாலும் அவனைச் சும்மா உட்கார்ந்திருக்க விட முடியாது! என்ன செய்வதென்று அவருக்குப் புரியவே இல்லை.

லாஸ் ஏஞ்சலிஸிற்கு அருகில் வெனீஸ் ஒரு கடற்கரை ஓரப் பகுதி, சென்னை நகர மெரீனா பீச்சை போல அந்த நாட்டில் மிகவும் பிரபலம். அதை மையமாக வைத்து ஒரு படத்தை எடுக்க அவர் திட்டமிட்டு இருந்தார். அந்த ஊரில் மோட்டார் வண்டிப் பந்தயம் புகழ் பெற்றிருந்தது. அதில் சில குழந்தைகளும் பங்கெடுத்துக் கொள்வதாக ஏற்பாடு செய்தார். படம் ஐந்து நிமிடங்கள் தான் ஓடும். அதில் வாங்கும் சம்பளத்திற்கு வேலை செய்ய மேன் ஸென்னட் சாப்ளினை அனுப்பினார். என்ன வேடம் என்று சொல்லவில்லை. என்ன ஆடை அலங்காரங்கள் என்று சொல்லவில்லை. சாப்ளின் தன் ஆடை அலங்காரங்கள் என்று சொல்லவில்லை. சாப்ளின் தன் ஆடை அலங்காரங்கள் வைத்திருக்கும் அறைக்குச் சென்று அங்கு இருக்கும் எல்லாவற்றையும் அலசிப் பார்த்தார். மிகவும் குண்டான ஃபேட்டி ஆலிபக்கில் அணியும் தொள தொள பேண்டை எடுத்துப் போட்டுக் கொண்டார். அதற்குள்ளே இரண்டு மூன்று சாப்ளின்கள் செல்லலாம்! அதற்கு மேல் மிகவும் குறுகிய அளவில் ஒரு கோட்டை எடுத்து போட்டுக் கொண்டார். தலையில் ஒரு குல்லாய். கழுத்தைச் சுற்றி ஒரு நீளமான டை, ஃபோர்டு என்ற பிரபல நகைச்சுவை நடிகரின் மிகவும் பெரிய அளவான பூட்ஸை அணிந்து கொண்டார். இவருடைய கால்கள் சிறியது. பூட்ஸ்கழன்று வராமல் இருக்க வலது கால் பூட்ஸை இடது காலிலும், இடது கால் பூட்ஸை வலது காலிலும் மாட்டிக்கொண்டார். கண்ணாடியில் பார்த்த பொழுது அவர் ஒட்டிக் கொண்டிருந்த மீசை அவர் உதடுகளையே மறைத்தது! கத்தரியால் அதை வெட்டிக் கொண்டே போனார். மீசை குறுகிவிட்டது. இப்படி ஆடை அலங்காரம் செய்து கொண்டவுடன் கையில் ஒரு சிறு தடி இருந்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றியது.



எல்லாவற்றையும் மாட்டிக் கொண்டு வெளியே வந்த பொழுது பார்த்தவர்கள் எல்லாம் சிரித்தார்கள், ஏளனமாக. ஆனால் அந்த வேடம், அந்த மீசை, அந்தக் கைத்தடி, அந்தக் குல்லாய் எல்லாம் அமரத்துவம் பெற்றன. சாப்ளினை இமயமலை உச்சிக்கு மேலே உட்கார வைத்து உலகத்தையே சுற்ற வைத்தன.

(தொடரும்)

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள் 09

## ராணி லிவியாவின் அந்தரங்கம்

**நாள்** செல்லச்செல்ல மன்னரின் மனது மாறத்தொடங்கியது. லிவியா விரித்த காதல் வலையில் ஒகஸ்டஸ் விழத்தொடங்கினான். ஒரு நாள் கூட லிவியாவை காணாவிட்டால் சித்தப்பிரமை பிடிப்பது போல காணப்பட்டான். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த லிவியா தனது திருமண ஆசையினை வெளியிட்டாள். ஏற்கனவே லிவியாவில் பைத்தியமாயிருந்த ஒகஸ்டஸ் மன்னன் உடனடியாகவே அவளை மணக்க சம்மதித்தான். தனக்கு பேரக்குழந்தை இருப்பது பற்றி கூட கவலைப்படாமல் பகிரங்கமாகவே தனது திருமண அறிவிப்பினை வெளியிட்டு லிவியாவை கைப்பிடித்தான். உலக வரலாற்றில் நிறைவேற்ற முடியாத ஆசையைக் கூட நிறைவேற்ற முடியும் எனும் நிகழ்வு லிவியாவின் வாழ்வு மூலமே உலகிற்கு படிப்பினையானது ஒகஸ்டஸ் உடனான திருமணம் மூலம் ரோம சாம்ராஜ்ய ராணியாக முடிசூடிக்கொண்ட லிவியா அதன் பின்பே தனது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினாள். ஒகஸ்டஸ் மன்னனை தனது கைப்பொம்மையாக்கி அரசையே



ஆட்டுவித்தாள். அரசனின் முதல் தாரத்து மகளையும் பேரக்குழந்தையையும் ஒதுக்கி வைத்தாள். அவர்களின் உறவினர்கள் எவரையும் அரண்மனைக்குள் அனுமதிக்க வேண்டாம் என உத்தரவிட்டாள்.

அத்துடன் அவள் நிற்கவில்லை. தனது நிறைவேறாத ஆசைகள் அனைத்தையும் அடையத்தொடங்கினாள். சிறுவயதில் இருந்தே அதிக காமவேட்கை உள்ளவள் லிவியா. ஆனால் தனது காமப்பசியை அடக்க உரிய வழி இல்லாமலேயே காணப்பட்டவள். திபேரியஸை திருமணம் முடித்த பின்னரே முதல் தடவை உடல் சுகத்தினை அனுபவித்தவள். ஆனால் தற்போது ஒகஸ்டஸ் மன்னன் வயது முதிர்ந்த நிலையில் இருப்பதால் அரண்மனையில் பணிபுரியும் கட்டுமஸ்தான ரோமாபுரி படை இளைஞர்களை தனது அந்தப்புரத்திற்கு வரவழைத்தாள். இதன் உச்சக்கட்டமாக ரோமாபுரி அரண்மனை அந்தப்புரத்திற்கு வரவழைக்கப்பட்ட இளைஞர்கள் உடலில் ஆடை அணியாமல் முழு நேரமும் நிர்வாணமாகவே காணப்பட வேண்டும் என்ற எழுதப்படாத உத்தரவை கூட பிறப்பித்தாள்.

வரலாற்றாசிரியர்கள் லிவியாவை ரோமாபுரியின் குள்ளநரி என்றே குறிப்பிடுகின்றனர். லிவியா கர்ப்பமுற்று ஓர் ஆண் குழந்தையை பெற்றாள். அப்போது லிவியாவின் குழந்தைக்கு யார் தந்தை என நாடு முழுவதும் கிசுகிசுக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது.

இவ்வளவு நடந்த பின்னரும் அவளின் அதிகார வெறி அடங்கவில்லை. ஒரு நாள் ஆசையாக மன்னன் ஒகஸ்டஸிற்கு பன்றிக்கறி பரிமாறினாள். அதனை உண்ட மன்னர் சிறிது நேரத்திலேயே மரணமடைந்து விட்டார். அதன்பின் உடனடியாகவே தனது மகனை அடுத்த மன்னனாக அவசர அவசரமாக முடி சூடப்பண்ணினாள் லிவியா.

தனது வாழ் நாளில் 80 வயது வரை வாழ்ந்த லிவியா தனது இறுதிக்காலத்தில் சுடலை ஞானம் பிறந்ததோ என்னவோ தான் இறந்தால் மன்னன் ஒகஸ்டஸினுடைய கல்லறையிலேயே தன்னையும் அடக்கம் செய்ய வேண்டும் என தனது இறுதி விருப்பத்தை வெளியிட்டாள். அவள் காலமாகியபின் அவ்வாறே அவளது உடல் மன்னன் ஒகஸ்டஸின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.



(ரகசியங்கள் தொடரும்...)

# முட் பாதையில் மரித்து மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**


## தீர்வு யோசனைகளுக்குத் தடையாக மீண்டும் வடக்கு - கிழக்கு இணைப்பு

இந்தியாவின் முன்முயற்சியோடு 'இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு' காண்பது தொடர்பாகப் பெரும் கருத்து முரண்பாடுகள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் அமைச்சர்கள் மத்தியில் காணப்பட்டன. அமைச்சர்கள் காமினி திசாநாயக்காவுக்கும் லலித் அதுலத் முதலிக்குமிடையில் பெரும் கருத்து முரண்பாடுகள் நிலவின. பேச்சுவார்த்தை மூலமான தீர்வை, அமைச்சர் காமினிதிசா நாயக்கா விரும்பினார். பிரதமர் பிரேமதாசாவும் லலித் அதுலத் முதலியும் யுத்தத் தீர்வை விரும்பினார்கள்.

### 159 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

தமிழர் தாயகக் கோட்பாடு மற்றும் வடக்கு - கிழக்கை இணைத்து ஒரு நிர்வாக அலகாக்குதல் ஆகிய இந்தியாவின் யோசனைகளை அமைச்சர் லலித் அதுலத்முதலி கடுமையாக எதிர்த்தார். இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியைச் சந்தித்து உத்தேச யோசனைகள் தொடர்பாக இரகசியப் பேச்சுவார்த்தை யொன்றினை நடத்த தான் விரும்புவதாக அமைச்சர் அதுலத் முதலி, தீக்ஷித்திடம் கூறினார்.

அப்படியானதொரு கோரிக்கையை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவே இந்தியப் பிரதமருக்கு விடுக்க வேண்டுமென்று முகத்திலடித்தாற் போலப் பதிலளித்தார் தீக்ஷித். அமைச்சர் காமினி திசாநாயக்கா; 'ஹிந்து' பத்திரிகை இணையாசிரியர் என்.ராமுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து, முழுமையாக ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு விளங்கப்படுத்தவில்லையென்று, பிரதமர் ராஜிவ் காந்திக்குத் தனது தனிப்பட்ட வழிமுறைகள் மூலம் அறிவிக்கவிருப்பதாக லலித் அதுலத் முதலி தனக்கு நெருக்கமான சில பத்திரிகையாளர்களிடம் தெரிவித்திருந்தார். அத்துடன் காமினி திசாநாயக்காவினால் தவறாக வழிநடத்தப்பட்டதாலேயே, ஜனாதிபதி ஜெயவர்த்தனா, ராமுடன் பேசினாரென்றும் அதுலத் முதலி



1987ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு முன்னோடியான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் எடுக்கப்பட்ட படம், இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித்தின் கொழும்பு வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரத்துங்கப் பிரபல பத்திரிகையாளர் மேர்வின் டி சில்வாவுடன் கலந்துரையாடுவதைப் படம் காட்டுகிறது.

தெரிவித்திருந்தார். சிங்கள மக்களின் அபிப்பிராயங்களையும் அபிலாஷைகளையும் கணக்கிலெடுக்காமலே இப் பேச்சுகள் நடத்தப்பட்டிருப்பதாகவும் அதுலத் முதலி தெரிவித்திருந்தார்.

இதேவேளை, அமைச்சர் காமினி திசாநாயக்காவும், அமைச்சர் லலித் அதுலத் முதலிக்கு எதிரான கருத்துக களைக் கூறியிருந்தார். அமைச்சர் லலித் அதுலத் முதலி தெரிவிக்கும் கருத்துக்களை இந்தியா கவனத்தில் எடுக்க வேண்டிய தேவையில்லையென்று காமினி திசாநாயக்கா, தீக்ஷித்திடம் கூறியிருந்தார். இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் அமைச்சர் அதுலத் முதலிக்கு விருப்பமில்லையென்றும் காமினி திசாநாயக்கா கூறியிருந்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு மாகாண சபையை ஏற்படுத்தும் யோசனையையும் அமைச்சர் லலித் அதுலத் முதலி விரும்பவில்லை. வடக்குக்கும்

**(அரசியல் தொடர்)**

கிழக்குக்கும் தனித்தனியான மாகாணசபைகளைத் தேர்தல்கள் மூலம் ஏற்படுத்தி பின்னர், இரு சபைகளின் விருப்பத்தின் மூலம் அவற்றை இணைத்துக் கொள்ளலாம் என்பதே அதுலத் முதலியின் வாதமாகும்.

இதற்கிடையில் ஜூலை ஒன்பதாம் திகதிக்கும் பதினொராம் திகதிக்குமிடையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் இந்திய உயர் ஸ்தானிகர் தீக்ஷித்தும் மூன்று தடவைகள் சந்தித்துக் கலந்துரையாடினர். வடக்கு - கிழக்கு மாகாண பாராளுமன்ற ஆசனங்களுக்கான இடைத் தேர்தலை ஒத்திப் போட ஜனாதிபதி ஜெயவர்த்தனா இணக்கம் தெரிவித்தார். தேர்தல் திணைக்களம் இந்த இடைத் தேர்தல்களுக்கான திகதியை ஏற்கனவே அறிவித் திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய கமிட்டி இந்த இடைத் தேர்தல்களை ரத்துச் செய்வதென்று எடுத்த முடிவை யடுத்து, ரத்துச் செய்யும் முடிவு ஜூலை மாதம் பதின்மூன்றாம் திகதி அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி ஜெயவர்த்தனா பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு ஆதரவாக அமைச்சர் காமினி திசாநாயக்காவையும் எதிராக அமைச்சர் லலித் அதுலத் முதலியையும் பயன்படுத்துகிறாரென்றே பொதுவாக இந்திய வட்டாரங்கள் நம்பின.

இதற்கிடையில் யாழ். குடா நாட்டில் பதற்றம் அதிகரிக்கத் தொடங்கியது. இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. இந்தியாவின் நிவாரண உதவிகளும் கப்பல்கள் மூலம் யாழ். குடாநாட்டுக்கு அனுப்பப் பட்டுக் கொண்டிருந்தன. ஆனாலும் கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் இலங்கை. படைகளும் ஆயுதங்களும் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பிரதமர் பிரேமதாசா, அமைச்சர் லலித் அதுலத் முதலி, ஜனாதிபதியின் மகன் ரவி ஜெயவர்த்தனா ஆகியோர் கடும்போக்கு நிலைப் பாட்டை எடுத்திருந்ததால் என்ன செய்வதென்று தெரியாமல் ஜனாதிபதி ஈடாடிக் கொண்டிருந்தார்.

இதற்கிடையில், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நீலன் திருச்செல்வம், எஸ்.சூசைதாசன், அமைச்சர்கள் ஏ.சீ.எஸ்.ஹமீத், சௌமியமூர்த்தி தொண்டமான், கே.டபிள்யூ.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

தேவநாயகம் ஆகியோருடன் தீக்ஷித்துடன் எழுந்துள்ள புதிய சிக்கல்கள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித்துடன் நடத்திய கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டு, ஒரு தொகுதி யோசனைகளடங்கிய நகல் அறிக்கையொன்றினை அமைச்சர் காமினி திசாநாயக்கா தயாரித்து. அதனை ஜூலை மாதம் 12ஆம் திகதி இரவு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் சமர்ப்பித்திருந்தார். இந்த நகல் யோசனைகள் குறித்து 13ஆம் திகதி மாலை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் தீக்ஷித்தும் கலந்துரையாடினர். வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்லாமல், முழு நாட்டுக்குமே தமிழ் மொழி உத்தியோகபூர்வ மொழியாக்கப்பட வேண்டுமென்ற யோசனையைத் தீக்ஷித் அங்கு முன்வைத்தார். தமிழர்கள், தனியானதொரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார். அத்துடன் வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாக இணைக்க வேண்டுமென்பதையும் காலம் தாழ்த்தாமல் அதனை விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்றும் தீக்ஷித் வலியுறுத்தினார். அதன் பின்னர் அன்றைய தினமே மீண்டுமொரு முறை ஜனாதிபதியும் தீக்ஷித்தும் சந்தித்துப் பேசியபோது அமைச்சர் காமினி திசாநாயக்காவும் உடனிருந்தார். நான்கு மணித்தியாலங்கள் நீடித்த இச் சந்திப்பு, இரவு பதினொரு மணியளவில் முடிவடைந்தது. இந்தச் சந்திப்பின்போது நகல் யோசனைகள் தொடர்பான பொதுவான இணக்கப்பாடொன்று ஏற்பட்டது. என்றாலும் வடக்கு கிழக்குக்கு மட்டுமே தமிழ் மொழியை உத்தியோகபூர்வ மொழியாக்கலாமென்றும் வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டுமென்றும் ஜெயவர்த்தனா யோசனை தெரிவித்தார்.

இப் பிரச்சினைகள் குறித்து அமைச்சர்கள் காமினி திசா நாயக்காவுடனும் லலித் அதுலத் முதலியுடனும் கலந்துரையாடுமாறு தீக்ஷித்தை ஜனாதிபதி ஜெயவர்த்தனா வேண்டிக் கொண்டார். கிழக்கு மாகாண முஸ்லிம்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீதுடன் கலந்துரையாடுமாறும் ஜெயவர்த்தனா, தீக்ஷித்தைக் கேட்டுக் கொண்டார். வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாக இணைப்பதென்றால், உருவாக்கப்படவிருக்கும் மாகாண சபையில் முஸ்லிம்களுக்கு 33 சதவீத பிரதிநிதித்துவம் தேவையென அமைச்சர் ஹமீத் வலியுறுத்தினார். வடக்கு - கிழக்கு இணைப்பை ஏற்படுத்துவதற்காக முஸ்லிம்களுக்கு மாகாண சபையில் 33 சதவீத பிரதிநித்துவம் வழங்கப் படுவதை தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரிக்குமென்றும் அமைச்சர் ஹமீத் கூறினார். ஆனால், இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 12 சதவீதமாகவே இருப்பார்களென்பதால், 33 சதவீத பிரதிநிதித்துவம் வழங்குவது நியாயமானதல்ல என்றார் தீக்ஷித். இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்குவது, ஊர்க்காவல் படையைக் கலைப்பது, விசேட அதிரடிப் படையை வாபஸ் பெறுவது போன்ற யோசனைகளைத் தாம் கடுமையாக எதிர்ப்பதாக அமைச்சர் லலித் அதுலத் முதலி கூறினார்.

(தொடர்ந்து வடியும்....)




திறமைகளால் மெய் சிலிர்த்துப் போன ஜயந்தன், ஸ்ரீகுமாரைக் கொல்ல கோவிந்தனை அனுப்புகிறான். அவன் ஸ்ரீகுமாரின் வீட்டை அடைந்த போது அங்கு ஸ்ரீதேவியும் இருந்தாள். கோவிந்தன் வந்ததை கவனித்த அவனை யார் என்று அடையாளம் கண்டு கொள்வதற்குள் ஸ்ரீதேவி கோவிந்தனை விரட்ட ஆயத்தமாகிறாள்.

**பாய்ந்து** வந்த திரி அவனது வாய்க்குள் நுழைந்து மறைந்தது.

"ஓகோ... அப்படியா சேதி?" -ஸ்ரீதேவி கேட்டாள்.

"திரியை மட்டுமில்லை....வேண்டுமானால் அந்த நில விளக்கையே கூட விழுங்குவேன்!"

"ஓகோ.... அந்த அளவுக்குச் சக்தி இருக்கிறதா என்ன?" ஸ்ரீதேவி கேட்டாள்.

"பார்த்துக்கொள்!" - என்றவாறு வலது காலால் துளசிமாடத்தை ஒரு தட்டுத் தட்டினான்.

துளசிமாடம் இடம் பெயர்ந்து ஒருபுறமாகச் சரிந்து விழுந்தது. அதையே கவனித்துக் கொண்டிருந்த ஸ்ரீதேவி மறுவினாடி குமாரைத் திரும்பிப் பார்த்தாள். அவரது முகத்தில் திகைப்பு தெரிந்தது.

'உடனடியாக என்ன செய்யலாம்?' -என்று யோசித்தாள் ஸ்ரீதேவி. பிறகு "இதோ வந்துவிடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

அடுத்த விநாடி அவள் கோயிலில் இருந்தாள். சௌபர்ணிகா என்கிற துவாரபாலிகையின் முன்னால் வந்து நின்றாள்.

"எதிராளி பயங்கரமான சக்தியுடன் வந்திருக்கிறான். என்னால் அவனைச் சமாளிக்க முடியுமென்று தோன்றவில்லை!" - ஸ்ரீதேவி முறையிட்டாள்.

"பயப்படத் தேவையில்லை. நீ புறப்படலாம். நான் கவனித்துக் கொள்கிறேன். தேவைப்படும் போதெல்லாம் நான் உன்னருகில் இருப்பேன்!" - சிலையிலிருந்து பதில் வந்தது.

அந்தப் பதிலில் திருப்தியடைந்த ஸ்ரீதேவி மறு விநாடி இல்லத்துக்கு வந்து சேர்ந்தாள். அப்போது கோவிந்தன், குமார் மீது பாயத் தயாராகிக் கொண்டிருந்தான்.

குமாரின் கையில் திருமேனி கொடுத்த தாயத்து இருந்தது. ஒரு தடவை முயற்சி செய்து

**எழுதுவது**
**சிவன்**


பார்க்கலாமே என்று நினைத்துத்தான் அதை வெளியே எடுத்து அவனுக்கு முன்பாக நீட்டினார்.

அதைப் பார்த்த கோவிந்தன் என்ன காரணத்தாலோ திடுமென்று அசைவற்று நின்று போனான். ஸ்ரீதேவி இந்தக் காட்சியைக் கவனிக்கவே செய்தாள்.

ஆனால், அப்போதைய சூழ்நிலையில் அந்தத் தாயத்தை அவனது கையில் கட்டுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. மீறி கட்ட முனைந்தால் அந்தத் தாயத்தை அவன் அசுத்தப்படுத்தவோ, அழிக்கவோ செய்தால் நிலைமை மேலும் சிக்கலாகிவிடும் என்பதால் குமார் அந்த முயற்சியைத் தொடரவில்லை.

"இனி பயப்படத் தேவையில்லை!" - ஸ்ரீதேவி ஆறுதல்படுத்தும் முகமாகக் கூறினாள்.

ஸ்ரீதேவியின் உடம்பில் ஏதோ ஓர் அசைவு தென்பட்டது. உருவமில்லாமல் வந்த



சௌபர்ணிகா, ஸ்ரீதேவியின் உடம்புக்குள் பிரவேசித்தாள்.

வராந்தாவிலிருந்த ஸ்ரீதேவி கீழே இறங்கினாள்.

"அங்கே போகாதே ஸ்ரீதேவி!" - குமார் தடுக்கப் போனார்.

"நீங்க பயப்பட வேணாம். நான் ஒரு சின்ன முயற்சி செஞ்சு பார்க்கிறேன்!" -ஸ்ரீதேவி, கோவிந்தனை நெருங்கினாள்.

"உனக்குத்தான் மகத்தான சக்தி இருக்கே! என்னை ஒருதடவை பிடிச்சுப் பாரேன்!" - ஸ்ரீதேவி ஒருவித வீறாப்புடனே பேசினாள்.

கோவிந்தன் தனது வலது கையை நீட்டி ஸ்ரீதேவியைப் பிடிக்க முயன்றான். ஸ்ரீதேவியின் உடம்பில் கைபட்டதும் படாததுமாக நெருப்பைத் தொட்டது போல் பின்னுக்கு இழுத்துக்கொண்டான்.

மறுபடியும் அவனது கை முன்புறமாக நீண்டது.

அப்போது குமார் ஒரு காட்சியைக் கண்டார். ஸ்ரீதேவியின் உடல் நிறம் மாறிக்கொண்டே வந்தது. அந்த உடம்பில் சிவப்பு நிறம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

அந்த உடம்பு நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய செப்பு போல் பளபளத்தது. அவளது மொத்த உடம்புமே அந்த நிறத்துக்கு வந்தது.

அந்த உடம்பிலிருந்து புறப்பட்ட வெப்பம் தனது உடம்பை மிகவும் கடுமையாகத் தாக்குவதாக கோவிந்தனுக்குத் தோன்றியது.

அவன் பின்புறமாக நகர்ந்தான்.

சற்றுத் தொலைவு நகர்ந்தவன் சட்டென்று திரும்பி, தெருவாசற்படியைக் கடந்து ஓடி மறைந்தான்.

அதன் பிறகு ஸ்ரீதேவி தனது பழைய வடிவத்துக்குத் திரும்பினாள்.

"என்ன இதெல்லாம்?" -குமார் கேட்டார்.

"இதெல்லாம் என்னோட கெட்டிக்காரத்தனமில்லை. கோயில்ல இருக்கிற பகவதியோட அருள்!"

"எனக்குப் புரியலையே!" குமார் ஒன்றும் புரியாதவராகக் கேட்டார்.

"மனுஷங்களுக்கெல்லாம் அப்படித்தான் இருக்கும்" -அவள், அவரைப் பார்த்துச் சிரித்தவாறே பேசினாள்.

கோவிந்தன் திரும்பி வந்தான். போன காரியத்தில் வெற்றி பெற்றுத்தான் திரும்புகிறான் என்று காத்திருந்த இருவரும் நினைத்தனர்.

"காரியம் பழம்தானே?" - ஜயந்தன் கேட்டார்.

"அவன் அங்க தனியா இல்லை...."

"அப்படீன்னா-?" -ஜயந்தன் கேட்டார்.

"நான் அங்க போகும்போது அவன் தனியாத்தான் இருந்தான்.

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# வெறும் அறிவின் விளைவுகள்

**மேனாட்டு** விஞ்ஞானிகளான ஜன்ஸ்டன், ஓப்பன் ஹீமர், ஏ.ஏ.காக்ரன், ஷ்ரோடிஞ்சர் என்ற பலரும் பௌதிகத்தின் எல்லையில் நின்று அறிவு விளக்கம் தரும்போது அது படிக்கப் படிக்க இனிக்கிறது. மகிழ்ச்சியூட்டுகிறது, ஒரு நிறைவையும் திருப்தியையும் தருகிறது. அவர்கள் கூறுவனவற்றைத் தமிழ் மக்களுக்கும் கூறுவோம் என்று எழுதத் துவங்கும்போது எனக்குத் தயக்கம் ஏற்படுகிறது. “எனது கருத்துக்கள் என்னுடனேயே இருந்துவிட்டுப் போகட்டும், அவர்கள் கூறி நான் ஏற்றுக் கொள்பவையும் என்னுடனேயே இருந்துவிட்டுப் போகட்டும்” என்ற எண்ணங்கள் என்னுள் மேவுகின்றன.

காரணம், நான் வளர்ந்த பகுத்தறிவு வாதச் சூழ்நிலை; அது ஒரு யுகம். மறுமலர்ச்சி யுகம். பெரியாரும், அண்ணாவும், பாரதிதாசனும், ராதாவும் பல துறைகளில் ஆழ்ந்து போயிருந்த - தன்னம்பிக்கை யற்றிருந்த ஒரு சமுதாயத்திற்கு ஒளியூட்டினர். பகுத்தறிவு, தர்க்கவாதம், ஏன் என்று கேட்கும் துணிவு, பழமையை உடைத்தெறிந்துவிட்டு வெளிவரும் தீரம் எங்கும் கொப்பளித்தது.


ஏனெனில், சரித்திரம் காணாத அளவுக்குக் குறிப்பாகத் தமிழ்மகன், தன்னைப் பற்றிய உணர்வில் தாழ்ந்து போய்விட்டான். இது சாதியினால் ஏற்பட்ட விளைவு என்பதை மக்கள் உணர்ந்தார்கள். ஐம்பதாண்டுகளுக்குமுன் நமக்கு விஞ்ஞான அறிவு இல்லை. விதியும், சாதியும், மூட நம்பிக்கைகளும் மனிதனின் அன்றாட வாழ்வைப் பாதித்து முடக்கிவிட்டிருந்தன. இதை எதிர்த்துப் புரட்சியாகப் பகுத்தறிவு இயக்கம் தோன்றியது. தர்க்கவாத அறிவு வளர்ந்தது. மேடைப் பேச்சு கலையாக வளர்ந்தது. பழமையை அது எதுவாயிருந்தாலும் - நல்லதோ, கெடுதலோ அதைத் தாக்கித் தகர்த்தெறியும் மனோபாவம் தோன்றியது.

முன்பு ஒரு கொடுமை; அறியாமையின் கோடியில் வாழ்ந்த கொடுமை. மறுமலர்ச்சியின் விளைவாக நாம் மற்றொரு கோடிக்குப் போய்விட்டோமோ என்று நான் யோசிப்பதுண்டு; சந்தேகப்படுவதும் உண்டு.

இதன் விளைவாகப் பார்க்கலாம். தர்க்கவாத அறிவு நமக்கு ஒரு தன்மானத்தைக் கொடுத்தது. நம்பிக்கையைக் கொடுத்தது. சமமாக உலவி, பேச நடக்க நமக்குத் தைரியத்தைக் கொடுத்தது. இதன் விளைவாகப் பழமையிலுள்ள பரம்பரை பரம்பரையாக வந்த பழக்க வழக்கங்கள் அனைத்தையுமே நாம் தூக்கி எறிந்துவிடத் தயாராய் இருந்தோம். வயதேற ஏற அனுபவம் பெறப் பெற நமது தலைவர்களிடையே யும் முன்னோடிகளிடையேயும் இலைமறை காயாய் குழப்பங்கள் தோன்றின. இதைத் தெளிவுபடுத்த அண்ணா ‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’ என்றார். யோகிகள், சாமியார்கள் என்ற போர்வையில் உலவிய திருடர்களை அண்ணா சாடினாரே தவிர, தியான மார்க்கத்தை ஆண்டவனுடன் ஐக்கியப்பட்டு ஒருமுகப்பட்டு உணர்வு பெறும் நிலையை அவர் ஒருகாலும் ஒறுக்கவில்லை. ஆனால் பாமர மக்களிடமோ, அவர்களுக்கு ஒருபடி மேலே நின்று அவர்களை அழைத்துச் செல்வதாகக் கூறிக்கொண்டே தொண்டர்களிடமோ போலிச் சாமியார்களுக்கும் தியான மார்க்கத்திற்குமான வேறுபாடு புலப்படவில்லை. அப்படி வேறுபாட்டை உணர்வது, உணர்த்துவது, தங்களைத் தாங்களே மறுத்துக்கொள்வது போல அவர்களுக்குப் பட்டது. தங்கள் முந்திய கருத்துக்களுக்கு மாறுபட்டுப் பேசுவது போலப் பட்டது.

மதச் ச[...] விவரம் புரியாது [...] கொண்டோம் [...] அதிலிருந்து வி[...] அவன் அடிப்படைகள்கூட தேவையில்லை என்ற ஒரு மறு கோடிக்குப் போய்விட்ட நிலை பின்பு.

நாம் எதனையும் காய்தல் உவத்தலின்றி வள்ளுவன் கூறுவது போல் பார்க்க வேண்டும்; பார்க்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.



அப்போதுதான் அதிகப் பயன்பெற முடியும். அப்பன் வெட்டிய கிணறு என்று மூடத்தனமாக உப்புத் தண்ணீரைக் குடிப்பதோ, மாற்றான் வீட்டு மல்லிகை இது, இதற்கு மணம் கிடையாது என்று பிடிவாதமாக மறுக்கும் பழக்கமோ வாழ்க்கைக்குப் பயன் தராது.

இன்று நாம் அறிவு பெற்ற நிலையில், அனுபவம் பெற்ற நிலையில், ஆங்கிலம் என்ற ஜன்னல் வழியே வெளி நடப்பைப் பார்க்கும் ஒரு காலத்தில் வசிக்கிறோம்.

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி (168)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | 9 | 10 | | 12 |
| 13 | | 15 | 16 | 17 | |
| | 20 | | | 23 | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 16.05.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-168
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 166க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

சியாமளா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. எப். அனிற்றா, 58, கிறீன் ஒழுங்கை, கொழும்பு - 13.
2. க.சாயிசங்கர், M 28, நவகம்புர, ஸ்டேஸ் வீதி, கொழும்பு - 14.
3. சி.மதிவதனி, எம்.ஓ.எச்.விடுதி ஒழுங்கை, கல்முனை.
4. ஜே.மலர்விழி, 155/07, ஜெம்பட்டா வீதி. கொழும்பு - 13.
5. இந்திராணி பத்மராஜன், 86/6, டன்பார் வீதி, ஹட்டன்.
6. திருமதி. எம். சுந்தரேசன், 49, பார்க் வீதி, ஹட்டன்.
7. கே. சுபஹைர், 5C, கடற்கரை வீதி, கல்முனைக்குடி - 05.
8. எம்.ஜே. பெர்னாண்டோ, 30/3, புனித லூசியாஸ் ஒழுங்கை, கொட்டாஞ்சேனை.
9. வி.சாநகா, 20, தெற்கிலுப்பைக்குள வீதி, சின்னப்புதுக்குளம், வவுனியா.
10. எஸ்.எச்.எம். ரம்ஷாத், 268, ஹனீபா வீதி, கல்முனைக்குடி.

### இடமிருந்து வலம்

1. இராசிகளில் ஒன்று.
7. யன்னல் என்பதன் ஒத்த கருத்து (குழம்பியுள்ளது).
15. நூறு என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
23. ஒளி அல்லது ஞானம் என்றும் கூறலாம்.
25. வீதி (திரும்பியுள்ளது).
28. பௌத்த துறவியை இவ்வாறு அழைப்பர் (திரும்பியுள்ளது).
31. பெறுமதியான மரமொன்று (திரும்பியுள்ளது).
35. வேறுபாடு அல்லது தகுதி என்று பொருள்.

### குறுக்கெழுத்துப் போட்டி 166 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மே | 2 தி | 3 ண | 4 ம் | | 6 ண |
| 7 தா | 8 ச | | 10 ஓ | 11 ட | 12 ம் |
| 13 வி | 14 மா | 15 யா | | 17 க | 18 பி |
| | | 21 ழ் | 22 க் | 23 மை | |
| 25 ணை | 26 ஆ | | 28 ரி | | 30 தே |
| 31 வீ | 32 ம | 33 ன் | | 35 தீ | 36 ஆ |

### மேலிருந்து கீழ்

1. மருத்துவ குணமுள்ள சுவைச்சரக்கொன்று.
2. துறவி என்றும் கூறலாம் (தலைகீழ்).
3. செல்வம் என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
4. அம்பு என்பதன் ஒத்தக்கருத்து (தலைகீழ்).
6. தாய்ராகங்களில் ஒன்று.
17. இறைவனுக்குப் பாடப்படும் பாமாலை (குழம்பியுள்ளது).
20. சிங்கள மக்களின் பண்டிகையொன்று.
24. விஜயகாந்த் நடித்து வெளியான திரைப்படமொன்று.
25. கொத்தாக இருப்பதை இவ்வாறு அழைப்பர் (தலைகீழ்).

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்



- வழங்குவது றாஹில்

## நீ வெளிச்சம் அடையாத போது!

**சாவியை** வீசிவிட்டு கதவு திறப்பதற்கு முயற்சிக்கிறாய் நீ!

சிறகினைக் கத்தரித்துவிட்டுப் பறக்க விரும்புகிறாய்.

வேரை வெட்டிவிட்டு கிளைகள் பூக்குமென்று காத்திருக்கிறாய்.

கண்கள் மூடிக்கொண்டு காட்சி காண்பதற்குத் துடிக்கிறாய்.

மனதைக் காற்றில் கலந்துவிட்டு வெறுங்கூடாகக் கடவுளிடம் நிற்கிறாய்.

உணர்வில் உலகாசை நிரம்பியிருக்க இறைவன் சந்நிதியில் நீ கண்ணீராகக் கசிகிறாய்.

வீட்டை அழுக்குகளுக்கு அடகுவைத்துவிட்டு முற்றத்தை மட்டுமே சுத்தமாக வைத்திருக்கிறாய்.

உன்னைச் சுற்றியுள்ள சூழலை அசுத்தமாக்குகிறாய்.

உன் இதயம் சோகத்தால் உடைகின்றபோது ஆலயம் அடைகிறாய் வெறும் உடலால்.

உன் கண்ணீர் உன்னை மூழ்கடிக்கும்போது கோயில் வாசலில் மூச்சுத்திணறுகிறாய்.

விழிவியர்வையில் நீ அடித்துச் செல்லப்படும் போது மசூதியில் நிற்கிறாய் துர்நாற்ற நினைவுகள் சுமந்து கொண்டு.

உன் தேகத்தை அடிக்கடி தண்ணீர் தழுவுகிறது.

உன் சுவாசம் நறுமணத்தால் மோட்சம் பெறுகிறது.

உன் புறத்தைப் பற்றிக் கோடிமுறை நீ குறிப்பெடுக்கிறாய்.

ஆனால்;

உன் மனதுக்கு நறுமண மழை செய்திருக்கிறாயா?

உன் இதயத்தைச் சுத்தமான தண்ணீரில் குளிக்கச் செய்திருக்கிறாயா?

அழுக்கு நினைவுகள் அழைத்து விருந்தோம்புகிறாய்.

அசுத்தமான கனவுகள் பிடித்து வைத்திருக்கிறாய்.

இந்தப் பூமியே வேண்டுமென்று உனது புலன்கள் சொன்னாலும் அதை அடைவதற்கு மூச்சு இறைக்கின்றாய்.

மொத்தத்தில் உன் விலாசம் உன் மனதிடம் இல்லை.

உன் உணர்வுகளில் இரத்தவாடை குடியிருக்கும் போது கடவுள் ஆசி தூரத்தில் நிற்கிறது.

இறைவனிடம் உன் ஆசைகளை எடுத்துச் செல்லாதே.

உன் கோபத்தைத் துடைத்துச் சுத்தம் செய்துவிட்டுக் கடவுளை அழை!

உன்னால் ஒரு நிமிடம் மௌனம் வளர்க்க முடியுமா?

உனக்குள் ஆயிரம் வார்த்தைகள் வெடித்துச் சிதறுகின்றன.

உன் அமைதிக்குத் தீக்குச்சி கொடுக்கிறாய் ஆசைகளால், ஆசைவேரில் நீ நிற்கின்ற போது.

உன் மனதை உனக்கு மரியாதைப்படுத்தத் தெரியாத போது...

உனக்குள் ஒளிந்திருக்கின்ற வெளிச்சத்தை நீ அடையாத போது...

எந்தக் கதவுகளும் உனக்காகத் திறப்பதில்லை.

இறைவன் தூரமாக நின்று உன்னை வேடிக்கை பார்க்கிறான்.

# உயிரைக் குடித்த குடி

"**யோவ்** மாஸ்டர் நில்லு" என்றபடி தள்ளாடி வந்து கொண்டிருந்தான் கனகசபை. சத்தம் கேட்டு சைக்கிளிலிருந்து இறங்கிய சுந்தரம் அவன் நடையிலிருந்தும் பேச்சிலிருந்தும் அவன் நன்றாகக் குடித்திருக்கிறான் எனப் புரிந்து கொண்டார்.

"என்ன கனகசபை இண்டைக்கு காலையிலயே ஆரம்பிச்சிட்ட போல இருக்கு".

"அது கிடக்கட்டும். நான்தான் சொன்னேனே வாணி பள்ளிக்கு வரமாட்டா எண்டு. எதுக்கு வீட்டபோய் காசு குடுத்த?"

"வாணி கெட்டிக்காரி. அவ நல்லாப் படிச்சி நல்லா வரோணும் எண்ட எண்ணம் உனக்கு இல்லையா?"

"எண்ணம் இருந்து என்ன செய்ற? பள்ளிக்கு போற நேரத்தில நாலு வீட்ட போய் பாத்திரம் தேய்ச்சாலாவது காசு கிடைக்கும்"

"வாணியோட நல்லதுக்குத்தான் சொல்லுறன் என்றார் கனகசபை. அவள் நல்லாப் படிப்பிச்சா அவ எதிர்காலம் நல்லா இருக்கும்"

"மாஸ்டர்..... பள்ளிக்குப் போய் இருக்கிற புள்ளகள படிப்பிச்சு பெரிய ஆளாக்கிற வேலயப்பாருங்க. நேத்து வீட்ட குடுத்தியே காசு, அதில தான் இண்டைக்கு குடிச்சன். உன்னால என்ன செய்ய ஏலும்? போய்..... வேலயப்பாரு"

சைக்கிள் சக்கரங்கள் சுழல்வதைப்போல் சுந்தரத்தின் நினைவுகள் முன்தினம் நடந்ததைப் பற்றியே சுழன்று கொண்டிருந்தன. கனகசபையின் வீட்டு முற்றத்திலே இருந்து விளையாடிக் கொண்டிருந்தாள் வாணி. சுந்தரத்தைக் கண்டதும்....

"வணக்கம் சார்"

"என்ன வாணி மூணு நாளா பள்ளிக்கு வரவேயில்ல?"

"....................."

"என்ன வாணி ஏன் பேசாம இருக்கிற? ஏன் பள்ளிக்கு வரல்ல?"

"அப்பா புத்தகம் வாங்கிக் குடுக்கமாட்டன் எண்டு சொன்னவர். புத்தகம் இல்லாம படிக்க வரக்கூடாதுன்னு நீங்க தானே சொன்னீங்க"

"அது தான் நீ வரல்லயா? என்னட்ட வந்து இதச் சொல்லியிருக்கலாம் தானே"

"ஐயா நான்தான் போக வேணாம் எண்டு சொன்னேன்" சுந்தரம் நிமிர்ந்தபோது கனகசபையின் மனைவி தங்கம் கண்ணீர் நிறைந்த கண்களுடன் நின்றிருந்தாள்.

"ஐயா, இவங்க அப்பாட்ட எவ்வளவு சொன்னாலும் கேட்கிறாரில்ல. அந்த பாழாப்போன குடிய எப்ப விடப்போறாரோ தெரியாது. இந்த அஞ்சு பொம்பளப்பிள்ளகளயும் வச்சுட்டு கஷ்டப்படுற எனக்கு இவள படிப்பிக்கிற அளவு காசு இல்ல"

"இந்தாங்க. இந்தக் காசில வாணிக்கு புத்தகம் வாங்கிக் குடுங்க. வாணியோட படிப்புக்காக நான் என்ன உதவியெண்டாலும் செய்றன், தயங்காம கேளுங்க".

"அக்கம் பக்கத்தில வேல செஞ்சு வாங்கிற காசு எல்லாத்தையும் அடிச்சு மிரட்டி வாங்கிட்டுப் போய் குடிச்சிட்டு வாறார். நானும் என் பிள்ளைகளும் சாப்பாடு இல்லாமல் கூட இருந்திருக்கம். ஐயா, நீங்களாவது கொஞ்சம் அந்த மனுஷனுக்கு புத்தி சொல்லுங்க"

"கவலைப்படாதீங்க. நான் கனகசபையோட கதைக்கிறன். என்ன கஷ்டம் வந்தாலும் பிள்ளைகளிட படிப்ப நிறுத்திடாதீங்க நான் பொயிற்று வாறன்"

வாணியின் கல்விக்காக புத்தகம் வாங்கக் கொடுத்த பணத்தில்தான் கனகசபை குடித்திருக்கிறான் எனப் புரிந்து கொண்டார் சுந்தரம். சில நாட்களாகத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த வாணி மீண்டும் ஒரு வாரமாகப் பாடசாலைக்கு வரவில்லை. சுந்தரம் வாணியைப் பார்க்கச் சென்றபோது வாணியை பாயில் படுக்க வைத்திருந்தார்கள். வாணி மிகுந்த வேதனையுடன் முனகிக் கொண்டிருந்தாள். ஒருவாறு மருத்துவரை அழைத்து வந்தார் சுந்தரம்.

"டாக்டர்"

"என்ன மாஸ்டர் இவ்வளவு கவலையீனமாக இருந்திருக்கீங்க. இது வைரஸ் காய்ச்சல். நான் இதில் எழுதின மருந்தெல்லாம் வாங்கிக் குடுத்து கொஞ்சம் கவனமா பார்த்துக்கங்க"



-ச.ஹரண்யா, மட்டக்களப்பு.

கனகசபையை கூட்டிச்சென்று தேவையான மருந்தை வாங்கிக் கொடுத்தார் சுந்தரம். இரண்டு நாட்களின் பின் தெருவில் வந்து கொண்டிருந்த போது அந்த மருந்துக்கடைக்காரர் அழைத்தார்.

"வணக்கம் சார், சுகமாயிருக்கீங்களா? இரண்டு நாளா காணவே இல்ல"

"ஒண்டுமில்ல. பள்ளி வேலயா வெளியூர் போனனான். நேத்து தான் வந்தனான்"

"அப்படியா? சார் அண்டைக்கு வாங்கிட்டுப் போன மருந்த திருப்பி எடுத்துட்டு காசு தரச்சொல்லி கனகசபையிட்ட குடுத்து அனுப்பியிருந்தீங்க. ஒரு தரம் வித்தத மறுபடியும் நாங்க வாங்கிறல்ல. நீங்க கேட்டதுக்காக திருப்பி வாங்கிட்டு காசு குடுத்தன் சார்" என்றார் கடைக்காரர்.

அவர் சொல்லி முடித்ததும் நேராக கனகசபையின் வீட்டுக்கு ஓடினார் சுந்தரம். அங்கே கூடியிருந்த பெண்கள் ஒப்பாரி பாடிக் கொண்டிருந்தார்கள். கனகசபை ஒரு மூலையில இருந்து அழுது கொண்டிருந்தான். சுந்தரத்தைக் கண்டதும்.....

"ஐயா, என் மகள நானே கொன்னுட்டன். அண்டைக்கு குடிக்க காசு இல்ல. அதனால அந்த மருந்த வித்துக் குடிச்சன். ஆனா நான் வித்தது என் மகளிட உசிர" எண்டு இப்பதான் தெரியிது

"கனகசபை"

"ஐயா..... நான் இப்ப என்ன செய்வன் என் மகள கொன்னுட்டேனே... அநியாயமா என் பிள்ளய இழந்திட்டனே.... ஐயோ......."

"கனகசபை....... நீ இப்ப அதப் புரிஞ்சு என்ன பயன்? அநியாயமா ஒரு உயிர் போயிடுச்சு" என்றவாறு கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டார் சுந்தரம்.

"குடி குடியைக் கெடுக்குமென்பர். ஆனால் இங்கே ஒரு உயிரேயே குடித்து விட்டது என்று உடைந்து போனார் சுந்தரம் மாஸ்டர்.

## சிறு கதைகள்

# உடைந்த நிலா...

**அந்திப்** பொழுது ஆதவன் மறைந்து மென்மையான இருள் மெதுமெதுவாகப் பரவும் மென்மையான வேளை. பறவைகள் எல்லாம் வயிறு நிரம்பி அதன் கூடுகளுக்குச் செல்லும்போது, பட்டினி வயிற்றுடன் சோர்ந்து போய் துக்கம் தொண்டையை அடைக்க ஓய்ந்து போன ஆலமரம் போல் ஒதுங்கிப்போய் தன் உடைந்த காலை முன்னால் நீட்டி, தோளை தனது ஓலைக் குடிசையின் ஒரு கம்பத்தில் சாய்த்துக் கண்கள் வானத்தை நோக்கிப் பார்த்திருக்க முற்றத்தில் உட்கார்ந்திருந்தாள் கண்மணி.

பசி வயிற்றைப் புரட்டியெடுக்க பொறுமையுடன் அருகிலுள்ள குடத்திலிருந்து தண்ணீரைக் குடித்துவிட்டு வாசலை நோக்கி ஆவலுடன் யாரையோ எதிர்பார்த்திருந்தாள். அவள் எதிர்பார்த்திருப்பது தான் இன்னமும் உயிர்வாழக் காரணமான தன் ஒரே ஒரு சொத்தாகிய ஏழுவயது நிரம்பிய தன் மகனையே ஆகும். அவன் பெயர் ரவி. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களைப் பார்த்து தினம் தினம் கண்ணீர் வடிப்பவன். ஆரம்பப் பாடசாலைக்கே செல்ல வழியில்லாததால் தன் கல்விக்கு முற்றுப்புள்ளியிட்டான் அந்த ஏழைச் சிறுவன். அதை ஆரம்பிக்காமலேயே, இவன் தலையில் இப்பொழுது பெரிய சுமை. தன் தாயைக் காப்பாற்ற வேண்டும் என்று. செல்வத்தைக் கொடுக்காத இறைவன் இவனுக்கு நல்ல குரலைக் கொடுத்திருந்தான். அதை வைத்து அவன் வீதிகள், பஸ்வண்டிகளிலே பாடி ஒருசில ரூபாய்களைச் சம்பாதிப்பான். அதைக் கொண்டு இருவரும் ஒரு நாளில் ஒரு தடவையேனும் ஒழுங்காகச் சாப்பிடுவார்கள். அரைக் களிசானுடனும் ஓட்டை விழுந்த பெனியனுடனும் கண்களில் நீர் பெருக்கெடுத்தோட அவன் சோகங்களையெல்லாம் பாட்டில் சொல்லும்போது கலங்கி உருகாத நெஞ்சம் எதுவுமில்லை. இப்பொழுது கண்மணி காத்திருப்பது பாசமுள்ள இந்தக் குழந்தைக்காகத்தான். நேரம் செல்லச் செல்ல அவள் நினைவுகள் நிகழ்காலத்தை விட்டு அகன்று கடந்த காலத்தை நோக்கி புறப்பட்டது.

கண்மணிக்கு அப்போது பதினெட்டு வயது. அழகிய தோற்றமும் அமைதியான குணமும் கொண்டவள். இவளின் அழகைப் பார்த்து ஆச்சரியப்படாதவர்களே இல்லை எனலாம். கண்மணியின் பெற்றோர் அவளின் சிறுவயதிலேயே இறந்துவிட்டனர். அவள் தன் பாட்டியின் வீட்டிலேயே வாழ்ந்து வந்தாள். இவ்வாறு காலம் செல்லும்போது ராஜேஸ் எனும் அழகிய வாலிபனின் காதல் வலையில் சிக்குண்டாள் கண்மணி. ராஜேஸ் இவளை உண்மையாகக் காதலித்தாலும் அதிகமாக நேசிப்பது அவள் அழகைத்தான். இருவரின் வீட்டிலும் பலத்த எதிர்ப்புக் கிளம்ப இருவரும்



ஊரை விட்டு செல்ல முடி வெடுத்து யாருக்கும் தெரியாமல் ஊரைவிட்டு புறப்பட்டார்கள்.

இப்பொழுது கண்மணி இருக்கும் ஊருக்கு வந்து வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து திருமணம் முடித்து இருவரும் சந்தோஷமாக வாழ்ந்துவந்தார்கள். இவ்வாறு காலங்கள் உருண்டோட கண்மணி ஒரு குழந்தைக்குத் தாயானாள். பின் காலம் செல்லச் செல்ல கண்மணியின் கவர்ச்சியான தோற்றமும் கரைந்து கொண்டே வந்தது. இதனால் ராஜேஸும் படிப்படியாக கண்மணியின்மீது வெறுப்பைக் காட்டத்தொடங்கினான். இவ்வாறுள்ள போதுதான் வீதி விபத்தென்றில் கண்மணியின் கால் ஒன்று பறிபோனது. அவளால் எழுந்து நடக்க முடியாமல் போனது. இந்நிலையில் கண்மணியை முற்றாக வெறுத்த ராஜேஸ், கண்மணியையும் தன்மகன் ரவியையும் அநாதையாக விட்டுவிட்டு இன்னொரு பெண்ணைத் திருமணம் முடித்துக் கொண்டு

**-எம்.ரி.எம்.சிதாஸ், காத்தான்குடி.**

சென்று விட்டான் ராஜேஸ். அன்றிலிருந்து கணவனைப் பிரிந்த கண்மணியின் உள்ளம் கனத்துப்போனது.

"கண்மணி, கண்மணி" என பக்கத்துவீட்டுப் பிரமிளா அக்கா கூப்பிட்டதைக் கேட்டு திடீரென, அழுத கண்ணீருடன் தன் நிகழ்கால நினைவுகளுக்குள் மீண்டாள் கண்மணி. தன் முன்னே பதற்றத்துடன் கண்ணீர் சிந்த நின்ற பிரமிளா அக்காவைக் கண்டு "என்ன விஷயம்" என அமைதியாய் கேட்டாள் கண்மணி. "நம்ம ரவி... ரவி" என கூறியவளுக்கு அடுத்த வார்த்தை சொல்ல வாய் வரவில்லை. "என்னாச்சு சொல்லுங்க அக்கா" என பதறினாள் கண்மணி. கண்மணியின் அருகில் அமர்ந்து அவளைக் கட்டிக் கொண்டு "கண்மணி நம்ம ரவி நம்மள விட்டுட்டு போய்விட்டான்" என கூறினாள் பிரமிளா. "அக்கா என்ன சொல்றீங்க" என அகன்ற கண்ணுடன் அலறினாள் கண்மணி.

பஸ்ஸில் பாட்டுப்படித்துவிட்டு இறங்கும் போது கால் வழுக்கி வீதியில் விழுந்ததால் முன்னால் வந்த வேன் ஒன்றில் அடிபட்டு இறந்துவிட்டான் கண்மணி என்றாள் கதறிய கண்ணுடன் பிரமிளா அக்கா. "ரவி" என் சத்தமிட்டுக் கத்திய கண்மணி கண் சிமிட்டும் நேரத்திற்குள் மூர்ச்சையாகிப் போனாள்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**உலகில்** பிறந்தவர்களெல்லாம் தகைமையில் முழுமை பெற்றவர்கள் என்று சொல்லிவிட முடியாத போதிலும், ஓரளவுக்கேனும் சான்றாண்மை பற்றிக் குறிப்பிடக்கூடியதாகவுள்ளது. உதாரணமாகத் தனக்கு வரும் துன்பத்தையே பெரிதுபடுத்திப் பார்ப்பதையே மனிதன் முக்கியத்துவம் கொடுக்கிறானே அல்லாது தன்னால் பிறருக்கு ஏற்படும் துன்பத்தை ஒப்பிட்டுப் பார்க்கத் தயங்குகிறான். இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் தன்னை விடப் பிறர் உயருவதை அவன் என்றுமே விரும்பாததுதான் காரணம் என்று சொல்வது பொருத்தமெனக் கருதலாம். இந்நிலை மாறுவதற்கு எந்தவொரு பெரிய முயற்சியும் தேவையில்லை. எதிரியையும் தன் நிலையில் வைத்துப் பார்க்கும் பண்பு ஒன்றே போதுமானதன்றோ!

*"அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்*
*மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்"*

தமக்குக் கீழ்ப்பட்டு அடங்கி நடப்பவரைக் கண்டால் அவரினும் தாம் பெரிய ஆற்றலுடையவர் என்பதை பறைசாற்றுவதிலேயே கண்ணாக இருப்பது கீழோரின் இயல்பே!

# கனவில் கண்டது நனவாகும்

**நீர்த்துறையை** விட்டு வீடு திரும்பிய செண்பக வல்லிக்குப் பூங்கொடியின் பரிகாசங்களும், அவள் கூறிய உவமைகளும் மனதுக்கு மென்மேலும் ஓர் இன்ப கிளுகிளுப்பைத் தந்தது. ஆற்றில் நீராடச் செல்லுமுன் அவளிருந்த மன நிலை மாறி சற்றுத் தென்பு அடைந்தவள் போல் காணப்பட்டாளாயினும், அவள் கண்ட கனவில் அடைந்த மகிழ்ச்சியை அவளால் மறக்க முடியவில்லை. அதன் பின்பு நடந்த நிகழ்வுகள் எல்லாம் நீரில் எழுதிய எழுத்துப்போல் தடந் தெரியாமல் போகவே அந்த இன்பக் கனவு மட்டும் நெஞ்சை விட்டகலாது கரைபுரண்டு ஓடும் காட்டாற்று வெள்ளம்போல் அலைமோதிக் கொண்டிருந்தது. அந்த அலைகளிடையே அவள் மிதந்தாள். "பூங்கொடி ஆற்றங்கரைக்குப் போக வருவாளோ! என்ன இவள் இத்தனை நேரம் என்ன செய்து கொண்டிருக்கிறாள்?" என்று முணுமுணுத்தவாறு



தலைவாயிலுக்கும் மனைக்குமாக நடந்து கொண்டிருந்தாள்.

பூங்கொடியின் கால்களில் உள்ள கொலுசின்

## தருவது கற்பகன்

நாதம் காதில் பட்டதுதான் தாமதம், அவள் அண்டை ஓடிவந்த செண்பகவல்லி, "ஏய்! உன்னை எவ்வளவு நேரமாக எதிர்பார்த்துக் காத் துக் கொண்டு இருக்கிறேன் தெரியுமா?" என்றவள கையிலிருந்த ஆடைகளைத் தோளில் போட்ட வண்ணம் பூங்கொடியையும் அழைத்துக் கொண்டு ஆற்றங்கரையை நோக்கி நடந்தாள்.

ஆற்றங்கரையை அடைந்த செண்பகவல்லியின் செயற்பாடுகளையும் அவளில் தெரிகின்ற விரைவையும் பூங்கொடி கவனித்தாள். நேற்று அவளிருந்த உற்சாகத்தை விட இன்று மென்மேலும் வேகம் பெற்றிருப்பதைக் கண்ட பூங்கொடிக்கு ஆச்சரியமாக இருந்தது. இத்தனை காலமாக இவளோடு பழகியும் இவளைப் புரிந்துகொள்ளாமல் இருந்து விட்டேனா? என்ற கேள்வி மனதில் எழுந்தபோது, "பூங்கொடி என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்ற செண்பகவல்லியின் கேள்வி எழுந்தது. பூங்கொடியின் சிந்தனை கலைந்தது. திரும்பிப் பார்த்தாள். "நாளைக்கும் வேண்டும் என்று நேற்றுக் கூறியதை மறந்து விட்டாயா?" என்று செண்பகவல்லி கேட்டதும் பூங்கொடிக்கு முதல்நாள் மாலை ஆற்றங்கரையிலிருந்து வீடு வரும்வரை இருவரும் உரையாடியது ஞாபகத்துக்கு வந்தபோதிலும் ஏதும் நினைவில்லாதவள்போல் "அப்படி ஏதும் பேசியதாக நினைவில்லையே" என்றாள். பூங்கொடியை விசமத்தனமாகப் பார்த்தாள் செண்பகவல்லி. "என்ன இவள் கொஞ்சங்கூட ரசனை இல்லாதவளாக இருக்கிறாளோ" என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள்" "உனக்கு வரவர மறதி அதிகம். வயதாகி விட்டதா என்ன" என்று கேட்டாள் அதற்குள் ஆமாம் உனக்கு நினைவு மட்டுமல்ல, கனவில்கூட உன் மன்மதனோடு குலாவ வேண்டும் என்றால் நான் என்ன செய்ய முடியும் என்றாள் போலியான தொரு சலிப்போடு.

இதைக் கேட்டதும் செண்பகவல்லிக்கு வெட்கம் ஒரு புறமும் ஆசை மறுபுறமுமாக அவள் மனதில் ஓர் இன்பக் கிளர்சியை ஏற்படுத்த, "ஏய்! உனக்கு வரவர நாக்கு நீண்டுதான் போய் விட்டது" என்றவாறு பூங்கொடியின் காதைத் திருகினாள். "ஐயோ காதை விடடி கழுதை. உன் காதல் வேகத்தை என்னிடம் காட்டி என்ன பயன்? என்னால் என்ன ஆகப் போகிறது?" என்றவள் செண்பகவல்லியின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தாள்.

தொடர்ந்தாள் செண்பகவல்லி. அவள் பிடியில் அகப்படாமல் ஓடிச்சென்று நீரோடையில் குதித்தாள் பூங்கொடி. அவளைத் தொடர்ந்து செண்பகவல்லியும் குதித்தாள். சற்று நேரத்துக்கெல்லாம் நீரோடையே அமர்க்களப்பட்டு ஓய்ந்தது.

ஆற்றில் இருந்து கரையேறிய இருவரும் ஆடைகளை மாற்றிக் கொண்டு மனையை நோக்கிப் புறப்படத் தயாரானபோது, பூங்கொடியே ஆரம்பித்தாள். "அம்மா காதல் இளவரசி! உன் காதல் கனவின் அத்தியாயம் எதில் இருக்கிறது என்று கூறுவதற்காகத் தானே இத்தனை ஆர்ப்பாட்டங்களும்? கூறாவிட்டால் உன் தலையே வெடித்துவிடப் போகிறது" என்று செண்பகவல்லியைத் தூண்டினாள் பூங்கொடி. இதைக் கேட்டதும் செண்பகவல்லியின் முகத்தில் தோன்றிய மாற்றம் பூங்கொடியைப் பெரும் சங்கடத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டும். இன்னும் சில வினாடிகள் இப்படியே பேசாமல் இருந்தால் அழுதே விடுவாள் போலிருந்தது. ஏதோ இன்று முழுநாளாவது அவள் மகிழ்ச்சியாய் இருந்தால் போதும் என்று நினைத்திருந்த பூங்கொடிக்கு, இப்படியொரு இக்கட்டான நிலை வருமென்று எதிர்பார்க்காத நிலையில், விளையாட்டு வினையாகி விடுமோ என்று நினைத்தவள் அதிர்ந்து விட்டாள்.

பூங்கொடி தன்னைச் சுதாகரித்துக்கொண்டு செண்பகவல்லியின் அண்டையில் ஓடியவள், "என்னடி அதற்குள் கோபம் வந்து விட்டதா" என்றாள் செண்பகவல்லியின் கைகளைப் பற்றியவாறு. "உனக்கு விளையாட்டாகக்கூட உன் காதலைக் குறைகூற விடமாட்டாய் போலிருக்கிறதே! நான் விளையாட்டுக்காகச் சொல்வதையெல்லாம் நீ உண்மையென்று நினைத்துக் கொண்டு துன்பப்படுகிறாயே! உன் துன்பத்தில் நான் மகிழ்ச்சி அடைய முடியுமா?" என்றவளின் குரலில் தழுதழுப்பும் கெஞ்சலும் ஒருங்கே வெளிப்பட்டதைக் கண்ட செண்பகவல்லி, "நீயாவது என்னைப் புரிந்து கொண்டிருப்பாய் என்றால், நீ தப்பாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். வா போகலாம்" என்றாள். செண்பகவல்லியின் நூலிடையை தன் தளிர்க் கரத்தால் அணைத்த வண்ணம் நடக்கத் தொடங்கினாள் பூங்கொடி.

செண்பகவல்லியின் உடல் பூங்கொடியோடு இணைந்து நடந்ததே அல்லாமல் அவள் மனமோ தான் கண்ட கனவையே அசைமீட்டுக் கொண்டிருந்தது. இந்த நினைவலைகள் அவள் நெஞ்சில் எழுந்தபோது அவளின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களை பூங்கொடிஅவதானித்த போதிலும் அதைக் கண்டு கொள்ளாதவள்போல் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாள். நடக்கும் போதே செண்பகவல்லின் முகம் அடிக்கடி மலர்வதும் கூம்புவதுமாக நவரச பாவங்களைக் காட்டியதும் பூங்கொடிக்கு வியப்பைத் தந்தது. ஆனாலும் அதைக் கலைக்க விரும்பாதவளாய் நடையைத் தொடர்ந்தாள். இப்படியாக மனையை அண்டிக் கொண்டிருந்த வேளையில் அவளை அறியாமலேயே வாய்விட்டுச் சிரித்துவிட்டாள் செண்பகவல்லி. "என்னடி, என்ன நடந்து விட்டது உனக்கு" என்ற பூங்கொடியின் கேள்வி செண்பகவல்லியைத் திடுக்கிட வைத்தது. தன்னை சுதாகரித்துக் கொண்டபோதிலும் அவளை அறியாமலே வெட்கம் வந்து மூடிக்கொள்ள தன் இரு கைகளாலும் கண்களை மூடிக் கொண்டாள். ஆனாலும் அவள் கண்ட இன்பக் கனவில் தான் அடைந்த சுகத்தை தன் தோழியிடமாவது பகிர்ந்துகொள்ளலாம் என்ற உந்தல் அவளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பதை பூங்கொடி அறிந்தபோதும் இப்படி தன்னையே மறக்கும் அளவுக்கு காதல் வேகம் இருக்கிறதே என்று நினைத்தபோது வியப்பாகத்தான் இருந்தது.

மனையை அடைந்ததும், இருவரும் பிரிவதற்குத் தயங்கிய உண்மை நிலை, மீண்டும் ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்துக் கொண்டதிலிருந்து இருவரும் இரு பெரும் மனச்சுமைகளோடு பிரிகின்றனர் என்பதைப் பறைசாற்றி நின்றது. பூங்கொடியைப் பிரிந்து மனை வந்தடைந்த செண்பகவல்லியின் மனம் ஓர் நிலையில் தரிக்க மறுத்தது. அவள் கண்ட கனவு நனவாகும் நாளை எண்ணி ஏங்கியது. அந்த ஏக்கம் நெடுமூச்சாக மாறி வெளிப்பட்டபோது, அவள் அருகில் இருந்த றோஜாச் செடியில் உள்ள மலர் வாடியதை அவள் அறிவாளோ? யார் கண்டார்?

*"நனவினால் நல்காரை நோவர் கனவினாற்*
*காதலர்க் காணா தவர்"*
*(அதிகாரம் : 122 - குறள் :1219).*

## சிந்தியா பதில்கள்

**✍✉ கவிதை என்ற தலைப்பில் கட்டுரை எழுதுபவர்களுக்கு ஏதாவது அறிவுரை கூறுங்களேன்?**
-ஜி.கவிராதா, மானிப்பாய்.

அவர்களிடம் கட்டுரை எழுதும்படி சொன்னால் கவிதையின் வித்தியாசத்தைப் புரிந்து கொள்வார்கள்.

**✍✉ சிந்தியா, தேர்தல் வாக்குறுதிகளை எதனுடன் ஒப்பிடலாம்?**
-எம்.விஜயன், தவசிகுளம்.

வெங்காயத்துடன்.

**✍✉ சிந்தியா, என் சொந்தப் படத்தில் வில்லனாக நீர் நடிப்பீரா?**
-ப.தேவகி, சிலாபம்.

தேவகி! முன் கூட்டியே கதாநாயகனைப் பிடித்துவிட்டதை இப்படியா வெளிக்காட்டுவீர்கள்!

**✍✉ மனிதனுக்கும் பறக்கும் சக்தியிருந்தால் எப்படியிருக்கும்?**
-சி.சுபாஷினி, வவுனியா.

நம் முன்னோர் குரங்கார் என்பது சந்தேகத்துக்கிடமாகி, பறக்கும் டைனோசர்கள் தான் நம் முன்னோர்கள் என்ற சந்தேகம் வலுக்கத் தொடங்கிவிடும்.

**✍✉ சிந்தியா, பேய்க்கு கால்கள் கிடையாது என்று கூறுகிறார்களே, உண்மையா?**
-ரி.கிருபா, வங்காலை.

நான் பார்க்கும் பேய்களுக்கெல்லாம் கால்கள் இருக்கிறதே! உங்களுக்கு ஒரு குட்டிக்கதை.

**ஒருவன்:-** மனிதன் இல்லாத ஒரு தேசத்தில் பயம் பற்றிய நினைவே வருவதில்லையாம்.

**மற்றவன்:-** இரவில் சத்தங்களைக் கேட்டால் இயல்பாகவே பய உணர்ச்சி வந்துவிடுகிறது. கூடவே பேய் பற்றிய பயமும் சேர்ந்து கொள்கிறது.

**✍✉ இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்டக்காரர் ஜெயசூரியாவை கட்டாயப்படுத்தித்தான் அணியிலிருந்து விலக்கியிருப்பதாகச் செய்திகள் கசிகின்றன. உண்மையா?**
-எம்.எச்.சாகுல் ஹமீத், குருநாகல்.

இந்தக் கேள்விக்கு ஜெயசூரியாவே தயங்கிக் கொண்டுதான் பதில் சொல்கிறார் என்றால் உண்மை போல் தான் தெரிகிறது.

**✍✉ அண்மையில் உற்சவம் நடைபெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயம் சுனாமியின் பின் யாரால் புனரமைக்கப்பட்டது?**
-என்.தேவதாசன், கோட்டைமுனை.

இலங்கையின் வடபகுதி தீவுகளில் காரைநகரைத் தவிர எந்த ஒரு தீவும் - கச்சதீவு உட்பட - சுனாமியால் பாதிக்கப்படவில்லை.

**✍✉ நடிக்கத் தெரிந்த அரசியல்வாதி, அரசியல் தெரிந்த நடிகன் - யாரிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?**
-வே.சுமன், கிருலப்பனை.

அரசியல் தெரியாத நடிகர்கள் பலர் உண்டு. ஆனால் நடிக்கத் தெரியாத அரசியல்வாதி..... எனவே அவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

**✍✉ உறைப்பு உண்மையில் ஒரு சுவை அல்ல எனப் புத்தகத்தில் படித்தேன். உண்மையா?**
-ஹிமாயா ஹமீட், கொழும்பு - 15.

உண்மைதான். ஆறு சுவைகளில் ஒன்றாக உறைப்பை நாம் கருதினாலும் நாக்கின் சுவை அரும்புகள் அதனை ஓர் சுவையாக உணர்வதில்லை. சுவை அரும்பு மொட்டுக்கள் படும் எரிச்சலை மூளை உறைப்பாக உணர்கின்றது - அவ்வளவுதான்.

**✍✉ சஞ்சிகைகளில் பெண்களின் மார்புக்கச்சை விளம்பரங்களை இப்படி பட்டவர்த்தனமாகப் பிரசுரிக்கின்றார்களே... ஆபாசமாக இல்லையா?**
-த.ரதன், பேராதனை.

நீங்கள் வேறு. 2ஆம் உலகப் போரின் போது ஆண்கள் எல்லோரும் போருக்குப் போய்விட, வீட்டை விட்டு வெளியே வரவேண்டிய நிர்ப்பந்தம் பெண்களுக்கு. திடீர் சுதந்திரம் பெற்ற பெண்கள், பெண்ணடிமையின் சின்னமாகக் கருதி மார்புக்கச்சைகளை வீதியில் போட்டு எரித்தார்களாம். இப்போதோ நிலைமை வேறு. தற்காலப் பெண்களின் தவிர்க்க முடியாத தேவைகளில் ஒன்றாக அது மாறிவிட்டது மட்டுமல்ல, பல கோடி ரூபா புரளும் மார்புக்கச்சை உற்பத்தி நிறுவனங்களுக்கும் விளம்பரம் அவசியமாகப் போய்விட்டது.

**✍✉ யாழ்ப்பாணத்தில் திடீர் ஊரடங்குக்கு என்ன காரணம்?**
-எஸ்.செல்வகுமார், மொறட்டுவ வளாகம்.

நீங்கள் ஈ-மெயில் மூலம் கேட்ட அவசரத்தைவிட, அவசரமாகப் படையினர் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்தது பாதுகாப்புக் காரணங்களுக்காகவாம்.



பார்த்திபன் – நமீதா
பச்சக்குதிர

இயல்பு நிலை முடக்கத்திற்கும் ஊரடங்குச் சட்டத்திற்கும் என்ன வித்தியாசத்தை உணர்கின்றீர்கள்?

**✍✉ சீ - பிளேனை கிழக்கில எங்க இறக்கிற ஐடியாவாம்?**
-எம்.மைக்கல், தோணிக்கல்.

இது தெரியாதா? தண்ணியிலதான்!

**✍✉ வயது, பால் வேறுபாடின்றி எல்லோருடைய கைகளிலும் செல்போன் புழங்கும் எண்டு ஒரு 10 வருடங்களுக்கு முன்னர் நினைத்துப் பார்த்தீர்களா?**
-வசீம் இக்பால், பேருவளை.

ஓரளவு. இப்போது சொல்கின்றேன் - அடுத்த 10 வருடத்தில் தற்போது செல்போன் போல லப்டொப் புழங்கும்.

**✍✉ சர்க்கரை வியாதிக்காரர்களும் உபயோகிக்கக்கூடிய சீனி பாவனைக்கு வந்துவிட்டது. சந்தோஷம் தானே?**
-ஏ.வினிதா, வெள்ளவத்தை.

சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு இனிப்பான செய்திதான் ஆனால் விலைதான் இடிக்கின்றது.

**✍✉ மங்கள சமரவீரவின் இந்தியப் பயண நோக்கம் என்னவாக இருக்கும்?**
-இ.அருமைநாயகம், நாரஹேன்பிட்டி.


வேண்டுகோள் என்னவென்று தெரியவில்லை. ஆனால் இந்திய வெளியுறவுக் கொள்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது.

**✍✉ 'பச்ச குதிர' பார்த்து விட்டீர்களா?**
-எம்.எச்.ஹம்ஸின், வந்தாறுமூலை.

இன்னும் இல்லை. நமீதா ரசிகர்கள் பார்த்து முடித்தபின்தானே பார்த்தீபன் ரசிகர்கள் பார்க்கலாம்.

# நடுவர் தீர்ப்பிற்கு எதிராக முறையீடு; ஐ.சி.சி. ஆலோசனை

**கிரிக்கெட்** போட்டிகளில் நடுவர் அளிக்கும் தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்யும் வாய்ப்பை வழங் கலாமா என்பது குறித்து சர்வதேச கிரிக்கெட் பேரவை ஆலோசனை நடத்தவுள்ளது.



கிரிக்கெட் போட்டிகளில் நடுவர் சில நேரங்களில் அளிக்கும் தவறான தீர்ப்பால் ஆட்டத்தின் போக்கே மாறிவிடுகின்றது என்கின்ற மனக்குறை ஆடும் வீரகளுக்கும், பார்க்கும் ரசிகர்களுக்கும் ஏற்படுகிறது.

ஒரு நாள் போட்டிகளில் எவ்வாறு ரன் அவுட் மற்றும் நெருக்கமான கேட்ச் போன்றவை 3ஆவது நடுவரின் தீர்ப்பிற்கு விடப்பட்டு முடிவு அறிவிக்கப்படுகிறதோ, அதே போல் ஆட்ட நடுவர்கள் அளிக்கும் தீர்ப்பின் மீது அதிருப்தி ஏற்படாமல் அதனை எதிர்த்து 3ஆவது நடுவருக்கு முறையீடு செய்யும் வாய்ப்பை வழங்கலாமா என்று விவாதிக்குமாறு ஐ.சி.சி. கிரிக்கெட் குழுவை ஐ.சி.சி. கேட்டுக் கொண்டுள்ளது.

துபாயில் சனில் கவாஸ்கர் தலைமையிலான ஐ.சி.சி. கிரிக்கெட் குழு இது குறித்து விவாதிக்கிறது. இப்படிப்பட்ட நடுவரின் முடிவிற்கு எதிரான முறையீடு அமெரிக்க கால்பந்தாட்டத்தில் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. டென்னிஸ் போட்டிகளிலும் இது பரிசோதனை அடிப்படையில் கடைபிடிக்கப்பட்டு உகந்த முடிவை அளித்துள்ளது.

எனவே, ஏன் கிரிக்கெட் போட்டிகளிலும் இதனை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று ஐ.சி.சி. கிரிக்கெட் குழு ஆலோசிக்கவுள்ளது. இந்த ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டதால் இந்தியாவின் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் சோதனை அடிப்படையில் அறிமுகம் செய்யப்படும்.

இதுமட்டுமன்றி, இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள கூட்டத்தில் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி, கிரிக்கெட் மட்டையின் தன்மை ஆகியன குறித்தும் விவாதிக்கப்பட வுள்ளது. ஏற்கனவே ஒரு நாள் போட்டிகளில் கடைபிடிக்கப் பட்டு வரும் பவர் பிளே மற்றும் சுப்பர் சப் விதிமுறைகளுக்கு இக்கூட்டத்தில் முடிவு கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கவாஸ்கர் தலைமையிலான இக்குழுவில் அர்ஜுனா ரணத்துங்கவும் இணைந்துள்ளது விசேட அம்சமாகும்.

## இரவு போவோம்.......

6ஆம் பக்கத் தொடர்ச்சி....

கொழும்பில் இருக்கும்போது இரவும் பகலும் மாறுகின்ற போதும் வாகனங்களின் பரபரப்பும், தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் இயந்திரங்களின் சத்தமும் ஒரு அமைதியான இரவை ரசிக்க விடாமல் எப்போதும் இடையூறாகவே இருந்துவருகின்றன. வெளிச்சம் விழிக்க வைப்பதுபோல், இருட்டு தூக்கத்தையே ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும். சில வேளை வெளிச்சம் இருக்கும்போது தூங்கிப் போயிருக்கிறேன். என்றாலும் என் பிடிவாதமான இரவுகளில் பின்னிரவு இரண்டு மணி, மூன்று மணிக்கு எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு அமைதியாக இருந்து இரவின் நகர்வை ரசிக்க நினைப்பேன். முடிவதில்லை. குறிப்பிட்ட நேரத்துக்கு விழித்துக் கொண்டாலும் ஏதோவொன்று என்னைத் தடுத்து படுக்கையில் கிடந்து கொண்டே காதுகளைக் கூர்மைப்படுத்து என்று அழுத்தும். ஒருவேளை அது என் அலுப்புக் குணமாகவும் இருக்கும். அந்தப் பொழுதில்கூட என் கூர்மையை ஊடறுத்து ஒரு வாகனம் சர்ர்ர்.... என்று வேகமாகப் போகும். இல்லையாயின் ஒருபுகையிரதம் தூக்கத்தில் இருப்பவர்களை பழித்துக் கொண்டு ஊ........ என்ற பெரும் சத்தத்தோடு போகும். ஆனால் இங்கே கிராமத்தில் ஒரு இரவு எத்தனை அமைதியானது என்பது அதை அனுபவிக்கின்றபோதுதான் புரிகிறது. தூரத்தில் ஒரு நாய் ஊளையிடுகிறது. என் சிறுவயதில் கேட்ட ஒரு கதை ஞாபகம் வருகிறது. நாய்களுக்குப் பேய்களின் உருவம் தெரியுமாம். அதனால்தான் பேய்களின் நடமாட்டத்தைக் கண்டு அவைகள் ஊளையிடுகின்றனவென்றும், நாய்கள் அப்படி ஊளையிட்டால் அந்தப் பகுதியில் யாரோ இறந்துவிடப்போகிறார்கள் என்றும் சொல்வார்கள். அதற்காக வீட்டுக்கு அருகில் நாய் ஊளையிட்டால் கண்டிப்பாக ஒருவர் வெளியால் சென்று கையில் கிடைத்ததைக் கொண்டு நாயை விரட்டிவிடுவர். அப்படியென்றால் நாய் ஊளையிடும் தொலைவில் ஒரு பேய் நடமாடுகிறது என்று நினைத்துக் கொண்டேன். நண்பனை எழுப்பிக்கொண்டு போய் அந்த நாயை விரட்டி விட்டு வந்தால் அந்த ஊரில் ஒரு இறப்பைத் தவிர்க்கலாமே என்று நினைத்துக் கொண்டு நண்பனைத் தட்டி எழுப்பினேன். அவன் வர மறுத்துவிட்டான். எனக்கு வீட்டை விட்டு வெளியில் வந்து அந்த ஊரைப் பார்க்கவேண்டும் என்று ஆர்வம் மேலிட்டது. அப்போது அந்த இரவின் அமைதியை ஒரு சுதியோடு நகர்த்திக் கேட்டது கிரிச்....கிரிச்... என்று எனக்குப் பழக்கப்பட்டதைப்போல ஒருசத்தம். என்னவாக இருக்கும் என்று பக்கத்துக் கட்டிலில் கிடக்கும் நண்பனின் அப்பாவிடம் கேட்டேன். அவர் திரும்பாமலே சொன்னார்: "அது செல்வராசா வேலை முடிஞ்சு போறான்" அவன் ஊருக்குள் போகிறான் என்பதை அவனது சைக்கிள் சத்தத்தை வைத்தே ஊர் மக்கள் தெரிந்து கொள்வார்கள்" என்றார். செல்வராசாவின் புகழை அவரின் எண்ணெயில்லாத சைக்கிள் சங்கிலி ஊருக்குள் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. அதற்குமேல் என்னால் வீட்டுக்குள் இருக்க முடியவில்லை. சத்தமில்லாமல் எழுந்து கதவைத் திறந்தபோது அந்தக் கதவு ஒரு கிரீச் சத்தத்தோடு திறந்தது. மனதுக்குள் சிரித்துக் கொண்டேன்.

நல்ல -வேளை இன்னொருவர் வெளியில் இல்லை இருந்திருந்தால் அவர் சொல்வார் அந்தச் சத்தம் பத்மநாதனின் விட்டுக்கதவு திறக்கும் சத்தம் என்று அவர் சொல்லக்கூடும். இப்படி ஒவ்வொரு சத்தத்தைக் கொண்டும் கிராமத்தவர்கள் அயலவர்களை அடையாளம் கண்டு கொள்கிறார்கள்.

வெளியில் வந்து சுற்றிப் பார்த்தபோது, ஊரின் மூலையில் ஒரே ஒரு தெருவிளக்கு. அதன் வெளிச்சம் கூட அந்தக் கம்பத்தைச் சுற்றி நிலத்தில் ஒரு வட்டமாகத் தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் இரண்டு மூன்று நாய்கள் படுத்துக்கிடப்பது போல் தெரிகிறது. ஊருக்குள் ஓரிரண்டு வீடுகளில் ஒற்றைக் கண்ணைக் காட்டிக் கொண்டிருக்கின்ற மின்விளக்குகள். மின்சார வசதி இல்லாத வீடுகள் இருட்டுக்குள் புதைந்து சின்னத் திட்டுக்கள்போல இருந்தன. இரவில் பார்க்கின்ற போது எல்லா ஊர்களும் ஒரே மாதிரியாகத்தான் தெரிகின்றன. வெளிச்சங்களைத் தவிர்த்துப் பார்த்தால் கொழும்பும் குக்கிராமமும் ஒன்றுதான் என்று நினைத்துக் கொண்டேன். எதிர்த்துக்கேட்பார் இல்லாமல் இரவு, பூமியைப் போர்த்திக் கொண்டிருப்பதுபோல் இருந்தது.

அண்ணாந்து வானத்தைப் பார்க்கிறேன். கறுப்பாகத்தான் தெரிகிறது வானம். நிலவு பூமியின் தூக்கத்துக்கு காவல் இருப்பதுபோல் விழித்துக் கிடக்கிறது. நட்சத்திரங்கள் கண்சிமிட்டியபடி நிலவுக்குத் துணையாகப் பூத்துக்கிடக்கின்றன. நீலவானம் என்றும் குளிரும் நிலவு என்றும் விண் மீன்கள் என்றும் சொல்வார்களே என்று ஒவ்வொன்றாக ஞாபக மூட்டும் போது அண்டவெளிபற்றிய நான் அறிந்த விஷயங்கள் ஒவ்வொன்றையும் மறுதலித்துக் கொண்டே இருக்கின்றன.

நிலவின் வெப்பம் நிலவின் மறுபக்கம் இருண்ட - ஆனால் பனிப்பாறைகளாலான பகுதியாக இருக்கும். பூமியை விட ஆறுமடங்கு குறைவான ஈர்ப்புச் சக்தி அதாவது பூமியில் ஒரு நிமிடத்தில் விழக்கூடிய ஒரு பொருள், நிலவில் விழுவதற்கு ஆறு நிமிடங்கள் எடுக்கும். அதேபோல் பூமியிலிருந்து பார்க்கும்போது தெரியும் ஒவ்வொரு நட்சத்திரமும் இன்னொரு சூரியன் அதாவது கூர்ந்து பார்த்தீர்களானால் மின்னுகின்ற நட்சத்திரங்கள் பால் வெளியில் சூரியன்கள் மின்னாத நட்சத்திரங்கள் கோள்கள், சிலவேளை நகரும் நட்சத்திரங்கள் அது விண் ஓடங்கள் என்று வானம் அறிவுக்கு அப்பாற்பட்ட அதிசயங்களை நிகழ்த்தியபடி இரவுமில்லாமல் பகலுமில்லாமல் பரந்து கிடக்கிறது. பகலில் வானம் நீலமாகத் தெரிகிறது, இரவில் கறுப்பாகத் தெரிகிறது. காரணம் பகலில் ஓசோன் படலத்தினூடாக சூரிய ஒளி ஊடறுக்கின்றபோது நீல நிறம் நமக்குத் தெரிகிறது. இரவில் ஓசோனின் வடிகட்டல் தடையாக இல்லாததால் வானம் கறுப்பாகத் தெரிகிறது. நாம் வாழும் பூமி உள்ளிட்ட சூரியக் குடும்பம்போல், பல சூரியக் குடும்பங்கள் சேர்ந்ததுதான் பால்வெளிகள். அதேபோல் பல பால் வெளிகள் சேர்ந்ததுதான் அண்ட சராசரம் என்று சொல்லப்படுகின்றது. அப்படிப் பார்க்கின்ற போது அண்ணாந்து பார்க்கும் என் கண்களுக்குத் தெரியும் ஆகாயத்தின் அளவு அண்ட சராசரத்தில் ஒரு மண் அளவாகக்கூட இருக்கும். நம் சூரியக் குடும்பம் போல் நமக்கு அருகில் இருக்கும் தோழமை சூரியக் குடும்பத்துக்கு அன்ரிமாபுரக் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இப்போது அங்கிருந்து கொண்டு என்னைப்போல் ஒரு இரவு ரசிகன், இந்த வானத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கலாம் எனக்கும் அவனுக்கும் இடையில் எந்த அலைவரிசைகளைக் கொண்டும் தொடர்பு கொள்ள முடியாது. அப்படி முடிந்தால் அவனது பூமிக்கு எத்தனை நிலவு? எத்தனை சூரியன்? என்று கேட்டிருக்கலாம். அந்த சூரியக் குடும்பம் அருகில் என்று சொன்னேனே எவ்வளவு அருகில் தெரியுமா? வெறும் நூறு ஒளியாண்டுகள்தான். ஒரு ஒளியாண்டு தூரத்தைச் சுருக்கமாக விபரிப்பதானால் ஒரு நிமிடத்தில் ஒளியாண்டில் கடக்கும் தூரம் 142000 மைல்களாகும். ஒரு நிமிடத்தில் இந்த மைல்கள் என்றால் ஒரு மணித்தியாலத்தில் எத்தனை மைல்கள். ஒரு நாளில், ஒரு மாதத்தில்.... என்று பார்த்துக் கொண்டு வந்து ஒரு வருடத்தில் எத்தனை மைல்கள் என்று நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். எனக்கு மூச்சுவாங்குகிறது. முதல் கணக்கு இறுதிவரை தொடராமல் இடையில் முறிந்து விடுகிறது. இப்படி ஒரு வருடத்தில் கடக்க வேண்டிய தூரம்தான் ஒரு ஒளி ஆண்டுதூரம். இப்படி நான்கு ஒளி ஆண்டுகள் தூரத்திலே நமது சூரியக் குடும்பம் இருக்கிறது. பால் வெளிபற்றி சிந்திப்பதைத் தடுத்து விட்டது கழுத்து வலி.

ஒன்றுமே இல்லாத இரவு எத்தனை மர்மங்களைத் தனக்குள்ளே புதைத்துக் கொண்டிருக்கின்றது சிந்திப்போம் தெளிவோம்.

## முதலிடத்தில் ஷீமாக்கர்!



கார் பந்தயங்களில் மிகவும் பிரபலமானது 'பார்முலா - 1' கார் பந்தயம். இந்த ஆண்டுக் கான பந்தயத்தில் அவுஸ் திரேலியாவைச் சேர்ந்த பக்ரைன், சன்மரினோ உட்பட உலகின் பல்வேறு பகுதிகளில் 18 சுற்றுக் களாக நடக்கிறது. இறுதி சுற்றில் முதல் இடத்தில் ஷீமாக்கர்.

இதில் கடந்த முறை சாம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பெர்னாண்டோ அலோன்சா, 7 முறை சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிய மைக்கேல் ஷீமாக்கர் உட்பட முன்னணி வீரர்கள் 22 பேர் கலந்து கொள்கிறார்கள்.

'பார்முலா - 1' கார் பந்தயத்தில் இதுவரை 5 சுற்றுக்கள் முடிவடைந்துள்ளது. இதன் முடிவில் அலோன்சா 44 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், ஷீமாக்கர் 31 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளனர்.

கெமிரெய்ன்கோன் (பின்லாந்து), பிசிசெல்லா(இத்தாலி), மோன்டேயோ (கொலம்பியா) ஆகியோர் தலா முறையே 3 முதல் 6ஆவது இடத்தில் உள்ளனர். இநிநிலையில் 'பார்முலா - 1' கார் பந்தயத்தின் 65ஆவது சுற்று போட்டி இன்று ஐரோப்பாவில் நடந்தது.

முன்னதாக இன்ற பயிற்சி பந்தயமும் தகுதி சுற்றும் நடக்கிறது. இதில் 22 வீரர்கள் பங்கேற்கின்றனர். கடந்த ஆண்டு ஜொலிக்காத ஷீமாக்கர் இந்த முறை சிறப்பாக செயல்பட்டு வருகிறார். இன்றைய பந்தயத்தில் அவருக்கும் அலோன்சாவிற்கும் இடையே கடும் போட்டி நிலவியது. இறுதியில் முதல் இடத்தை ஷீமாக்கர் பெற்றுக் கொண்டார்.

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்


## தோமஸ் கிண்ண போட்டிகளில் சீன அணி சம்பியன்

ஜப்பானில் நடைபெற்ற தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியில் சீனா அணிப்பிரிவு இறுதிப் போட்டியில் 3/0 என்ற கணக்கில் டென்மார்க்கை வென்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

சீன அணி இறுதிப் போட்டியில் தொடர்ந்து இரண்டா வது முறையாக பட்டம் வென்றுள்ளது. தவிர, 6ஆவது முறையாக ஒட்டு மொத்தத்தில் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளது டென்மார்க் அணி 8ஆவது முறையாக இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்துள்ளது.

தோமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டிகள் ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் நடைபெற்று வந்தது. இதில் பட்டத்தைக் கைப்பற்ற சீனா, டென்மார்க், இந்தோ னேசியா, ஹாங்காங், கொரியா, இந்தியா, மலேசியா, உட்பட பல நாடுகள் போட்டியிட்டன.

முன்னதாக நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் சீனா மற்றும் டென்மார்க் ஆகிய அணிகள் இறுதிப்



போட்டிக்கு தகுதி பெற்றன. இதன் இறுதிப் போட்டி நேற்று ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் நடை பெற்றது.

இதன் முதல் ஒற்றையர் போட்டியில் சீன வீரரும் உலக முதலாமிட வீரருமான லின் டானும், டென்மார்க் வீரர் பீட்டர் கேடேயும் மோதினர். இதில் சீன வீரர் டான் அபாரமாக ஆடி டென்மார்க் வீரரை வீழ்த்தி அணிக்கு 1/0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுத் தந்தார்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 5, கூட்டெண் - 1

5, 14, 23 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருமேயானால் இவர்கள் புதன், சூரியன் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள்.எப்பொழுதும் சுறுசுறுப்பாகக் காட்சியளிக்கும் இவர்கள், தான் செய்கின்ற வேலையை விரைவில் முடிக்க வேண்டுமென்று ஓடோடி உழைப்பர். புதிது புதிதாகத் திட்டத்தை வகுத்துக் கொண்டு அதை இயக்க முற்படுவர்.

இவர்களது யோசனையும், புத்தியும் மின்னல் போன்ற வேகமுடையது. தான் செய்கின்ற காரியம் தாமதம் ஆனால் அதற்குக் காரணம், உடன் இருப்பவர் என்று கூறுவர். இவர்களுக்குப் பெயர், பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமையுமேயானால் உத்தியோகம், தொழில், வீடு, வாகனம், நிலம் போன்ற அமைப்புகளைப் பெற்றுச் சிறப்பாக வாழ்வர். இந்த எண்ணிக்கையில் பிறக்கும் சிலர் உத்தியோ கஸ்தர்களாகவும், பலர் தொழில் செய்பவர்களாகவும் இருக்கின் றனர். இவர்களில் பலர் பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும் கவர்ச்சியான தோற்றத்துடனும் காட்சியளிப்பர். தான் எண்ணுகின்ற காரியங்களைச் செயல்படுத்துவதற்கு முன் பிறரிடம் சொல்ல மனம் கூசுவர். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வெற்றி அளிக் கும் என்ற கொள்கை உடையவர். ஒரு காரியத்தில் இறங்கி விட்டால் அதை முடிக்கும் வரை தூங்குவதைக்கூட குறைத்துக் கொள்வர்.

தான் செய்கின்ற பயணத்தைப் பிறரிடம் கூறமாட்டார். இவர்கள் நினைத்ததை முடிக்க வேண்டும் என்று இயங்குவதால், மனம் ஒரு நிலையாகவே முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் மட்டும் அதிகம் சம்பாதித்துத் தீய வழியில் செலவு செய்வர். சிலர் பணம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இருந்தும் அதை இழந்து வருந்துவர். ஆனால் பெயர் நன்றாக அமையுமேயானால் தொழில், உத்தி யோகம், நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் பெற்று நலமாக வாழ்வர். இந்த ஆதிக்கத்தில் பிறந்த சிலர் உத்தியோகம் பார்த்தாலும் அவர்கள் மனம் சதா தொழில் மூலம் அதிகப் பணம் ஈட்ட வேண்டுமென்று திட்டம் தீட்டிக் கொண்டே இருக்கும்.

நிலையில்லாத காதல் மனம் கொண்ட இவர்கள் ஆண்ட வனை வழிபடுவது சிறிது வேடிக்கையாக இருக்கும். தான் தொடுத்த காரியங்கள் முடியாவிட்டால் கடவுளை வெறுப்பர். முன்னோர்கள் சொத்துக்கள் மூலம் முன்னேறாது தன் சொந்த முயற்சியால் வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைவர். தர்ம சிந்தனை கொண்ட இவர்கள் தர்மம் செய்வதிலும் மனத் திருப்தி அடைவர். ஏழ்மையைப் போக்குவதிலும், ஏழைக் குழந்தைகளுக்கு உதவுவதிலும் ஆர்வம் உள்ளவர்கள். இயற்கைக் காட்சிகளை ரசிப்பதிலும், நீர்வீழ்ச்சிகளைக் கண்டுகளிப்பதிலும் மிகுந்த மன அமைதியைப் பெறுவர். கலையை ரசிப்பதில் ஆர்வம் கொண்ட இவர்கள் நிரந்தரமான ரசிகர் அல்ல. நேர்மை, நீதி போன்றவற்றைப் பின்பற்றும் இவர்களுக்குப் பெயர் நன்றாக அமையாவிட்டால் தீய வழியில் மனம் இழுத்துச் செல்லும். இதனால் பெயர் நன்றாக அமைய வேண்டியது மிக முக்கியம். பெயர் நன்றாக அமைந்தவர்கள் எல்லா வளமும் பெற்று வாழ்க்கையில் மிகச் சிறப்பாக இருப்பர்.

***தொழில்:***

இவர்களுக்கு கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்ஸி, நெருப்பு, இரும்பு சம்பந்தமான தொழில் அனைத்தும் சிறந்த லாபத்தைத் தரும்.

***நோய்:***

உஷ்ணம் சம்பந்தமான அனைத்து நோய்களும் வந்து நீங்கும். இரத்தக் கொதிப்பு, சர்க்கரை, நரம்புத் தளர்ச்சி போன்றவைகள் வர வாய்ப்பு இருப்பதால் முன்கூட்டியே தவிர்க்க முயல்வதோடு கோபத்தைக் குறைத்துக் கொள்வது நலம்.

***பெயர் அமைக்கும் முறை:***

இவர்களுக்கு சூரியன், புதன் ஆதிக்கம் இருப்பதால் மேற்குறிப்பிட்ட ஆதிக்க எண்ணாகிய 14, 23, 32, 41, 50, 59, 77; 19, 37, 46, 64 போன்றவைகளில் பெயரை அமைத்துக் கொண்டால் சிறப்பாக வாழலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

யோகமான எண் - 5, 1.

யோகமான திகதிகள் - 5, 14, 23; 1, 10, 19, 28; 6, 15, 24.

யோகமான மோதிரக்கல் - வைரம், ஜிர்கான், கனக புஷ்பராகம்.

யோகமான நிறம் - சாம்பல் நிறம், மஞ்சள், வெளிர் நீலம்.

ஆகாத நிறம் - கறுப்பு.

ஆகாத திகதிகள் - இல்லை.

அடுத்த வாரம் பிறப்பெண் 5, கூட்டெண் 2 பற்றிப் பார்ப்போம்.

# வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற எட்வர்ட் - டி - வேர் (கி.பி. 1550 - 1604 நூற்றாண்டு)

சென்றவாரத் தொடர்ச்சி

**இந்தச்** சிக்கலுடன் தொடர்புடைய இன்னொரு உண்மையும் உண்டு. அதாவது, இந்த நாடக மேதை லண்டனில் வாழ்ந்த காலத்தில் யாருக்கும் தெரியாமல் வாழ்ந்தார். சேக்ஸ்பியர் லண்டனில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் வாழ்ந்தார் (1592 - 1612) வசித்தார் எனக் கருதப்படுகிறது. ஆனால், இந்த 20 ஆண்டு காலத்தில், பெரிய நடிகரும், நாடகாசிரியருமான இவரை எவரும் நேரில் பார்த்ததற்கான சான்று ஒன்றுகூட இல்லை. புகழ்பெற்ற நடிகர் ரிச்சர்ட் பர்பாஜையோ (Richard Burbage), நாடகாசிரியர் பென் ஜான்சனையோ (Ben Jphnson), பார்த்தவர் அல்லது சந்தித்தவர்கள், அதனை ஒரு பெருமைக்குரிய நிகழ்ச்சியாகக் குறித்து வைத்துள்ளனர். ஆனால் சேக்ஸ்பியர் லண்டனில் புகழ்பெற்று விளங்கிய 20 ஆண்டுகளில் எவரேனும் அவரை மேடையில் பார்த்திருந்தால், அல்லது அவரோடு கடிதத் தொடர்பு கொண்டிருந்தால், அல்லது அவருடன் கவிதை பற்றி விவாதித்திருந்தால், அல்லது அவரை ஒரு விருந்திலோ, வீதியிலோ சந்தித்திருந்தால், அதனை அவர்கள் பெருமைக்குரிய



நிகழ்ச்சியாகக் குறிப்பிடாமல் இருந்திருக்க மாட்டார்கள்.

மேற்சொன்ன உண்மைகளுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணம் இதுதான் : "வில்லியம் சேக்ஸ்பியர்" என்பது, இந்த எழுத்தாளர் சூடிக் கொண்ட புனைபெயரேயாகும். தன்னுடைய அடையாளத்தை இரகசியமாக வைத்துக்கொள்வதற்கு அவர் இந்தப் புனைப் பெயரை வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொண்டார். எனவே, இந்த எழுத்தாளரைச் சந்தித்தவர்கள், தாங்கள் தலைசிறந்த நாடகாசிரியர் வில்லியம் சேக்ஸ்பியரை சந்திக்கிறோம் என்பதை அறிந்திருக்கவில்லை. (புகழ்பெற்ற ஓர் எழுத்தாளர், அதிக நாட்கள் ஒரு புனை பெயருக்குள் வெற்றிகரமாக ஒளிந்திருக்க முடிந்திருக்காது).

இந்த அதிகாரபூர்வமான வரலாற்றை ஏற்றுக் கொள்வதில் இன்னும் அதிமான இடர்பாட்டை உண்டாக்குவது, ஸ்டிராட்ஃபோர்டிலிருந்த அவருடைய நண்பர்களின் அல்லது அண்ட அயலாரில் ஒருவர்கூட, ஏன் அவரது குடும்பத்தினர் கூட, இவரை ஒரு நடிகராக, ஒரு நாடகாசிரியராக, ஒரு கவிஞராக அல்லது ஏதோவொரு இலக்கியவாதியாகவேனும் ஒருபோதும் குறிப்பிட்டதில்லை.

சேகக்ஸ்பியர் தம் கைப்பட எழுதிய நாடகங்களின் எழுத்துப்படிகள் பற்றி என்ன கூறுவது? அவர்தான் எழுத்தாளர் என்று மெய்ப்பிப்பதற்கு இவை தக்க சான்றுகள்தாம்.

## உலகை வியக்க வைத்தவர்கள்

சேக்ஸ்பியர் பற்றி ஸ்டிராட்ஃபோர்ட் - ஆன் - ஆவோனில் நிலவிய மனப்பான்மை யாகும். இங்கிலாந்தில் தலைசிறந்த நாடகாசிரியரி யராகவும், மிகச் சிறந்த நடிகராகவும் சேக்ஸ்பியர் கருதப்பட்டு வந்தபோதிலும், அவரது சொந்த நகரில் எவரும், அவரை வியப்புக்குரியவராக எவரும் மதிக்கவில்லை! அவர் ஸ்டிராட் ஃ போர்டிலிருந்து ஏழையாகச் சென்று ஒரு பெரும் பணக்காரராகத் திரும்பி வந்த போதுங்கூட அவரை யாரும் கண்டு கொள்ளாதிருந்தது வியப்பளிக்கிறது. இந்த பெரும் மாற்றம், இயல்பாக உற்றார் உளவினரிடம் பெரும் ஆர்வத்தை தூண்டியிருக்க வேண்டும். எனினும், அவருடைய வாழ்நாளில், ஆனால், தீவினைப் பயனாக, அவர் தம் கைப்பட எழுதிய நாடகங்களின் எழுத்துபடிகள் எதுவும் கிடைக்கவில்லை. முன் வரைவுகள், வரைவுத் துணுக்குகள், வெளியிடப்படாத அல்லது முடிவு பெறாத படைப்புகள் கூட கிடைக்கவில்லைஉண்மையில் சட்ட ஆவணங்களில் காணப்படும் கையொப்பங்களைத் தவிரித்து, அவர் கைபட எழுதி வேறு எதுவும் கிடைக்கவில்லை. ஆறு குறிப்புகள், குறிப்பேடுகள், விண்ணப்பங்கள், நாட்குறிப்புகள் எதுவுமே இல்லை. அவர் எழுதிய நேர்முகக் கடிதம் ஒன்றுகூட இல்லை. வாணிகமுறைக் கடிதம் எதுவுமில்லை. (இவர் தம் கைப்பட எழுதிய எழுத்து ஒரு வரியையாவது தாங்கள் பார்த்ததாக இவர் வரலாற்றை முதலில் எழுதிய எழுத்தாளர்களில் ஒருவர்கூடக் குறிப்பிடவில்லை). சான்றுகளிலிருந்து கணிக்கும்போது, சேக்ஸ்பியர் ஓர் எழுத்தாளராக இருந்ததில்லை என்பது மட்டுமன்றி, அவர் மிகக் குறைந்த கல்வியறியுடையவராக அல்லது அறவே எழுத்தறிவற்றவராகக் கூட இருந்திருக்கலாம் என்றே தோன்றுகிறது!

**வியப்புக்கள் தொடரும்...**

---

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ! வணக்கம்.

என்னதான் அக்கறையெடுத்து நாம ஏற்றுக் கொண்ட பணிகளைச் செய்து முடித்தாலும் எங்கட மனசாட்சி கேட்கிற சில கேள்விகளுக்குப் பதில் தேடுற தெண்டது கஷ்டமான காரியமாகத்தான் இருக்கு. இண்டைக்கு என்ர மனச்சாட்சி என்னைக் கேட்ட கேள்விகளையும், நான் தட்டுத் தடுமாறிப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறதையும் ஒருக்காப் பாருங்கோ. உங்கட மனசாட்சியும் என்னென்ன கேட்குது எண்டது உங்களுக்குத் தெரியும்.

***ம.சா.** :- மிஸ்டர் கா.பூ. மற்றவையின்ர கேள்வி கேக்கிறது சுலபமா அல்லாட்டில் பதில் சொல்லிறது சுலபமா?*

**கா.பூ.** :- சந்தேகமில்லாமல், கேள்வி கேக்கிறது தான் சுலபம்.

***ம.சா.** :- இதுவரைக்கும் யாரும் கேள்வி கேட்டு நீர் பதில் சொல்லியிருக்கிறீரா?*

**கா.பூ.** :- இதுவரைக்கும் இல்லை. இப்போதுதான் அந்தத் துன்பியல் சம்பவம் நடந்து கொண்டிருக்கு.

***ம.சா.** :- துன்பியல் சம்பவம் எண்டதுக்கு விளக்கம் தர முடியுமா?*

**கா.பூ.** :- அது வந்து...தானே ஒருவரைக் கொலைசெய்து விட்டு வருந்திற மாதிரிக் காட்டிக் கொள்ளுறதெண்டும் அர்த்தப்படும்.

***ம.சா.** :- ஓ.கே. இயக்கம் தங்கட அவசரத் தேவைக்காக கடல்வழிப் பயணம் கிழக்குக்கு மேற்கொண்டதாக சொல்கிறதே, அதுபற்றி என்ன நினைக்கிறீர்?*

**கா.பூ.** :- ஓம்... சமாதானமெண்டது ஒரு அவசரமான பிரச்சினையில்லையெண்டதையும் மக்களின்ர இயல்பு வாழ்வு அவ்வளவு அவசரமில்லையெண்டதையும் தான் உந்தப் பயணம் காட்டுது.

***ம.சா.** :- ஏன் அப்புடிச் சொல்றீர்?*

**கா.பூ.** :- ஓ...பின்ன விமானம் கேட்டும், கப்பல் கேட்டும் காலதாமதம் செய்து கொண்டு பேச்சுவார்த்தையை இழுத்து அடிச்சவை தங்கட அவசரமெண்டதும் சுளிச்சுக் கொண்டு போட்டு வந்திட்டினமே.

***ம.சா.** :- ஓ.கே... தற்போது நாட்டில சமாதானமா - யுத்தமா நடக்குது?*

**கா.பூ.** :- சுருதி சுத்தமான யுத்தம் தான் நடக்குது.

***ம.சா.** :- எப்புடி அப்புடி உறுதியாச் சொல்றீர்?*

**கா.பூ.** :- ஒரு தாக்குதல் - அதுக்கு எதிர்த் தாக்குதல், திடீர்த் தாக்குதல், ஷெல் தாக்குதல், கன்போட் தாக்குதல், விமானத் தாக்குதல், சினைப்பர் தாக்குதல், கிளைமோர் தாக்குதல், கைக்குண்டு தாக்குதல், நேரடித் தாக்குதல், மறைமுகத் தாக்குதல் உப்பிடி யுத்த காலத்துத் தாக்குதல் அத்தனையும் சீராக நடந்து கொண்டிருக்கு. ஒரு நாளைக்கு அஞ்சுக்கும் பத்துக்கு மிடையிலானவை படுகொலை செய்யப்படுகினம். காயமடைகினம். உது போதாதா?

***ம.சா.** :- போதும்...போதும்.. உதயன் பத்திரிகை அலுவலகத்தில இடம் பெற்ற தாக்குதலில கொல்லப் பட்டவைக்கும், காயப்பட்டவைக்கும் இயக்கத் தலைவர் நஷ்டஈடு வழங்கப் போறாராமே?*

**கா.பூ** :- முறைப்படிப் பாத்தால் மரணமான ரெண்டு பேருக்கும் நாட்டுப்பற்றாளரோ, தேசப்பற்றாளரோ கொடுத்திருக்க வேணும். அதுக்குப் பதிலாகத்தானாக்கும் பணம் கொடுக்கினம். அப்புடியெண்டால் திருகோணமலையில அவை வச்ச கிளைமோர் தாக்குதலில ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர், ஒரு ஆட்டோக்காரர் எண்டு செத்திச்சினமே, வவுனியாவில அவை தாக்குதல் நடத்தினதில பத்துப் பேர் காயப்பட்டிச்சினமே. அவைக்கு ஏன் ஒரு நஷ்ட ஈடும் கொடுக்கயில்லை?

***ம.சா.** :- பாத்தீரே, உம்முடைய விளையாட்டைக் காட்டிப் போட்டீரே. கடைசியில பதில் சொல்லுமாப்போல என்னிட்டையே கேள்வி கேக்கிறீரே?*

**கா.பூ.** :- ஓ...ஐ யேம். சொரி... அது பழக்க தோசம். கோவிச்சுக் கொள்ளாதீங்கோ.

***ம.சா.** :- சரி, பரவாயில்லை. எதிர்க்கட்சியான யூ.என்.பி., பயங்கரவாதத்தை அழிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தால் தமது ஆதரவு உண்டு என்று கூறியுள்ளதே?*

**கா.பூ.** :- உது சுத்தி வளைப்பு தெரியுமோ. பயங்கரவாதிகள் புலிகள் எண்டால் புலிகளை அழிக்க தங்கட ஆதரவு உண்டு எண்டு ஓப்பினாச் சொல்லாமல் சொல்லியிருக்கினம். உது ஒரு கேள்வியெண்டு கேட்கிறீர்?

***ம.சா.** :- சரி, கா.பூ. நீர் திடீரெண்டு இந்த நாட்டுக்கு ஜனாதிபதியானால் என்ன செய்வீர்?*

**கா.பூ.** :- ஆஹா...ஆஹா... நினைச்சுப் பாக்கவே மஜா...மஜாவா இருக்கு. எங்க உது நடக்கப் போகுது. அது ஒரு பக்கமிருக்கட்டும்.

முதலில இயக்கத்தின்ர பகுதிக்கும் அரசின்ர பகுதிக்குமான பாதைகளை மூடுவன். தாக்குதல் ஏதும் நடக்கும் வரைக்கும் சமாதானம் பேச முடியாதெண்டு முன்னம் இஸ்ரேல் பாலஸ்தீனத்துக்கு சொன்ன மாதிரி சொல்லுவன்.

பேச்சுக்கு இயக்கம் வந்தால் அரச தரப்பு பேச்சுக் குழுவில் முக்கியமான கட்சிகளின் முக்கியஸ்தர்களை பிரதிநிதிகளாகப் போடுவன். முக்கியமாப் பேச்சு நாட்டுக்குள்ளேயே நடக்க வேணுமெண்டு கேட்பன். உந்த ஹெலி, புலி விளையாட்டெல்லாம் இருக்காதபடி பாத்துக் கொள்வன். அப்புடி நடக்கிற பேச்சை நேரடியா ஊடகங்கள் ஒலி, ஒளிபரப்பு செய்யும்படி செய்வன். முடியுமான வரைக்கும் இரகசியமாக இருக்காமல் மக்களுக்கு தெரியும்படியாக பேச்சுக்கள் நடைபெறுவதை உறுதி செய்வன்.

மக்களுக்கு சேவை செய்யாத வெறும் அறிக்கை மட்டும் விட்டுக் கொண்டிருக்கும் எம்.பி.க்களையும், ஏனைய அரசாங்கப் பிரதிநிதிகளையும் மூன்று மாதகால அவதானிப்புக்குப் பிறகு அந்தப் பதவிகளிலிருந்து தூக்கிப் போடுவன்.

***ம.சா.** :- ஓ...ஸ்டொப்..ஸ்டொப்...விட்டா ஓவராப் போறீரே... நல்ல காலம். உமக்கு ஜென்மத்தில அந்தப் பதவி கிடைக்காது.*

**கா.பூ.** :- கிடைக்காட்டில் கவலையில்லை. கிடைச்சால் நீர்தான் என்ர ஆலோசகர். ஓகேயோ....

***ம.சா.** :- அதை நீரே தர வேணும்? ஓட்டமெட்டிக்கா அது கிடைக்கும். இண்டைக்கு கடைசியா ஒரு கேள்வி? - நான் கேள்வி கேட்டது சரிதான் எண்டு நினைக்கிறீரோ?*

**கா.பூ.** :- யெஸ் - அது சரிதான் என்ன. உன்ன மாதிரி மனசாட்சி எல்லார்கிட்டையும் கேள்வி கேக்குதா எண்டதுதான் எனக்கு சந்தேகமாக் கிடக்கு. கொஞ்சப் பேர் மனசாட்சியே இல்லாம கொலையும் குடித்தனமுமாக வாழினமே....

***ம.சா.** :- ஹா...ஹா...ஹா...அவை மனசாட்சி இல்லாதவை எண்டு நீர் நினைக்கிறீர். நான் நினைக்கிறன் - அவைக்கு மனசே இல்லையெண்டு.*

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

---

# இந்த வாரம் உங்கள் பலன்

(11.05.2006 தொடங்கி 17.05.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மேடம் - சூரியன், புதன். மிதுனம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது. துலாம் - வியாழன். மீனம் - வெள்ளி, இராகு.
சந்திரன் துலாம், விருட்சிகம், தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் கஷ்டம், செலவு மிகுதி, பெரியோர் உதவி, இனசனப் பகை, வெளியிட வாழ்க்கை, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 01.

**இடபம் :** (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி, பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, உறவினர் பகை, குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 07.

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, மனக்குறை நீங்கும், தூர இடப்பயணம், செலவுமிகுதி, புதிய முயற்சி, குடும்பக் கலகம், உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 02.

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும், உறவினர் உதவி, வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம், குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 01.

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் மேன்மை, பொருள் வரவு, பெரியோர் சகாயம், இனசன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, குடும்பப் பாரம், உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 05.

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், பணவரவு, இனசன மகிழ்ச்சி, குடும்பச் சகாயம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04.

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் பகை, மனக்கலக்கம், பொருள் விரயம், பெரியோர் பகை, தேகசுகக் கஷ்டம், வெளியிட வாழ்க்கை, உத்தியோக மாற்றம், மனமகிழ்ச்சி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 02.

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மந்தம், மனக் கலக்கம், வெளியார் தொல்லை, தூர இடப்பயணம், உறவினர் உதவி, குடும்ப சுகம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்.
**அதிர்ஷ்ட இலக்கம் ;-** 03.

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் மாற்றம், செலவு மிகுதி, மனக்குறை நீங்கும், பிரயாணக் கஷ்டம், அந்நியர் சகாயம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 07.

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் அலைச்சல், காரிய கெடுதி, பணச்செலவு, தேகசுகக் கஷ்டம், வெளியிட வாழ்க்கை, உத்தியோக நன்மை, புதிய பதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 06.

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் மேன்மை, பணவரவு, காரியானுகூலம், இனசன மகிழ்ச்சி, குடும்பக் கஷ்டம், உத்தியோக உயர்ச்சி, பதவி மாற் றம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 01.

**மீனம் :** (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் மந்தம், எதிர்பாரா செலவு, மனக் குழப்பம், பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், குடும்பத் தொல்லை, தூர இடப்பயணம், உத்தியோகச் சிரமம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04.

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின்
உணர்வுகள்
கருத்துக்களாய் கதைகளாய்....
செய்திகளாய்...
நமது காதுகளில்


கிழக்கு மாகாணம் 107.9, 104.6
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## மிதக்கும் நகரம்

**டைட்டானிக்** கப்பல் மூழ்கியபின் சொகுசு கப்பல்கள் கடலில் வலம்வர அஞ்சுகின்றன என்பது உண்மைதான். ஆயினும், இங்குள்ள கப்பலோ, எதற்கும் அஞ்சாமல் தனது பயணத்தை வெற்றிகரமாக 2003 முதல் நடத்திக் கொண்டிருக்கிறது. மியாமிக் கடற்கரையோரத்தில் இருக்கும் இயற்கை அழகுகளைக் கண்டு இரசிப்பதற்காக இந்த உல்லாசக் கப்பல் வீசேடமாக தயாரிக்கப்பட்டதாம். கிட்டத்தட்ட 1,28,000 அறைகளைக் கொண்ட இச் சொகுசு கப்பல்களில் 77 சிறிய உயிர்க் காக்கும் படகுகளையும் கொண்டு செல்லலாமாம். காணிவேல் எனப்படும் உலகில் மிகப்பெரிய சொகுசு கப்பல் நிறுவனம் இக் கப்பலையும் கட்டி, பிரின்சஸ் எனப் பெயர் வைத்துள்ளது. இக் கப்பலில் செல்வதற்காக உல்லாசப் பயணிகள் முண்டியடிப்பது பெரும் ஆச்சரியத்திற்குரிய விடயமே.



## விஷ விளையாட்டு

**குளியலறையை** எது எதற்கெல்லாம் பங்கிட்டுக் கொள்வது என்று விவஸ்தை இல்லாமல் போய்விட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த ரோசி ரெயினோல்ஸ் என்பவருக்கு. இவர் தனது குளியலறைக் கோப்பையினை 75 உயிருள்ள ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த விஷப் பாம்புகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். இச் சாதனை கின்னஸ் புத்தகத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.



## விலையோ விலை!

**மனிதத்** தேவைகளுக்கு அப்பாற்பட்ட வேலைகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக ஜப்பானியர்கள் தமது மூளையை நன்றாகக் கசக்கிப் பிழிந்து ரொபோக்களை தயாரித்து வருகின்றனர். படத்தில் உள்ளதும் ஒரு வகை ரோபோவே.


ஆயினும் விலை கூடிய ரொபோ. கிட்டத்தட்ட 44,800 அமெரிக்க டொலர் (4 கோடியே 48 இலட்சம் நம்மூர் மதிப்பில்) பெறுமதியுள்ளதாம். அப்படியென்ன இவ்வளவு விலை என்றால், இவ் ரொபோ மனிதர் போல ஓடியாடி வேலை செய்வதுடன் மனிதர்களுக்கே கட்டளைகளை பிறப்பிக்கக் கூடியதாம். 82 நிறையுடைய இவ் ரொபோ 1.2 மீற்றர் (4 அடி) உயரமுடையதும் குறிப்பிடத்தக்கது.

## பனிப் பரிசு


**ஏதாவதொரு** விளையாட்டிலோ அல்லது தனது சாகசத்தாலோ, சாதனைகள் புரிவது மேலை நாட்டவரின் வழக்கமாகி விட்டது. இங்குள்ள பெண்மணியும் இப்பட்டியலைச் சேர்ந்தவரே. இவர் பனிச் சறுக்குப் போட்டிகளில் அதிகூடியளவு ஸலோன் பட்டத்தை வென்றவராம். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கரீன் ரூபி எனப்படும் இவர், 20 தடவை ஸலோன் பட்டத்தை வென்றதுடன். பெண்கள் பிரிவில் இவர்தான் அதிக தடவை இப்பட்டத்தை வென்றவராம். ஆண்கள் பிரிவில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மெத்தியூ என்பவர் கூட 6 தடவைகள் மட்டுமே இப் பட்டத்தை வென்றாராம். எல்லா இடத்திலும் பெண்கள் முதலிடம் வகிக்கிறார்கள் போல...




## பார்க்க மட்டும்







## பாரமும், வேகமும்

**பாரத்தைத்** தூக்கிக் கொண்டு எம்மால் மட்டுமல்ல, வாகனங்கள் கூட மிக வேகமாகச் செல்லமுடியாது என்பது உண்மைதான். ஆனால் இங்குள்ள வாகனமானது அமெரிக்க நாட்டில் தயாரிக்கப்பட்டது. 7300 சி.சி.உடைய இவ் வாகனம் கிட்டத்தட்ட 6577 கிலோ கிராம் சுமந்து அதே வேகத்தில் செல்லக்கூடியதாகும். அத்துடன் இதன் நீளம் 6.5 மீற்றர் (21 அடி). உயரம் 2.7 மீற்றர் (9 அடி). இவ் வாகனத்தைச் செலுத்துவதற்கு வீசேட அனுமதிப் பத்திரமும் தேவையில்லையாம். சாதாரண அனுமதிப்பத்திரமே போதுமானது. அதி கூடிய பீக்கப் கொண்ட இவ் வாகனம் இன்னும் சந்தைக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

